October 2018

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

இதமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

October 2018 சுவடி — 8 ஓலை — 8

## வணக்கம் பல

மாற்றம் ஒன்றே உலக நிகழ்வுகளில் பொதுவானதும், அரிதானதும், தவிர்த்திருக்க வேண்டியதும், தவிர்க்கவே முடியாததுமான பல்வேறு வடிவங்களில் வருவதுமாகும்!

இயற்கையாக இருந்தாலும், செயற்கையாக இருந்தாலும் மாற்றம் என்பது பொதுவான அச்சாக நின்று சுழல்வதால்தான், புவியியல் மாற்றங்களும், அரசியல் மாற்றங்களும், கலாச்சார பண்பாட்டு மாற்றங்களும், உலக பழக்கவழக்கங்களும், மொழியியல் கொள்கைகளும் மனித மனத்தின் மாற்றங்களால் புது வடிவம் கொள்கின்றன.

இந்த அடிப்படை அச்சின் விளைவால்தான் தலைமுறைக்கு தலைமுறை இடைவெளி எழுகிறது. முந்தைய தலைமுறை, மாற்றத்தின் அறுவடைக் கதிர் என்றால், பிந்தைய தலைமுறை மாற்றத்தின் புது நாற்று! நிகழ்ந்துவரும் மாற்றங்களில், சமீபத்திய அரசியல் மாற்றங்களாக மாலத்தீவு மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் நிகழ்ந்துள்ள வரவேற்கத்தக்க அரசியல் மாற்றங்கள் குறிப்பிடத்தக்கவை. சீனாவுக்கு ஆதரவான நிலைப்பாடு எடுத்திருந்த காரணத்தால், பல நாடுகளின் அதிருப்தியைப் பெற்றிருந்த மாலத்தீவில், புதிய அரசியல் தலைவர் உருவெடுத்திருப்பதும், தீவிரவாத கொள்கைகளுக்கு உடந்தையாக செயல்பட்டு வரும் பாகிஸ்தானில் விளையாட்டு அனுபவமே பெற்ற புதிய அரசியல் தலைவர் உருவெடுத்திருப்பதும், உலக நாடுகளின் பார்வைக்கு கிடைத்திருக்கும் நல்ல செய்தியாகும்! இரு நாட்டு மக்களுக்கும் நல்ல பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதே நமது எதிர்பார்ப்பு! மாற்றங்களால் உருவெடுத்தவர்கள், ஏமாற்றம் அளிக்காமல் இருக்க வேண்டும். அதற்கு மாறாக இருப்பின் மீண்டும் மாற்றம் நிகழும் என்பதை காலம் வருங்காலங்களில் காட்டும்!

பெரும்பாலும் செயல்பாடுகளால் நிகழ்வது மாற்றம் என்றாலும், செயல்பாடற்ற தன்மையும் கூட பல மாற்றங்களை ஏற்படுத்த வல்லது. அறிவுஜீவிகள் அல்லவைகளுக்கு எதிராக குரல் கொடுக்காமல் இருந்தால் நல்லவைகள் நலிந்துவிடும்! நல்லவைகள் நலிந்துவிட்டால், நாடு நலம் குறைந்துவிடும்!

அறிவுஜீவிகளின் மௌனம், நீர் ஆதாரப் பயன்பாடுகள் குறித்த விழிப்புணர்வுச் செய்திகளையும், நல்ல பல ஆக்கங்களையும், சுமந்தபடி மலர்கிற நமது 'அய் தமிழ்' வழமைபோல வாசகர்களுக்கு விருந்து படைக்க வருகிறது. வரவேற்று மகிழுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...

நல்லதே நடக்கும் நம்புவோம்!
நிம்மதியாக வாழ விடுங்கள்
ஆட்டிப் படைக்கும் அறிவு
வாழ்வாங்கு வாழ்வான்
அன்புடன் லண்டன்
அறிவோம் தமிழர் பெருமை
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
சிவகாமியின் சபதம்
இயற்கை இயக்கம்
மருத்துவ தமிழ்
ஏட்டுச் சுரைக்காய்



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

# நல்லதே

## குடிமைப் பணிகளில் சீர்திருத்தம் கொண்டுவரும் இம்ரான் கான்

வாழ்க்கையே விளையாட்டு என்பது பழமொழி! விளையாட்டு வீரர் ஒருவரே நாட்டின் பிரதமர் ஆகலாம் என்பது புதுமொழி! அப்படி ஒரு புதிய சாதனையைப் படைத்திருக்கிறார் பாகிஸ்தானின் கிரிக்கெட் விளையாட்டு வீரர் இம்ரான் கான்.

இம்ரான் கான் நியாசி பாக்கித்தானின் 19வது பிரதமர், 22ஆவது தலைமை அமைச்சர் மற்றும் முன்னாள் துடுப்பாட்டக்காரர் ஆவார். இவர் பாக்கித்தான் தெஹ்ரீக்—எ—இன்சாஃப் எனும் அரசியல் கட்சியின் தலைவராக உள்ளார். மேலும் பாக்கித்தான் அமைச்சரவையில் இருந்துள்ளார். இவர் அரசியல் கட்சி துவங்குவதற்கு முன்பு 20—ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுமார் இருபது ஆண்டுகாலம் இவர் பாக்கித்தான் அணிக்காக தேர்வுத் துடுப்பாட்டம் மற்றும் ஒருநாள் பன்னாட்டுத் துடுப்பாட்டப் போட்டிகளில் விளையாடியுள்ளார். 1971 முதல் 1992 வரை பாகிஸ்தான் அணி சார்பாக ஆடிய இம்ரான் கான் ஒரு சிறந்த சகலதுறை ஆட்டக்காரர். துடுப்பாட்டத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் லாகூரில் ஒரு புற்றுநோய் வைத்தியசாலை அமைத்துள்ளார்.



## இளமைக் காலம்

இம்ரான் கான் பஷ்தூன் மரபைச் சேர்ந்தவர் ஆவார். இவர் நவம்பர் 25, 1952 இல் லாகூர், பஞ்சாபில் பிறந்தார். இவர் வோர்செஸ்டர் மற்றும் ஆக்சுபோர்டில் உள்ள கெப்ளி கல்லூரியிலும் பயின்றார். தனது 13 ஆம் வயது முதல் துடுப்பாட்டம் விளையாடி வருகிறார். முதலில் தனது கல்லூரி அணிக்காக விளையாடி இவர் பின் வோர்செஸ்டர்ஷயர் துடுப்பாட்ட சங்கத்திற்காக விளையாடினார். 1971 ஆம் ஆண்டில் பிர்மின்ஹாமில் நடைபெற்ற போட்டியில் தனது

# நடக்கும்

## நம்புவோம் !

*18 ஆம் வயதில் பாக்கித்தான் அணிக்காக விளையாடினார். ஆக்சுபோர்டுவில் பயின்றபிறகு இவர் 1976 ஆம் ஆண்டில் பாக்கித்தான் தேசிய அணியில் இடம்பிடித்தார்.இவர் 1982 முதல் 1992 ஆம் ஆண்டு வரையில் தலைவராக இருந்துள்ளார். 1992 இல் பாகிஸ்தான் உலகக் கிண்ணம் வென்றபோது அணித் தலைவராக இருந்தார் ஆண்டில் லாகூரில் 25 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் தனது தாயின் நினைவாக புற்றுநோயியல் மருத்துவமனை ஒன்றைத் துவங்கினார். பின் பெசாவரில் இரண்டாவது மருத்துவமனை ஒன்றைத் துவங்கினார். தனது ஓய்விற்குப் பிறகு பிராட்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக வேந்தராகவும் , வள்ளலாகவும், துடுப்பாட்ட வர்ணனையாளராகவும் இருந்தார்.*



*இவர் 1992 ஆம் ஆண்டில் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றார். 362 தேர்வுத் துடுப்பாட்டப் போட்டிகளில் விளையடி இவர் 3,807 ஓட்டங்கள் எடுத்தார். அனைத்துக் காலத்திற்குமான சிறந்த சகலத்துறையர்களில் ஒருவராக அறியப்படுகிறார். 2010 ஆம் ஆண்டின் பன்னாட்டுத் துடுப்பாட்ட அவையின் ஹால் ஆஃப் ஃபேமாக தெரிந்தெடுக்கப்பட்டார். 1991 ஆம்*

### சர்வதேச போட்டிகள்

*1971 ஆம் ஆண்டில் எட்ஜ்பஸ்டனில் நடைபெற்ற இங்கிலாந்து துடுப்பாட்ட அணிக்கு எதிரான தேர்வுத் துடுப்பாட்டப் போட்டியில் இவர் அறிமுகமானார். பின் புருடென்சியல் கோப்பைத் தொடரில் இதே அணிக்கு எதிரான ஒருநாள் பன்னாட்டுத் துடுப்பாட்டப் போட்டிகளில் இவர்*

அறிமுகமானார். ஆக்சுபோர்டுவில் பயின்றபிறகு இவர் 1976 ஆம் ஆண்டில் பாக்கித்தான் தேசிய அணியில் நிலையான இடம்பிடித்தார். 1976—1977 ஆம் ஆண்டுகளில் இவர் நியூசிலாந்து துடுப்பாட்ட அணி மற்றும் ஆத்திரேலியத் துடுப்பாட்ட அணிக்கு எதிரான தொடரில் விளையாடும் வாய்ப்பினைப் பெற்றார்.

லீக்—நவாஸ் பிரிவின் பிரதமர் வேட்பாளர் ஷாபாஸ் ஷெரீஃப் 96 வாக்குகளை மட்டுமே பெற்றார். சபாநாயகர் முடிவை அறிவித்தபோது, நாடாளுமன்றத்தில் 'ஏற்றுக்கொள்ள முடியாதது' என்ற முழக்கங்கள் எழுந்தன.

நாட்டில் அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடி மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு




இடையில், இம்ரான்கான் பதவியேற்றிருக்கிறார்.

## சாதனைகள்

அனைத்துக் காலத்திற்குமான சிறந்த விரைவு வீச்சாளர்களில் ஒருவராக இம்ரான் கான் திகழ்கிறார் என பிபிசி தெரிவித்தது. ஈஎஸ்பிஎன் நிறுவனத்தின் தரவரிசையில் அனைத்துக் காலத்திற்குமான சிறந்த சகலத்துறையர்களின் வரிசையில் சோபர்ஸ்க்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தைப் பிடித்தார்

கிரிக்கெட் வீரராக இருந்து அரசியல்வாதியாக மாறிய இம்ரான் கான், பாகிஸ்தானின் 22வது பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தானின் மிகப்பெரிய கட்சியாக உருவெடுத்திருக்கும் இம்ரான்கானின் பி.டி.ஐ கட்சி, சிறிய கட்சிகளின் ஆதரவுடன் நாடாளுமன்றத்தில் மொத்தம் 176 வாக்குகளை பெற்றது.

எதிர்கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம்

பாகிஸ்தான் பிரதமராக பொறுப்பேற்றுள்ள முன்னாள் கிரிக்கெட் வீரரும், தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி தலைவருமான இம்ரான் கான், பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஆடம்பரமான பிரதமர் மாளிகையில் தங்காமல் தனது சொந்த வருமானத்தில் கட்டிய வீட்டில் வாழ்ந்துவரும் இம்ரான் கான், மந்திரிகள் மற்றும் அரசு உயரதிகாரிகள் பயன்படுத்தி வந்த சொகுசு கார்களை விற்று அந்த பணத்தை அரசு கருவூலத்தில் சேர்க்குமாறு உத்தரவிட்டிருந்தார். வெளிநாடுகளில் இருந்து உயர்ரக கார்கள், செல்போன் மற்றும் அழகு சாதனங்கள் இறக்குமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், முன்னாள் பிரதமர் அப்பாசியின் தவறான திட்டங்களாலும் வைத்துச் சென்ற கடன்

சுமையாலும் அரசு நிர்வாகத்தை நடத்த பணம் இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள இம்ரான் கான், அரசாங்கமும் நாட்டு மக்களும் ஒன்றாக இணைந்து செயல்பட்டால் நம்மால் எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



இஸ்லாமாபாத் நகரில் உயரதிகாரிகளிடையே பேசிய இம்ரான் கான், பாகிஸ்தான் கடன் சுமையில் மூழ்கி கிடப்பதாக தெரிவித்தார். நமது அரசியல்வாதிகள் மாற வேண்டும். அதிகாரிகள் மற்றும் மக்களின் மனப்போக்கும் மாற வேண்டும். மிக இக்கட்டான காலகட்டத்தை நோக்கி சென்று கொண்டுள்ள நாம் இனியும் மாறாமல் போனால் மிகப்பெரிய பேரழிவை சந்திக்க நேரிடும் எனவும் அவர் எச்சரித்தார்.

சமீபத்தில் தனக்கு தெரிவிக்கப்பட்ட நாட்டின் நிதி நிலவரம் அதிர்ச்சி அடைய வைத்துள்ளதாக கூறிய அவர், வெளிநாடுகளில் இருந்து பாகிஸ்தான் வாங்கிய கடனுக்கான வட்டியாக மட்டும் ஆண்டுதோறும் 600 கோடி ரூபாய் சென்று கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

பாகிஸ்தான் பிரதமராக பி.டி.ஐ (தெஹ்ரீக் இ— இன்சாப்) கட்சித் தலைவர் இம்ரான் கான் பதவியேற்றிருக்கும் நிலையில், அவரது வெற்றியின் பின்னணி குறித்து விவாதங்கள் நடந்துவருகின்றன. இதுவரை பாகிஸ்தான் வரலாற்றில் இடம்பெற்ற மிக மோசடியான தேர்தல் இது என்று ஊடகங்கள் வர்ணிக்கின்றன. "அதிகாரங்களின் கைகளிலேயே நீதி தங்கியுள்ளது அதனை மக்களிடம் கொண்டுவர வேண்டும்" என்றெல்லாம் பிரச்சாரம் செய்த இம்ரான் கான் ராணுவ அதிகாரத்தின் துணையுடனேயே ஆட்சிக்கு வந்துள்ளதாக விமர்சிக்கப்படுகிறது. பல அடுக்குகளைக் கொண்ட விவகாரம் இது.

நவாஸ் ஷெரீப் லண்டனில் சொத்து வாங்கியது தொடர்பான ஊழல் குற்றச்சாட்டை விசாரணை செய்து, அவர் ஊழல் செய்ததாக நிரூபித்து அவரைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கியது பாகிஸ்தான் நீதிமன்றம். தேர்தலில் நிற்பதற்குத் தடை விதித்துள்ளதோடு மட்டுமல்லாமல், அவருக்கு சிறைத் தண்டனையும் வழங்கியுள்ளது. ராணுவத்துடன் மோதல் போக்கை நவாஸ் ஷெரீப் கடைப்பிடித்தது குறிப்பிடத்தக்கது. பி.டி.ஐ. அல்லாத பிற கட்சி வேட்பாளர்களது வேட்பு மனுக்களை ஏற்றுக்கொள்ளாமல் வேண்டுமென்றே இழுத்தடிப்புச் செய்தது தேர்தல் ஆணையம். மேலும் வேட்பாளர்களைக் குறி வைத்து குண்டுத் தாக்குதல்களும் நடந்தன. டான், ஜங் உள்ளிட்ட முன்னணி பத்திரிகைகளின் விநியோகம் முடக்கப்பட்டது, செய்தித் தொலைக்காட்சிகள் முடக்கப்பட்டன. பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மிரட்டப்பட்டனர்.

மொத்தத்தில், இம்ரான் கானுக்கு எதிராகக் களமிறங்கியவர்களை அச்சுறுத்தும் நோக்கில் ராணுவம், ஐ.எஸ்.ஐ, நீதிமன்றம் ஆகியன ஒன்றிணைந்து பல்வேறு ஒடுக்குமுறைகளை மேற்கொண்டன. வாக்குப்பதிவின்போதும்




அடக்குமுறை தொடர்ந்தது. சில வாக்குச்சாவடி நிலையங்களுக்குள் பத்திரிகையாளர்கள் செல்வதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. ராணுவ அதிகாரத்தின் துணையுடன் ஆட்சிக்கு வந்திருக்கும் இம்ரான் கான் மக்கள் நலனை விட ராணுவத்தின் நலனுக்கே முக்கியத்துவம் கொடுப்பார் எனும் அச்சமும் எழுந்திருக்கிறது.

பாகிஸ்தான் வரலாற்றை அறிந்தவர்கள் அந்நாட்டின் ராணுவம் கொண்டிருக்கும் வானளாவிய அதிகாரத்தையும் தெரிந்துவைத்திருப்பார்கள். பாகிஸ்தானின் அதிகாரமானது ஜனநாயகரீதியிலான அரசின் கையிலும் ராணுவத்தின் கையிலும் மாறி மாறிச் சென்றிருக்கின்றன. 35 வருடங்களுக்கு மேலாக நேரடியான ராணுவ ஆட்சியில் இருந்தது பாகிஸ்தான். மீதம் உள்ள ஆண்டுகளிலும் ராணுவத்தின் மறைமுக ஆட்சி இருந்தது வேறு விஷயம். பொதுவாக, ஒரு நாட்டில், அரசு நிறுவனங்களையும் ராணுவத்தையும் அரசே கட்டுபடுத்தும். பாகிஸ்தானில் கதையே வேறு. நாட்டின் மொத்த உற்பத்தித் துறையின் மூன்றில் ஒரு பங்கை ராணுவம் கட்டுப்படுத்துகிறது.

ராணுவத் துறையிலுள்ள தனியார் சொத்துக்களின் பெறுமதி 20 பில்லியன் டாலர்களாகும். மிகப் பெரும் உற்பத்தி நிறுவனங்கள், பேக்கரிகள், பல் பொருள் அங்காடிகள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், கோல்ப் மைதானங்கள் என்பன பாகிஸ்தானிய ராணுவத்தினரின் கட்டுப்பாடின் கீழேயே உள்ளன. பல ராணுவ அதிகாரிகள் பில்லியனர்கள். ஒரு புறம் வறுமை, ஊழல், வேலையில்லாப் பிரச்சினை தலைவிரித்தாடுகிறது. மறுபுறம் இராணுவ அதிகாரிகள் செல்வச் செழிப்பில் மிதக்கின்றனர்.

இந்நிலையில் பாகிஸ்தான் பிரதமராக பொறுப்பேற்றிருக்கும் இம்ரான் கான், அந்நாட்டின் புதிய அரசை எப்படிக் கையாள்வது என்று பல்வேறு தரப்பிலிருந்தும் பேசத் தொடங்கியுள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமராக இம்ரான் கான் பொறுப்பேற்ற நாள்முதலே பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள நாட்டை மீட்டெடுப்பதற்காக ஜனாதிபதி, பிரதமர், தலைமை நீதிபதி, முதலமைச்சர்கள் உள்ளிட்ட முக்கிய உயர் அதிகாரிகள் முதல் வகுப்பு விமானத்தில் பணிக்கத் தடை விதித்தார். அதோடு, பிரதமர் பயன்படுத்தும் சொகுசு கார்களை ஏலம் விடுவதற்கும் முடிவு செய்து, அதற்கான அறிவிப்பையும் வெளியிட்டார். இதற்கிடையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரளாவுக்கு உதவ பாகிஸ்தான் தயார் என அறிவித்தார். இந்த அறிவிப்பு பலரின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது.

குடிமைப் பணிகளில் சீர்திருத்தம் கொண்டுவரும் பிரதமர் இம்ரான் கானின் முடிவு துணிச்சலானது; இந்தத் தருணத்தில் மிகவும் அவசியமானதும்கூட. சமீபத்தில், இஸ்லாமாபாதில் அதிகாரவர்க்கத்தினர் மத்தியில் உரையாற்றிய இம்ரான், அதிகார வர்க்கத்தின் ஆதரவைக் கோரியதுடன், பொறுப்புடைமை என்ற பெயரில் வேட்டையாடப்படுவதிலிருந்து அதிகாரிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இவ்விஷயத்தில் தனது அரசு என்ன மாதிரியான மாற்றங்களைக் கொண்டுவரப்போகிறது என்பதை அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றாலும், இந்தச் சீர்திருத்தத்தின் பலன்கள் வெளிப்படையாகத் தெரியக் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் பிடிக்கும் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

இப்படியான நிலையில், பாதுகாப்பு மற்றும் தியாகிகள் தின விழாவில் பங்கேற்று பேசிய இம்ரான் கான், `வேறு எந்த நாடுகளும் பாகிஸ்தான் ராணுவம் போன்று பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போராடியதில்லை. இந்தப் போரில், 70,000 — க்கும் அதிகமான மக்கள் உயிரிழந்துள்ளனர். மனித உயிர் இழப்புகளைக் காட்டிலும், பொருளாதாரத்தில் பாகிஸ்தான் சந்தித்த இழப்புகள் அதிகமாக உள்ளது. பாகிஸ்தானில் தேவையான அனைத்து வளங்களும் உள்ளன. சிறந்த கனிம வளங்கள் நிறைந்த நாடாகப் பாகிஸ்தான் இருக்கின்றது. நான்கு காலநிலை பருவங்களை வைத்துள்ளோம். ஆகையால், இதைப் பயன்படுத்தி சிறப்பாகவும் நேர்மையாகவும் செயல்படுவோம். மருத்துவமனை, கல்வி உள்ளிட்ட துறைகளில் அதிக முதலீடு செய்யப்படும். பாகிஸ்தான் ராணுவம் ஓர் அமைப்பு மட்டுமே. இனி வரும் காலங்களில், பிற நாடுகளுடன் பாகிஸ்தான் ராணுவம் போர் என்ற நிலைப்பாட்டைக் கையில் எடுக்காது. ஆரம்பம் முதலே இத்தகைய நிலைப்பாட்டை நான் எடுத்திருக்கிறேன்' என்றார்.



இஸ்லாமாபாத் நிகழ்ச்சியில் பேசிய இம்ரான், சிங்கப்பூர் அரசு நிர்வாக மாதிரியைப் புகழ்ந்தார். சிங்கப்பூரில் அதிகாரவர்க்கத்தினருக்கு அதிக சம்பளம் வழங்கப்படுவதாலும், அவர்களுக்கு உறுதியான பொறுப்புடைமை இருப்பதாலும், அந்நாட்டின் அரசு நிர்வாக மாதிரி சிறப்பானது என்பது இம்ரான் கானின் புரிதல். வெளிநாட்டு உதாரணங்களை வைத்து உள்நாட்டு அமைப்புகளில் மாற்றம் செய்வதில் பலன்கள் உண்டு என்றாலும், முழுமை பெறாத முன்னுதாரணங்களைத் தவிர்ப்பது நல்லது. உண்மையில், பாகிஸ்தானுக்குள்ளேயே பொதுச் சேவையில் சிறப்பாகப் பணிபுரியும் அரசு நிறுவனங்களை உதாரணம் காட்ட முடியும். லாகூர் பெஷாவர் இடையிலான வழித்தடத்தில் சிறப்பாகப் பணிபுரியும் தேசிய நெடுஞ்சாலைத் துறை மற்றும் மோட்டார் வாகனக் காவல் துறை ஓர் உதாரணம்.

அதிகாரிகளுக்குச் சம்பள உயர்வு வழங்குவதில் சில நன்மைகள் உண்டு என்றாலும், அதிகாரவர்க்க அமைப்புகளில் அளவுக்கு அதிகமானோர் இருக்கும் நிலையும் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். இல்லையென்றால், அரசுக்குப் பெருமளவிலான செலவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

சமீபகாலங்களில் குடிமைப் பணிகளில் சீர்திருத்தம் கொண்டுவருவதில் முனைப்புக் காட்டும் முதல் பிரதமர் இம்ரான் கான்தான். இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த பாகிஸ்தான் முஸ்லிம் லீக்(என்) கட்சியும், பாகிஸ்தான் மக்கள் கட்சியும் இதுதொடர்பாக அவ்வப்போது பேசுவதுடன் நிறுத்திக்கொண்டன. இந்நிலையில், குறைந்தபட்சம் இதுதொடர்பான விவாதத்தை உருவாக்கும் வகையில் அரசியல் உறுதியை இம்ரான் கான் காட்டியிருக்கிறார். அவரும் அவரது ஆலோசகர்களும் நேர்மை உணர்வுடனும் திறமையுடனும் செயலாற்றினால் ஆக்கபூர்வமான மாற்றம் சாத்தியமாகும்!

பாகிஸ்தானின் புதிய பிரதமராக இம்ரான் கான் பதவியேற்றிருக்கும் நிலையில், இந்தியா — பாகிஸ்தான் உறவில் புதிய நம்பிக்கையை விதைக்கும் வகையிலான சில சமிக்ஞைகள்

தென்படுகின்றன. இரு தரப்பு உறவை மேம்படுத்தும் விஷயத்தில் இந்தியா ஓரடி எடுத்து வைத்தால் பாகிஸ்தான் தரப்பில் ஈரடிகள் எடுத்து வைக்கப்படும் என்று இம்ரான் பேசியிருக்கிறார். அவருக்குத் தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்தார் பிரதமர் மோடி.

இம்ரானைச் சந்தித்து இந்திய கிரிக்கெட் வீரர்கள் கையெழுத்திட்ட மட்டையைப் பரிசளித்து வாழ்த்தியிருக்கிறார் பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதர். நம்பிக்கையூட்டும் இந்தப் போக்குகள் ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றால், அதற்கு வெறும் வார்த்தைகள் மட்டும் போதாது!

பாகிஸ்தானின் முந்தைய பிரதமர்கள் இந்தியாவுடன் நெருக்கம் காட்டிய தருணங்களில் அதைக் கடுமையாக விமர்சித்தவர் இம்ரான். இன்றைக்கு அவரே இந்தியாவுடனான உறவை மேம்படுத்த முன்வருகிறார் என்பது நல்ல விஷயம்.

இந்தியா — பாகிஸ்தான் இடையிலான கிரிக்கெட் போட்டிகளை மீண்டும் நடத்துவதில் இம்ரான் ஆர்வம் காட்டுகிறார். இரு நாடுகளும் ஆக்கப்பூர்வமான வகையில் ஒத்துழைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, பிரதமர் மோடி எழுதிய வாழ்த்துக் கடிதம்; முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் இறுதிச் சடங்கில் பாகிஸ்தான் அரசுக் குழுவினர் கலந்துகொண்டது போன்றவை நம்பிக்கை தரும் நடவடிக்கைகள்.

ஆனால், சம்பிரதாயமான இந்த முயற்சிகளைக் காட்டிலும், உறவை மேம்படுத்தும் விஷயத்தில் இரு நாடுகளும் கொண்டிருக்கும் சவால்கள்தான் விரிவாகப் பேசப்பட வேண்டியவை. 2015 டிசம்பரில் பாகிஸ்தானுக்குச் சென்று நவாஸ் ஷெரீபை மோடி சந்தித்த பிறகு பத்தான்கோட் விமானப்படை தளத்தில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் புகுந்து நடத்திய தாக்குதல் பாஜக தலைமையிலான மத்திய அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது. மக்களவைத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் பாகிஸ்தானுடனான உறவில் நேரடியான நடவடிக்கைகளில் மோடி இறங்குவார் என்று எதிர்பார்க்க முடியாது.

முதலில் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுக்கு அருகில் சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டும். பயங்கரவாதச் செயல்களுக்கு நிதியுதவி அளிக்கக் கூடாது என்று சர்வதேச நிதி பணிக் குழு கூறியிருப்பதை பாகிஸ்தான் அமல்படுத்தினால், பொருளாதாரத் துறையில் மீட்சியடைய வாய்ப்பு கிடைக்கும்.

பயங்கரவாதிகளுக்கு உதவிகள் அளிப்பது, பயிற்சி தந்து இந்திய எல்லைக்குள் அனுப்புவது போன்றவை நிறுத்தப்பட்டாலே பாகிஸ்தான் மீதான இந்தியர்களின் நல்லெண்ணம் அதிகரிக்கும். இந்தியத் தரப்பிலிருந்தும் துணிச்சலாக மேலும் சில முன்முயற்சிகளையும் எதிர்பார்க்க முடியும்.

நாட்டைப் புதிய வளர்ச்சிப் பணிகளில் கொண்டு செல்வதற்கான அனுபவ அறிவைக் கொண்டவராகவே பாகிஸ்தான் மக்கள் இம்ரானைப் பற்றிக் கனவு கண்டு வாக்களித்திருக்கிறார்கள் என்பதாக அரசியல் வல்லுனர்கள் கணிப்பு விடுக்கின்றனர்.

## முதல் வெளிநாட்டு பயணமாக சீனா செல்கிறார்

இம்ரான் கான் பதவியேற்றதும் சீன அதிபர், சீனாவிற்கு வரும்படி அழைப்பு விடுத்தார். அதனை ஏற்றுக்கொண்டு பயணம் மேற்கொள்கிறார் என தகவல் வெளியாகியுள்ளது. இம்ரான் கான் பயணம் செய்யும் நாட்கள் விரைவில் இறுதி செய்யப்பட உள்ளது. பாகிஸ்தான் சீனாவின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியாக மாறுகிறது என்று பார்க்கப்பட்ட நிலையில் இம்ரான் கான் ஆட்சிக்கு வந்துள்ளார். சீனாவிற்கு எதிரான நிலைபாடுகளை எடுக்கவில்லை என்றாலும் நெருக்கம் குறைப்பார் என்று பார்க்கப்பட்டது. ஆனால் ஆட்சியில் அமர்ந்த பின்னர் அவருடைய நிலைபாடு மாற்றம் கொண்டதாக தெரிகிறது என்றும் வல்லுநர்களின் கருத்தாக உள்ளது. உலக அரங்கில் பாகிஸ்தானுக்கு பயங்கரவாத விவகாரத்தில் ஆதரவு தெரிவித்து காப்பாற்றுவது சீனாதான். இப்போதும் இந்தியாவிற்கு எதிராக பயங்கரவாதிகள் அங்கு செயல்பட்டுதான் வருகிறார்கள்.

உலகம் முழுதும் உள்ள கலாசாரப் பெருமைகளையும், தேசப்பற்றையும் தனது இருகண்களெனக் கருதும் விளையாட்டு வீரர்கள் வழியில் வந்தவராக இருப்பதனால், இம்ரான் கானின் வருகையானது நிச்சயம் பாகிஸ்தான் அரசியல் உலகுக்கு பலப்பல புதிய வெளிச்சங்களைக் காட்டும் என்பது நிச்சயம்! இம்ரான் கான் தனது நாட்டு மக்களின் மனோபாவங்களில் புதிய ரத்தம் பாய்ச்சக் கூடியவர் என்பதை அவரது உரைகள் காட்டுகின்றன.

‘பிள்ளைகளைப் படிக்க வையுங்கள்’ என்று ஒற்றை வரியில் அவர் சொல்லும் செய்தி, மிகப் பெரிய கருத்துகளையும், பாகிஸ்தானுக்கான தொலைநோக்குப் பார்வையையும் முன்வைப்பதாக உலக சமாதானப் புறாக்கள் உறுதியாகக் கூறுகின்றனர்.

இம்ரான்... பாகிஸ்தானின் இருள் கிழிக்கும் விடிவெள்ளியாக விளங்கட்டும்!

# கருத்துப் ப(ா)டம்




# சொல்றாங்க... சொல்றாங்க...



"இனி எந்த நாட்டுடனும் நாங்கள் போரிடமாட்டோம்"

**இம்ரான் கான்**


(இந்த வார்த்தையைச் சொல்லக் கூட உங்க நாட்டில் இதுவரை எந்தப் பிரதமரும் நினைச்சதில்லை! வாழ்த்துக்கள்!)



"எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா கொண்டாடுவதன் மூலம் தங்களுக்கு அரசியல் ஆதாயம் தேடிக் கொள்கிறார்கள் அ.தி.மு.க அமைச்சர்கள்"

**மருத்துவர் ராமதாஸ்**


(உங்க பிறந்தநாளை உங்க மகன் கொண்டாடுவதில் மட்டும் அரசியல் லாபம் இல்லையா மருத்துவரே?)



"நவீன் பட்நாயக்கிடம் இருந்து அறிவுரைகளை பெற்றுக் கொண்டேன்"

**கமல்ஹாசன்**

(நல்ல முயற்சி! எந்த அறிவுரையையும் பெற்றுக் கொள்வதோடு விட்டுவிடாதீர்கள். பிக் பாசுக்கு விற்றுவிடாதீர்கள். நடைமுறைப்படுத்துங்கள்!



"அமெரிக்காவின் இடைக்கால தேர்தலில் தலையிட சீனா முயற்சி

**டிரம்ப்**

(ஹலோ சார், என்ன சொல்றீங்க? டிராகன் உங்களைத் துரத்துறதுன்னா சொல்றீங்க? ஹாலிவுட்டுக்கு புது கதை கிடைச்சுட்டுது சார்!

# நிம்மதியாக வாழ

## மாலத்தீவு: இந்திய–சீன மல்யுத்தக் களம்

இந்திய பெருங்கடல் பகுதியில் இந்தியாவுக்கு மிக அருகே அமைந்துள்ள குட்டித் தீவு நாடு மாலத்தீவு. கடந்த சில மாதங்களாக இங்கு அரசியல் ஸ்திரத்தன்மையற்ற சூழல் நிலவி வருகிறது. இந்த நாட்டின் அதிபராக 2013—ம் ஆண்டு முதல் அப்துல்லா யாமீன் பதவி வகித்து வருகிறார்.

எதிர்க்கட்சி தலைவர்களை சிறையில் தள்ளியது, சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளை கைது செய்ய உத்தரவிட்டது, நாட்டில் நெருக்கடி நிலையை அறிவித்தது என பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு அப்துல்லா யாமீன் ஆளானார். எதிர்க்கட்சிகள் அவருக்கு எதிராக கடுமையான போராட்டங்களை நடத்தின. இதனால் அவருக்கு செல்வாக்கு சரிந்து வருவதாக கூறப்பட்டது. அதே நேரம் சீனா அவருக்கு பகிரங்க ஆதரவு தெரிவித்ததால் எதிர்க்கட்சிகள் முழக்கம் அவ்வளவாக எடுபடவில்லை. மாலத்தீவில் இந்தியாவின் செல்வாக்கை குறைக்கும் விதமாக தானாக முன்வந்து அப்துல்லா யாமீனுக்கு சீனா ஆதரவு அளித்தது.

மாலத்தீவு நாட்டில் அதிபர் தேர்தல் சூழலில், அந்நாட்டின் அரசியல் மாற்றங்கள் குறித்த கவனம் எழுந்திருக்கிறது. சீனாவுடன் அதிக நெருக்கம் காட்டும் மாலத்தீவை இந்தியா எச்சரிக்கையுடன் அணுக வேண்டிய சூழலும் உருவாகியிருக்கிறது. சீனாவை நோக்கி மாலத்தீவு நகர்வதற்கு மாலத்தீவின் உள்நாட்டுக் குழப்பங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. இந்நிலையில், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான புவியரசியலின் முக்கியக் களமாக மாறியிருக்கிறது மாலத்தீவு.



இந்தியாவுக்கும் மாலத்தீவுக்கும் இடையிலான உறவு நீண்ட வரலாற்றைக் கொண்டது. இரு நாடுகளும் இன மற்றும் கலாச்சாரரீதியாக மிகவும் நெருக்கமான உறவு கொண்டவை. 1988 நவம்பரில் ஆயுதம் தாங்கிய குழுக்கள் அந்நாட்டைக் கைப்பற்ற முயன்றபோது ராணுவரீதியாகத் தலையிட்டு அதன் இறையாண்மையையும் ஆட்சியதிகாரத்தையும் காப்பாற்றியது இந்தியா. அதிலிருந்து இரு நாடுகளுக்குமான உறவு மேலும் வலுப்பட்டது. மாலத்தீவுக்குப் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான உதவிகளை இந்தியா தொடர்ந்து அளித்துவந்தது.

# வீருங்கள் !

**தோ.சீ.கார்த்திகேயன்**

### உறவும் விரிசலும்

2004—லிருந்து மாலத்தீவுகளில் மக்களாட்சிக்கு ஆதரவான இயக்கம் வலுப்பெறத் தொடங்கியபோது அந்நாட்டின் உள்விவகாரங்களில் இந்தியா உண்மையான அக்கறையைக் காட்டியது. 1978—லிருந்து அங்கு ஆட்சியிலிருந்த அதிபர் கயூமின் சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக எதிர்க்கட்சிகளும் சமூகச் செயற்பாட்டாளர்களும் அணிதிரளத் தொடங்கினர். இந்தியாவும் சர்வதேசச் சமூகமும் அளித்த அழுத்தங்களின் காரணமாக 2008—ல் முதன்முறையாக, பல கட்சிகள் போட்டியிட்ட சுதந்திரமான, நேர்மையான தேர்தல் மாலத்தீவில் நடந்தது. அந்நாடு சர்வாதிகார ஆட்சியிலிருந்து மக்களாட்சிக்கு மாறுவதற்குத் தேவையான உதவிகளை இந்தியா செய்தது. அந்தத் தேர்தலைக் கண்காணிக்க இந்தியத் தேர்தல் ஆணையத்தின் சார்பில் பார்வையாளர்களும் அனுப்பப்பட்டனர். அரசியல் காரணங்களுக்காகச் சிறையிலிருந்த மொகமத் நஷீத் அந்தத் தேர்தலில் கயூமை எதிர்த்து நின்று வெற்றிபெற்றார். 2012 பிப்ரவரி மாதம் மாலத்தீவில் அரசியல் நெருக்கடி உருவாகும் வரை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு சீராகவே இருந்தது.

2012—ல் எதிர்க்கட்சிகளும், சுயநல நோக்கம் கொண்ட சில குழுக்களும் ஒன்றுசேர்ந்து நஷீத்துக்கு நெருக்கடி தந்தன. இதையடுத்து அவர் பதவி விலக நேர்ந்தது. இந்தியாவுக்கும் மாலத்தீவுக்கும் இடையிலான உறவில் விரிசல் விழத் தொடங்கியது அப்போதுதான்!



### சீனாவிடம் நெருக்கம்

ரூ.3,500 கோடி மதிப்பில், மாலே சர்வதேச விமான நிலையத்தைப் புதுப்பித்தமைப்பது தொடர்பாக, ஜி.எம்.ஆர். என்ற இந்திய நிறுவனத்துக்குத் தரப்பட்டிருந்த திட்டம் ரத்துசெய்யப்பட்டது இந்த விரிசலைத் தெளிவாகக் காட்டியது. புதிய அரசின் அமைச்சர்கள் இந்தியாவுக்கு எதிராகவும், சீனாவுக்கு ஆதரவாகவும் கருத்துகளை

வெளியிட்டனர். இந்தியாவின் நலன்களைப் பாதிக்கும் விதமாக மாலத்தீவின் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் சீனா காலூன்றத் தொடங்கியது. 2014 செப்டம்பரில் சீன அதிபர் ஜி ஜின்பிங் மாலத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டார். கடந்த 42 ஆண்டுகளில் சீன அதிபர் மாலத்தீவுக்கு வந்தது அதுவே முதல் முறை.

தெற்காசியப் பிரதேசத்தில் உள்ள வேறு சில நாடுகளில் நடப்பதைப் போலவே இங்கும் சீனா நிதியுதவி, கடன் ஆகியவற்றை அளித்து பல முக்கியமான, பெரிய அளவிலான அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களில் முதலீடு செய்யத் தொடங்கியது. பொருளாதார ஒத்துழைப்பாகத் தொடங்கிய சீன—மாலத்தீவு உறவு, ஒருகட்டத்தில் பாதுகாப்பு—ராணுவம் தொடர்பான விவகாரங்களுக்கும் விரிவடைந்தது. சீனாவின் கப்பற்படை கப்பல்கள் மாலத்தீவுக்கு நட்புரீதியில் விஜயம் செய்தன. இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைத் தொடர்ந்து துறைமுகங்களைக் கட்டும் பணியில் சீனா ஆர்வம் காட்டியது. சீனாவின் பட்டுப் பாதைத் திட்டத்தில் பங்கேற்பதில் மாலத்தீவு மிகுந்த ஆர்வம் காட்டுகிறது. இந்தத் திட்டத்தில் இந்தியா பங்கேற்கவில்லை என்பதுடன் இத்திட்டத்துக்கு எதிராக ஆட்சேபனைகளையும் இந்தியா தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. தனது சில தீவுகளைச் சீனாவுக்கு நீண்டகால குத்தகைக்கும் விட்டிருக்கிறது மாலத்தீவு; அதுவும் மிகக் குறைந்த தொகைக்கு! சுற்றுலாவை வளர்ப்பதற்காக இவ்வாறு குத்தகைக்கு விடப்பட்டதாக விளக்கமும் சொன்னது.

## இந்தியாவின் கவலை

எல்லாவற்றுக்கும் மேலாக, அவசர அவசரமாகக் கூட்டப்பட்ட மாலத்தீவு நாடாளுமன்றம் சீனாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் அளித்தது. மாலத்தீவில் இப்படியெல்லாம் நடப்பது இதுவே முதல் முறை. இத்தனைக்கும், 17—வது சார்க் மாநாடு நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகத்தான், 2011 நவம்பரில் சீனா தனது தூதரக அலுவலகத்தை மாலத்தீவுகளில் திறந்தது. இந்நிலையில் மாலத்தீவின் போக்கில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் இந்தியாவுக்குக் கவலையை ஏற்படுத்தியிருப்பதில் ஆச்சரியமில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்னர் மாலத்தீவுக்கு இந்தியா தந்த இரண்டு ஹெலிகாப்டர்களையும், அவற்றை இயக்கவும் பராமரிக்கவும் அனுப்பப்பட்ட குழுவினரையும் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு மாலத்தீவு சமீபத்தில் கூறியிருப்பது பிரச்சினையை மேலும் அதிகரித்திருக்கிறது. சீனாவுடனான நெருங்கிய உறவின் காரணமாகவே மாலத்தீவு இவ்வாறு துணிச்சலாக நடந்துகொள்கிறது. அதேசமயம், மாலத்தீவில் ராணுவத் தளங்களை அமைப்பதில் சீனா ஈடுபட்டுள்ளதாக வரும் தகவல்கள் ஆதாரமற்றவை. இந்தியப் பெருங்கடலில் இந்தியாவின் ஆதிக்கத்தின் காரணமாக ராணுவத் தளங்களை அமைக்கச் சீனாவுக்கு இடமளிப்பது மாலத்தீவுக்கு அவ்வளவு எளிதாக இருக்காது.

## பொது வேட்பாளர்

மாலத்தீவில் இன்று நிலவும் அரசியல் சூழலில் வெளிப்படைத்தன்மை இல்லை. பேச்சு சுதந்திரம் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருப்பது, சட்டத்தின் ஆட்சி பலவீனமடைந்திருப்பது, எதிர்க்கட்சியினர், அரசியல் செயற்பாட்டாளர்கள், மக்களாட்சி நிறுவனங்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருப்பது ஆகியவை பெரிதும் கவலைக்குரிய விஷயங்களாக இருக்கின்றன. இந்த அடக்குமுறைகள் சர்வதேச அமைப்புகளாலும் தனிப்பட்ட பார்வையாளர்களாலும் வெளியுலகின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. நாட்டின் பாதுகாப்புச் சூழ்நிலைகளைக் காரணம்காட்டி 2018 பிப்ரவரி 5—ல் அதிபர் யாமீன், நெருக்கடிநிலையை அறிவித்தார். இது 45 நாட்களுக்கு நீடித்தது.

இந்தச் சூழ்நிலையில் மாலத்தீவு அதிபர் தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்தப்பட வேண்டுமென பரவலாகக் கோரிக்கைகள் வைக்கப்பட்டு, அதிபர் யாமீனைத் தோற்கடிக்கவும் நாட்டின் அரசியலை இயல்புநிலைக்குக் கொண்டுவரவும் எதிர்க்கட்சிகள் அனைத்தும் இணைந்து பொது வேட்பாளரை நிறுத்தியுள்ளன.

எதிர்க்கட்சி தலைவர்களை சிறையில் தள்ளியது, சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளை கைது செய்ய உத்தரவிட்டது, நாட்டில் நெருக்கடி நிலையை அறிவித்தது என பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு அப்துல்லா யாமீன் ஆளானார். எதிர்க்கட்சிகள் அவருக்கு எதிராக கடுமையான போராட்டங்களை நடத்தின. இதனால் அவருக்கு செல்வாக்கு சரிந்து வருவதாக கூறப்பட்டது. அதே நேரம் சீனா அவருக்கு பகிரங்க ஆதரவு தெரிவித்ததால் எதிர்க்கட்சிகள் முழக்கம் அவ்வளவாக எடுபடவில்லை. மாலத்தீவில் இந்தியாவின் செல்வாக்கை குறைக்கும் விதமாக தானாக முன்வந்து அப்துல்லா யாமீனுக்கு சீனா ஆதரவு அளித்தது.

இந்த நிலையில் அங்கு அதிபர் தேர்தல் நடத்தப்பட்டது. இதில் மாலத் தீவு முன்னேற்றக் கட்சி சார்பில் தற்போதைய அதிபர் அப்துல்லா யாமீன் மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து மாலத் தீவு ஜனநாயக கட்சி தலைவர்களில் ஒருவரான 54 வயது இப்ராகிம் முகமது ஷோலி நிறுத்தப்பட்டார். பல்வேறு எதிர்க்கட்சிகளின்

தலைவர்கள் சிறையில் இருப்பதாலும், பல தலைவர்கள் தலைமறைவாக உள்ளதாலும் அவர்களால் அதிபர் தேர்தலில் போட்டியிட முடியவில்லை. இந்த தேர்தலில் அதிபர் அப்துல்லா யாமீன் மீண்டும் வெற்றி பெறுவார் என்றே அரசியல் நோக்கர்கள் கூறினர். ஆட்சியை தக்க வைக்க ஆளும் கட்சி மோசடியில் ஈடுபடலாம் என்று எதிர்க்கட்சிகள் அச்சம் தெரிவித்து இருந்தன. இதன் காரணமாக அப்துல்லா யாமீனுக்கே வெற்றி வாய்ப்பு இருப்பதாக கூறப்பட்டது. மாலத் தீவின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 2,62,135. இவர்களில் 2,33,877 பேர் தேர்தலில் ஓட்டுப் போட்டனர். இது 89.22 சதவீதம் ஆகும்.



இந்த தேர்தல் முடிவுகளில் மக்களின் மனநிலை அதிபர் அப்துல்லா யாமீனுக்கு எதிராக வெளிப்பட்டது. பதிவான ஓட்டுகள் அனைத்தும் எண்ணி முடிக்கப்பட்டபோது எதிர்க்கட்சி வேட்பாளரான இப்ராகிம் முகமது 1 லட்சத்து 34 ஆயிரத்து 616 ஓட்டுகளும் (58.3 சதவீதம்), அதிபர் அப்துல்லா யாமீனுக்கு 96 ஆயிரத்து 132 ஓட்டுகளும் (41.7 சதவீதம்) கிடைத்து இருந்தது. இப்ராகிம் முகமது அபார வெற்றி பெற்றார். இதனால் சீனாவுக்கு பலத்த அடி கிடைத்துள்ளது. சீனாவுக்கு வால் பிடிப்பதை மாலத் தீவு மக்கள் விரும்பவில்லை என்பது தேர்தல் முடிவுகளில் வெளிப்பட்டு உள்ளது. மக்கள் மவுனப் புரட்சி மூலம் அப்துல்லா யாமீனை தோற்கடித்து உள்ளனர்.எதிர்க்கட்சி வேட்பாளர் இப்ராகிம் முகமது வெற்றி பெற்றிருப்பதை இந்தியாவும், அமெரிக்காவும் வரவேற்று உள்ளன.

இப்ராகிம் முகமது வெற்றி பெற்றதை ஜனநாயக கட்சி தொண்டர்கள் உற்சாகத்துடன் கொண்டாடினர். மாலத் தீவு நாட்டின் கொடிகளுடன் அவர்கள் இசைக் கருவிகளை இசைத்தவாறு பல இடங்களில் ஊர்வலங்களும் நடத்தினர்.


இந்நிலையில், மாலத்தீவு தேர்தலில் இப்ராகிம் முகமது ஷோலி வெற்றி பெற்ற பின்னர் பிரதமர் மோடி அவருக்கு தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்தார். அப்போது தனது பதவியேற்பு விழாவிற்கு வருகை தருமாறு மோடிக்கு ஷோலி அழைப்பு விடுத்தார்.இதைத்தொடர்ந்து இந்தியாவிற்கு வருமாறு ஷோலிக்கு மோடி அழைப்பு விடுத்தார் மோடியின் இந்த அழைப்பை ஷோலி ஏற்றுக்கொண்டார் என அவரது செய்திதொடர்பாளர் மரியா அகமது திதி கூறினார்.மேலும், இந்தியா மாலத்தீவு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த இரு தலைவர்களும் இணைந்து செயல்பட ஒப்புக்கொண்டனர் என மரியா தெரிவித்தார். சார்க் அமைப்பில் உறுப்பினராக உள்ள நாடுகளிலேயே பிரதமர் மோடி இதுவரை செல்லாத நாடு மாலத்தீவுகள் மட்டும் தான். கடந்த 2015ம் ஆண்டு மாலத்தீவு செல்ல திட்டமிட்ட மோடியின் பயணம் அந்நாட்டின் உள்நாட்டு குழப்பம் காரணமாக ரத்து செய்யப்பட்டது குறிப்பிடததக்கது

இந்தத் தேர்தலின் முடிவு இந்தியா, சீனாவுடனான மாலத்தீவின் உறவின் பாதையைத் தீர்மானிப்பதாக இருக்கும்.

# ஆட்டிப் படைக்கும்

### அறிவுஜீவிகளின் மவுனம் ஏற்படுத்தும் அச்சம்

**வ**ங்காளத்தில் 1943—ல் ஏற்பட்ட கொடிய பஞ்சம் பற்றிய ஆவணப்படத்தைச் சில மாதங்களுக்கு முன் பார்த்தேன். 'வங்காளத்தின் நிழல்கள்' என்ற தலைப்பு நல்ல நோக்கத்தில் இடப்பட்டிருந்தாலும் பின்னால் வரக்கூடியவற்றுக்கு முன்னுரையாகவே இருந்தது. 35 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களைப் பலிகொண்ட பஞ்சத்தின்போது மக்களைக் காக்கத் தவறிய பிரிட்டிஷ் அரசின் அலட்சியத்தை — அகங்காரத்தைக் கண்டிக்காமல், ஆட்சியாளர்களைப் பொறுப்பாக்காமல் அப்போதைய அறிவுஜீவிகள் ஏன் மவுனம் சாதித்தார்கள் என்ற கேள்வி எழுகிறது.




இந்திய வரலாற்றாசிரியர்கள் இந்த விவகாரத்தை அடக்கத்தோடு, அதே சமயம் விமர்சன நோக்கில் அணுகியிருந்தாலும் பாதிக்கப்பட்டவர்கள் மீது கருணையைக் காட்டவில்லை. பஞ்சம் தொடர்பாகக் கண்டனக் குரல் எழுப்பாமல் மவுனம் காத்தவர்கள், ஒன்றுமே அறியாதவர்கள் என்று இரு பிரிவினரே இருந்தனர். பஞ்சம் பற்றிய பதிவுகள் நாட்டுப்புறப் பாடல்களாகவும் தாத்தா பாட்டிகள் குழந்தைகளுக்குச் சொல்லும் அந்த நாள் கதைகளாகவும் சுருங்கிவிட்டன. பஞ்சத்தின் கொடுமைகளையும் அதில் லட்சக்கணக்கானோர் இறந்ததையும் அற்பமான நிகழ்வைப் போல, சடங்காகப் பதிவுசெய்துள்ளனர். சுதந்திரப் போராட்ட இயக்கம் அமைதியாகவும், அரசுடன் பேசும் நிலையில் இருந்ததாலும் இது அதிகம் விவாதிக்கப்படாமல் போயிருக்கலாம். ஆனால், தேசப் பிரிவினையாலும், வங்காளப் பஞ்சத்தாலும் லட்சக்கணக்கானோரை இழந்ததால்தான் மக்களைக் காக்க வேண்டிய 'அரசு' பற்றிய சிந்தனை, அனைவருடைய எண்ணங்களிலும் தோன்றியது.

### பஞ்சம் காட்டிய பாதை


சுதந்திரம் அடைந்த பிறகு அறிவியல், ஐந்தாண்டு திட்டமிடல், அனைத்துத் துறைகளின் வளர்ச்சி ஆகியவற்றில் அக்கறையும், பெரும் எண்ணிக்கை யிலான மக்களைப் பஞ்சம்—பசி—

# அறிவு

ஷிவ் விஸ்வநாதன்

பட்டினியிலிருந்தும் நோய்களிலிருந்தும் மீட்க வேண்டும் என்ற உறுதியுமுள்ள அரசு ஏற்படக் காரணமாயிற்று.


அடுத்ததாக, வன்முறையும் அதனால் பெருமளவில் ஏற்பட்ட சீர்குலைவுகளும் நாட்டையே பிளவுபடுத்துவதில் முடிந்தன. அப்படிப் பெருமளவில் நிகழ்ந்த வன்செயல்கள்தான் புதிய நவீனத்துவத்தின் பகுதியாக மாறின. மக்களுக்கு ஒரு வாய் சோறுகூடக் கிடைக்காமல் போகுமளவுக்குப் பஞ்சம் நேரிட எது அல்லது யார் காரணம் என்ற தேடலோ, அப்படிப்பட்டவர்கள் மீதான கடும் விமர்சனமோ வரலாற்றில் இல்லை. பிரிட்டிஷாரின் அகந்தையான போக்குக்கு ஒரு எதிர்ப்போ, ஏராளமானோரின் உயிரிழப்புக்குக் காரணமான வின்ஸ்டன் சர்ச்சிலைப் போர்க் கைதியாக விசாரிக்க வேண்டும் என்ற ஆவேசமோ இல்லை. அதற்கு மாற்றாக, பிரிட்டிஷாரிடம் எப்படிக் கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடந்து சுயராஜ்யம் பெற வேண்டும் என்ற இதோபதேசம்தான் கூறப்பட்டது.




வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சமும் அதில் 35 லட்சத்துக்கும் மேற்பட்டோர் இறந்ததும் இன்றைய தலைமுறைக்குத் தெரியாமலிருப்பதற்குக் காரணம் கதைசொல்லிகள்தான். எந்த வன்முறையையும் இந்தியச் சமூகம் அமைதியாக ஏற்றுக்கொள்ளும் என்பது — அறிவுஜீவிகளுக்கு உணர்வு மரத்துப் போய்விட்டதையே காட்டுகிறது. மவுனமாக எதையும் ஏற்கும் சதியில் அறிவுஜீவியும் கூட்டாளியாகிவிடுகிறார் என்பதுதான் இதில் பெரும் சோகம்.

## சொல்ல மறந்த கதைகள்

இவற்றையெல்லாம் பார்க்கும்போது இந்திய அறிவுஜீவிகளின் கதை சொல்லும் திறன் எப்படிப்பட்டது என்ற வியப்பு ஏற்படுகிறது. அவர் அரசின் பின்னொட்டா, அல்லது அரசை விமர்சிக்கக்கூடியவரா? இந்தக் கேள்வி சமீப காலத்தில் மேலும் உரத்து ஒலிக்கிறது. அறிவுஜீவிகளின் மவுனமும், சாத்வீகமும் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்துகிறது. இருந்தும் இது ஏன் என்று ஆராய்ந்து தெளியும் முயற்சிகளும் இல்லை.




முக்கிய நிகழ்வுகளையெல்லாம் ஏன் இப்படி மவுனமாகவே கடந்திருக்கிறார்கள் என்ற வியப்பும் ஏற்படுகிறது. இன அழிப்பு, வன்செயல்கள் என்று எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்க மவுனம் காக்கப்பட்டது என்றால் அதற்கு மாபெரும் நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறேன். பிரிவினைக் காலத்து மவுனம், வன்புணர்வுகள் பற்றிச் சிலர் பேசுவதுடன் முடிகிறது. இந்தியா என்பதே மவுனங்களின் வரலாறாகிவிட்டது. போபால் விஷவாயுக் கசிவு சம்பவத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் இறந்தனர். இறந்தவர்கள், மீள முடியாமல் நோய்வாய்ப்பட்டவர்கள் பற்றிய கணக்கெடுப்பு நடத்தி, சட்டபூர்வமான உரிமைகள் பற்றிப் பேசப்பட்ட பிறகு நடவடிக்கை ஏதுமில்லை. துயரங்களும் மவுனங்களும் சேர்ந்தே வரும் என்று தோன்றுகிறது. நர்மதை அணையில் நீர்தேங்கும் அளவை உயர்த்தி ஏராளமான பழங்குடிகளை அவர்களுடைய வாழிடத்திலிருந்து அகற்றியபோதும் அதே மவுனம் தொடர்ந்தது. அங்கே தப்பியவர்கள் ஆண்டுதோறும் பல போராட்ட நிகழ்வுகளை நடத்தியும் பலன் ஏதுமில்லை. அந்த அணையில் உயரத் தொடங்கிய தண்ணீரில் அறிவுஜீவிகளின் குரலும் மூழ்கி அடங்கிவிட்டது.

உயர்த்திக் குரலெழுப்பிக் கண்டிக்கப்பட்ட சம்பவங்கள்கூட பிறகு ஏன் மவுனத்தில் மூழ்கடிக்கப்படுகின்றன என்ற வியப்பு ஏற்படுகிறது. நெருக்கடிநிலை காலத்தில் என்ன நடந்தது என்பதை ஷா கமிஷன் விசாரணை அறிக்கை பேசுகிறது. 1984—ல் சீக்கியர்களுக்கு எதிரான படுகொலைகளின் போது நடந்தவை என்ன என்று 'பியுசிஎல்—பியுடிஆர்' ஆகிய மனித உரிமை ஜனநாயக உரிமைகளுக்கான அமைப்புகளின் அறிக்கைதான் பேசுகிறது.

ஒவ்வொரு அக்கிரமத்துக்குப் பின்னாலும் அறிவுஜீவிகளின் மவுனம் பின்தொடர்வதே மரபாகி வருகிறது. இந்தியா என்பதே மவுனங்களின் தொடர் வரலாறாக இருக்கிறது. உண்மையான வரலாறு குரலே இல்லாமல் அமுங்குகிறது, சாட்சியாகக்கூட இருக்க முடியாமல். தேசப் பிரிவினை, போபால் விஷவாயுக் கசிவு, நர்மதை அணையில் நீர்மட்ட உயர்வு ஆகிய சம்பவங்களின்போது கடைப்பிடிக்கப்பட்ட மவுனங்கள் பெரியவை என்றாலும் பல சிறியவையும் பேசப்படாமலேயே இருக்கின்றன. அவை மட்டுமல்ல பெண்கள், குழந்தைகள், ஒடுக்கப்பட்டவர்கள் என்று பலதரப்பட்டவர்கள் மீதான சமீபத்திய தாக்குதல்களின்போதும் தொடரும் மவுனம் பேசப்படக் காத்திருக்கிறது.

## மவுனத்தின் கனம்

சம்பவங்கள் நடந்தபோது காத்த மவுனங்களைவிட இப்போது அன்றாடம் நிலவும் மவுனம் அதிகம் என்னை அலைக்கழிக்கிறது. சித்ரவதைகளையும் வன்புணர்வையும் நேரில் பார்த்த இணையர்கள் பிரிவினையைப் பற்றி இன்னமும் வாய் திறக்காதது. 2002 வகுப்புக் கலவரங்களுக்குப் பிறகு குஜராத்தின் மவுனம். இங்கே மன உளைச்சல் ஏன் என்றால் மவுனம்தான் பேசுகிறது, மவுனம்தான் பேச வேண்டும் என்கிறது, மவுனம்தான் குரல் கொடுக்குமாறு இறைஞ்சுகிறது, கடைசியில் மவுனம்தான் தோற்கிறது. மவுனத்துக்கு இன்னமும் சொல்திறன் இருக்கிறது. நம்மை ஒவ்வொரு கணமும் தாக்குகிறது. ஒரு குடியரசை மவுனங்களின் மீது கட்டமைக்க முடியாது. அதற்குப் பேச்சு அவசியம். மவுனத்துக்குப் பதிலாக கூச்சலை இட்டு நிரப்ப முடியாது. சில வாரங்களுக்கு முன்னால் ஒரு சீன ஓவியத்தைப் பார்த்தேன். அதன் அடியில் ஹைகூவைப் போல ஒரு கவிதை. "எவ்வளவு துயரமானது, மவுனம் என்பது" என்றது.

இது நவீன இந்தியாவைப் பற்றிய வர்ணனையாகக் கூட இருக்கலாம்.

தமிழில்: சாரி, 'தி இந்து' ஆங்கிலம்

தேவி!

வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத

indian express foods

இட்லி / தோசை மா

இலண்டனில் மட்டுமே கிடைக்கும்



indian express foods

+44 20 8133 5144

+44 7878 89 68 37

# தமிழே

## காவிரி நீரைத் தடுக்கவே மேக்கேதாட்டுத் திட்டம்!

தமிழ்நாட்டில் காவிரி ஒன்றுதான் பெரிய ஆறாகும். கர்நாடகத்தில் காவிரி மட்டுமின்றி கிருஷ்ணா, துங்கபத்ரா (கிளை) எனும் இரண்டு பெரிய ஆறுகளும் மற்றும் கோதாவரி ஆற்றின் கிளை ஆறு

களும் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள் பலவும் உள்ளன. தமிழ்நாட்டின் நிலப்பகுதியில் 34% காவிரிப் படுகையில் அமைந்துள்ளது. கர்நாடகத்தில் உள்ள நிலப்பகுதியில் 17% மட்டுமே காவிரிப் படுகையில் உள்ளது. தமிழ்நாட்டில் ஆற்றுப்பாசன நிலத்தில் 60% காவிரி ஆறு ஒன்றினையே நம்பியுள்ளது.



தமிழ்நாடு தனது உணவு தானிய உற்பத்திக்கு காவிரியையே பெரிதும் சார்ந்துள்ளது. 1974—ஆம் ஆண்டுவரை ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 300 டி. எம். சி.க்கு குறையாமல் காவிரியில் நீர் வந்து கொண்டிருந்தது. அதற்குப் பிறகு, காவிரியில் வந்து இணையும் கிளை ஆறுகளான கபினி, ஹேமாவதி, ஹேரங்கி போன்ற ஆறுகளில் அணைகளைக் கட்டி நீரை கர்நாடகம் தேக்கியது.

மேலும், கர்நாடகத்தில் காவிரிப் படுகைப் பகுதியில் உள்ள ஏரிகள், குளங்கள் ஆகியவற்றின் கொள்ளளவை அதிகரிக்க காவிரி பெரும் திட்டம்'ஒன்றினை வகுத்து, அவற்றில் நீரைத்

தேக்கிக் கொண்டு காவிரி அணைகளில் நீர் இல்லை என தமிழகத்தையும் இந்திய அரசையும் தொடர்ந்து ஏமாற்றியது.

நடுவர் மன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவை அளித்தத் தீர்ப்புகளை கர்நாடகம் மதிக்க மறுத்தது. ஏறத்தாழ 50 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட சட்டப் போராட்டத்தின் மூலம் 2018—ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பினையும் அதற்குப் பின்னர் காவிரி மேலாண்மை வாரியத்தையும் நாம் பெற்றோம். ஆனாலும், கைக்கு எட்டியதை வாய்க்கு எட்டாமல் செய்வதற்கு கர்நாடகம் முயலுகிறது.

தமிழ்நாட்டின் எல்லைக்கு மிக அருகில் காவிரி ஆற்றின் குறுக்கே மேக்கேதாட்டு

## பழ. நெடுமாறன்

என்னும் இடத்தில் 5,912 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனல் மின் திட்டம் ஒன்றை அமைக்க கர்நாடக அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்படுமேயானால், மேட்டூர் அணைக்கு இப்போது வந்து கொண்டிருக்கும் நீர் முழுவதுமாகத் தடுக்கப்பட்டு விடும்.

1982—ஆம் ஆண்டில் கர்நாடக மக்களுக்குப் புத்தாண்டு பரிசாக மேக்கேதாட்டுத் திட்டத்தை அறிவிப்பதாக அப்போதைய முதலமைச்சர் குண்டுராவ் அறிவித்தார். அப்போது இந்த அறிவிப்பு, தமிழகத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திற்று.


6—2—1982—அன்று தமிழக சட்டப்பேரவையில் இப்பிரச்னை குறித்து நான் பேசும்போது, தமிழகம் நீர் பற்றாக்குறை மாநிலம் மட்டுமல்ல, மின் பற்றாக்குறை மாநிலமும் ஆகும். ஆனால் கர்நாடகம், நீரிலும் மின்சாரத்திலும் தன்னிறைவு பெற்ற மாநிலமாகும். அம்மாநிலத்தில் கிருஷ்ணா, துங்கபத்ரா மற்றும் அதன் கிளை ஆறுகள் உள்பட வற்றாத ஆறுகள் பல உள்ளன.

இவற்றின் மூலம் 6,500 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். ஆனால், 1,500 மெகா வாட் மின்சாரம் மட்டுமே கர்நாடகம் உற்பத்தி செய்கிறது. அந்தப் பேராறுகளின் குறுக்கே அணை



கட்டாமல் தமிழ்நாட்டிற்கு ஓடி வரும் காவிரியிலும் அதன் கிளை ஆறுகளிலும் அணைகளைக் கட்டி நமக்குத் தண்ணீர் வர விடாமல் தடுப்பதையே நோக்கமாகக் கொண்டு கர்நாடகம் செயற்படுகிறது.

1961—ஆம் ஆண்டில் ஒகேனக்கல்லில் தமிழ்நாட்டின் எல்லைக்குள் அணை கட்டி புனல் மின் நிலையம் ஒன்றை அமைக்க நாம் திட்டமிட்டிருந்தோம். ஆனால், அதற்கு கர்நாடகம் எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணமாக, திட்டக் குழுவும் நடுவண் அரசும் அத்திட்டத்திற்கு




ஒப்புதல் கொடுக்கவில்லை.

அதன் விளைவாக, நமது திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. ஒகேனக்கல்லுக்கு மேலே நமது எல்லைக்கு மிக அருகில் மேக்கேதாட்டு புனல் மின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உலக வங்கி நிதி உதவி செய்ய ஒப்புதல் கொடுத்திருப்பதாக கர்நாடக முதலமைச்சர் கூறியிருக்கிறார். இந்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் உலக வங்கி இத்திட்டத்திற்கு உதவி செய்ய முன் வராது. நமது ஒகேனக்கல் புனல் மின் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க மறுத்த இந்திய அரசு மேகதாட்டுத் திட்டத்திற்கு எப்படி ஒப்புதல் அளித்தது?' என்று கேள்வி எழுப்பினேன். அனைத்துக் கட்சியினரும் எனது கருத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

அப்போது முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். தமிழக சட்டமன்றத்தின் ஒட்டுமொத்த எதிர்ப்பை இந்திய அரசுக்கு தெரிவிப்பதாகக் கூறி, அவ்வாறே செய்தார். அதன் விளைவாக கர்நாடகத்தின் திட்டம் அன்று தடுக்கப்பட்டது.

2012—ஆம் ஆண்டில் தேசிய புனல் மின் கழகம் வகுத்த ஒரு திட்டத்தை கர்நாடகம், தமிழகம் ஆகியவற்றின் பரிசீலனைக்கு முன்வைத்தது. சிவசமுத்திரம், மேக்கேதாட்டு புனல் மின் திட்டங்களை கர்நாடகத்திலும் இராசிமணல், ஒகேனக்கல் புனல் மின் திட்டங்களைத் தமிழகத்திலும் நிறைவேற்றலாம் எனக் கூறியது.

இத்திட்டத்தை தமிழகம் பின்வரும் நிபந்தனைகளுடன் ஏற்றது. அதாவது, முதல் கட்டமாக கர்நாடகம் சிவசமுத்திரம் புனல் மின் திட்டத்தையும், தமிழகம் ஒகேனக்கல் புனல் மின் திட்டத்தையும் ஒரே நேரத்தில் தொடங்கி முடிக்க வேண்டும். இரண்டாம் கட்டமாக மேக்கேதாட்டுத் திட்டத்தையும் இராசிமணல் திட்டத்தையும் நிறைவேற்றலாம்.

ஆனால், தேசிய புனல் மின் கழகம் இந்த நான்கு மின் நிலையங்களையும் தனது கட்டுப்பாட்டில் நிருவகிக்க வேண்டும். அப்போதுதான் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நீர் எவ்விதத் தடையுமின்றி வந்துசேரும் எனக் கூறியது. முதலில் இதற்கு ஒப்புக்கொண்ட கர்நாடகம் பின்னர் சிவசமுத்திரம், மேக்கேதாட்டுத் திட்டங்களை முதலில் நிறைவேற்றிக் கொள்வதில் ஆர்வம் காட்டியது. எனவே, தமிழகம் ஒப்புதல் அளிக்க மறுத்தது. உச்சநீதிமன்றத்தில் மேக்கேதாட்டு, சிவசமுத்திரம் திட்டங்களுக்கு எதிராகத் தமிழகம் தொடுத்த வழக்கு இன்னமும் நிலுவையில் உள்ளது.

தற்போது மீண்டும் மேக்கேதாட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கர்நாடகம் முயற்சி செய்கிறது. தமிழக முதல்வர் தனது கடும் எதிர்ப்பினைக்

கடிதம் மூலம் தலைமை அமைச்சர் மோடிக்குத் தெரிவித்துள்ளார். கர்நாடகத்தின் இந்த செயலானது, நடுவர் மன்றத்தின் இறுதி ஆணைக்கும் உச்சநீதிமன்றத்தின் ஆணைக்கும் முற்றிலும் எதிரானதாகும்.

அது மட்டுமல்ல, அவை அளித்தத் தீர்ப்புகளைச் செயலற்றதாக்கி விடும். காவிரி வடிநிலப் பகுதியைச் சேர்ந்த மாநிலம் எதுவாயிருந்தாலும் புதியத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்பாக அப்பகுதியைச் சேர்ந்த பிற மாநிலங்களின் ஒப்புதலைப் பெற வேண்டுமென ஏற்கெனவே இந்திய அரசு வழங்கியுள்ள வழிகாட்டுதலையும் கர்நாடகம் மதிக்கவில்லை.

இத்திட்டம் தொடர்பாக தமிழக அரசை இது வரை கர்நாடக அரசு அணுகவில்லை. மாறாக இத்திட்டத்திற்கான சாத்தியக் கூறு அறிக்கைக்கு ஒப்புதல் வழங்க வேண்டுமென நடுவண் நீர்வள ஆணையத்தை கர்நாடக அரசு அணுகியுள்ளது. இதனையும் தனது கடிதத்தில் நமது முதல்வர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால், கர்நாடக முதலமைச்சர் தனது அமைச்சரவையில் உள்ள முக்கிய அமைச்சர்களுடன் தில்லி சென்று தலைமை அமைச்சர் மோடியைச் சந்தித்து இத்திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டுமென வற்புறுத்தியுள்ளார். இவரைத் தொடர்ந்து, முன்னாள் தலைமை அமைச்சர் தேவெ கௌடா தலைமையில் கர்நாடக அனைத்துக் கட்சிகளின் தலைவர்களைக் கொண்ட குழு ஒன்று மோடியைச் சந்தித்து இத்திட்டத்திற்கு அனுமதியை வழங்குவதோடு, நிதி உதவியையும் அளிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

அதன் பிறகு, கர்நாடக நீர்வளத்துறை அமைச்சர் டி. கே. சிவகுமார் செய்தியாளர்களுக்கு அளித்த நேர்காணலில், கர்நாடகத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு தமிழக அரசின் ஒப்புதலைப் பெறத் தேவையில்லை' என்று கூறியுள்ளார்.

கர்நாடகத்தின் தன்னலமும் தன்னிச்சையும் நிறைந்த இப்போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்க தலைமை அமைச்சர் மோடி முன் வரவேண்டும். மேக்கேதாட்டு அணைத் திட்டத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே வகுக்கப்பட்ட ஒகேனக்கல் புனல் மின் திட்டத்திற்கு அனுமதி அளிப்பதன் மூலம் கர்நாடகத்திற்கு எத்தகைய பாதிப்பும் எப்போதும் ஏற்படப் போவதில்லை. ஏனெனில், ஒகேனக்கல்லுக்கு வரும் காவிரி நீர் ஒருபோதும் திரும்பிப் பாயப் போவதில்லை. நமக்கு அளிக்கப்பட்ட நீரை ஒகேனக்கல் புனல் மின் திட்டத்தின் மூலம் தேக்கி வைத்துப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை நமக்கு உண்டு.




காவிரிச் சமவெளிப் பகுதியில் பெருகி வரும் வெள்ள மிகை நீரை தேக்கி வைத்துக் கொள்ள இயலாது. அண்மையில் வெள்ள நீரில் 150 டி. எம். சி.க்கு மேலான நீர் வீணாகக் கடலுக்குச் சென்றது. இந்த மிகை நீரைத் தேக்கி வைத்து உரிய பருவத்தில் பயன்படுத்திக் கொள்ளவும்

ஒகேனக்கல் திட்டம் நமக்கு உதவும். ஆனால், நமக்கு வரும் நீரை முற்றிலுமாகத் தடுக்கும் உள்நோக்கத்துடன் மேகக்கேதாட்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து, தமிழகக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து மேக்கேதாட்டுத் திட்டத்தைத் தடுத்து நிறுத்துமாறு இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இந்தக் கட்டத்தில்கூட நாம் ஒன்றுபட்டுப் போராட முன்வராவிடில் காவிரிப் படுகைப்பகுதி பாலைவனமாவதைத் தடுக்க முடியாது.





# வாழ்வாங்கு

## ஜூர்கென் ஹெபர்மாஸ்: அறிவுஜீவியின் இலக்கணம்

என்னுடைய தலைமுறையைச் சேர்ந்த அறிவுஜீவிகளுக்கு எட்வர்ட் சய்யீத் பெரிய கதாநாயகர். கிழக்கு நாடுகளை விமர்சித்து எழுதிய மேற்கு நாடுகளின் அறிவுஜீவிகளைத் தாக்கி அவர் எழுதிய கட்டுரைகளால் நாங்கள் பூரிப்படைந்தோம். மூன்றாவது உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் — இஸ்ரேலின் குற்றச்செயல்களை அவர் கண்டித்த விதத்தையும், பாலஸ்தீனர்களுக்குக் காட்டிய பரிவையும் மிகவும் மெச்சினோம்.

என்னுடைய நண்பர்களில் சிலர் வளர்ந்த பிறகும் சய்யீத் மீது கொண்டிருந்த பக்தி குறையாமல் இருந்தனர். எனக்கோ லேசான அலுப்புத் தட்டியது. கீழ்த்திசை நாடுகளின் இலக்கியங்களைப் படிக்கப் படிக்க நல்ல புரிதல் ஏற்பட்டது. பலரைக் கண்டித்தும், சிலரை எப்போதாவது கேலிச்சித்திரம் வரைந்தும் விமர்சித்த அவர், பலரை ஒரு பொருட்டாகவே கருதியதில்லை. காலனி ஆட்சியின்போது இங்கு வந்த பாதிரியாரின் மகனான வெர்ரியர் எல்வின், காந்திஜியின் சீடராகவும் நேருவின் நண்பராகவும் விளங்கினார். அவரைப் பற்றிய வரலாற்றை நான் எழுதத் தொடங்கியதாலும் சய்யீதிடமிருந்து விலகினேன். மத்திய இந்தியாவில் வாழும் பழங்குடிகளின் நலனுக்காகத் தொடர்ந்து பாடுபட்ட எல்வின் அவர்களிடையே வாழ்ந்தார்.




## அறிவுஜீவிகள் எதைச் செய்யக் கூடாது?

அதிகாரத்தில் இருப்பவர்களிடத்திலேயே உண்மையைப் பேசினார் என்று என் நண்பர்கள் எட்வர்ட் சய்யீதை முன்மாதிரி அறிவுஜீவி என்று கொண்டாடுகின்றனர். அவருக்கு வரலாற்றுப் புரிதல் போதாது என்பது என்னுடைய கருத்து. அவருடைய அரசியல் கட்டுரைகளாலும் நான் மனநிறைவு பெற்றுவிடவில்லை. அவருடைய எழுத்து பகட்டானது, சுயத்தை மையமாகக் கொண்டது என்பதும் என் எண்ணம். சாமியார்களைப் போல அவருக்கும் ஒரு சீடகோடிகள் உருவாவதை நான் ரசிக்கவில்லை. ஜனநாயகத்தில் அரசியல் தலைவர்களும் அந்த வகையில் இறங்கினால் அது நல்லதல்ல. அதிலும் அறிவுஜீவிகள் விஷயத்தில்

# வாழ்வான்

## ராமசந்திர குஹா

இப்படி ஏற்படவே கூடாது. இப்படி முகத்துதிக்கும் வெற்றுப் பாராட்டுகளுக்கும் அறிவுஜீவிகள் இரையாகிவிடக் கூடாது.


சய்யீத் பற்றியும் அவருடைய சீடர்கள் பற்றியும் பத்தாண்டுகளுக்கு முன்னர், அவர் இறந்தவுடனேயே எழுதியிருக்கிறேன். ஜெர்மானிய மெய்யியலாளரும் சமூகக் கோட்பாட்டாளருமான ஜுர்கன் ஹெபர்மாஸ் பற்றிய புதிய வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போது எனக்கு சய்யீத் பற்றிய நினைவுகள் மீண்டும் வருகின்றன. நவீன மேற்குலகில் ஹெபர்மாஸும் பெரிய அறிவுஜீவி. “அறிவுஜீவி ஒரு நிகழ்வு நடக்கும்போது வினையாற்ற வேண்டும். அதே சமயம், அளவுக்கு மீறி அதில் வேகம் காட்டிவிடாதபடிக்கு அரசியல் முதிர்ச்சியும் வேண்டும். நியாயமற்ற,

சமத்துவமற்ற, நேர்மையற்ற உலகில் அறிவுஜீவிகள் அடிக்கடி வினையாற்றிவிட முடியாது. அடிப்படையான விஷயத்துக்குக்



குரல்கொடுப்பதற்கு அறிவுஜீவிகள் மறக்கக் கூடாது. அரசியல் பிரச்சாரகர்கள்போல நடக்கக் கூடாது. பேச வேண்டிய தருணங்களில் உண்மையை வெகு நுட்பமாகப் பேச வேண்டும். வசைபாடல்களில் ஈடுபடக் கூடாது” என்கிறார் ஹெபர்மாஸ். ஆனால், இந்திய இடதுசாரி அறிவுஜீவிகள் இதைக் கடைப்பிடிக்கத் தவறுகிறார்கள். மார்க்சிஸ்ட்டுகள், சய்யீதர்கள் — சமீபகாலமாக அம்பேத்கரிஸ்ட்டுகளும் இதில் அடக்கம்.

ஹெபர்மாஸ் பற்றிய வாழ்க்கை வரலாற்றை




அவருடைய முன்னாள் மாணவர் ஸ்டிஃபான் முல்லர்—டும் எழுதியிருக்கிறார். அவர் ஓல்டன்பர்க் பல்கலைக்கழகச் சமூகவியல் பேராசிரியர். 1929—ல் பிறந்த ஹெபர்மாஸ், இரண்டாவது உலகப் போர் முடிந்தபோது 16 வயதுச் சிறுவனாக இருந்ததால், நாஜிப் படையில் சேர்க்கப்படவில்லை. ஆனால், நாஜிக்கள் நிகழ்த்திய பேரழிவை நேரில் பார்த்த சாட்சியாக இருந்தார். கோட்டிங்கென், பான் நகரங்களில் படித்தார். பிறகு தியோடார் அடோர்னோ, மேக்ஸ் ஹோர்கிமைய்ர் ஆகியோரிடம் பிராங்க்பர்ட்டில் உயர் கல்வி பயின்றார். மூனிக் நகரில் உள்ள ஆய்வுக் கழகத்தில் சிறிதுகாலம் இருந்துவிட்டு, பிராங்க்பர்ட் நகருக்குத் திரும்பி ஆசிரியராகப் பணியாற்றினார்.

## நகர்ப்புற நக்ஸல்கள்?

அவர் எழுதிய முக்கிய புத்தகங்கள் குறித்து இந்நூலில் விவரித்து எழுதப்பட்டிருக்கிறது. அவருடைய உரைகளும் செய்தித்தாள்களில் எழுதிய கட்டுரைகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. படித்தவர்கள் மட்டுமல்லாமல் பாமரர்களிடையேயும் பேசியிருக்கிறார் ஹெபர்மாஸ். அவர் நடத்திய விவாதங்கள் இன்றும் ஆய்வு செய்யப்படுகின்றன. ஹெபர்மாஸ் வாழ்க்கையில் நடந்த முக்கிய சம்பவங்களும் அவருடைய மனைவி உடே வெஸ்ஸல்ஹாப்டின் பங்களிப்பும் நூலில் நன்கு எழுதப்பட்டுள்ளது. சிறுவனாக இருந்தபோது உதட்டுப் பிளவைச் சரிசெய்ய சிலமுறை அறுவைச் சிகிச்சைக்கு ஆளான அவருக்கு, மனிதர்கள் ஒருவரையொருவர் சார்ந்துதான் வாழ வேண்டும் என்பது அனுபவத்தில் தெரிந்திருந்தது. இதுவே, அவருடைய மெய்யியல் சிந்தனையிலும் எழுத்திலும் பேச்சிலும் எதிரொலித்தது.

உலகப் போருக்குப் பிறகு மிகுந்த செல்வாக்கு மிக்க சமூகக் கோட்பாட்டாளராக ஹெபர்மாஸ் திகழ்ந்தார். அவருக்குப் பெரிய போட்டியாளர் பிரான்ஸைச் சேர்ந்த மைக்கேல் ஃபவ்கால்ட். 2004—ல் 75—வது பிறந்த நாளின்போது — மார்க்ஸ், நீட்ஷே, ஹைடெகர் ஆகியோருக்குப் பிறகு — மிகச் சிறந்த மெய்யியலாளராக ஹெபர்மாஸ் பாராட்டப்பட்டார்.

அவர் தீவிர தேசியவாதம் பேசாத நாட்டுப் பற்றாளர். போருக்குப் பிறகு மேற்கு ஜெர்மனி ஜனநாயக நாடாகத் திகழ வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தார். தேவைப்பட்ட நேரங்களில் மட்டுமே அரசின் கொள்கைகளையும் அரசியல்வாதிகளையும் விமர்சித்தார். இடதுசாரிகளில் மிதவாதியான அவரை, தீவிர இடதுசாரிகள், தீவிர வலதுசாரிகள் என்று இருதரப்பாரும் சாடிவந்தனர்.

இடதுசாரிகளைத் தேச விரோதிகள் என்று முத்திரை குத்தி, 1970—களின் பின்பகுதியில் அவர்களைப் பொதுவெளியில் தாக்கினர் ஜெர்மனி மக்கள். பழமைவாத விமர்சகர்கள் சமூக ஜனநாயகக் கட்சிக்காரர்களையும் ஹெபர்மாஸையும் மாவோயிஸ்ட்டுகளுடன் ஒப்பிட்டுக் கண்டித்தனர். "இடதுசாரி அறிவுஜீவிகளை உள்நாட்டுப் பகைவர்கள்

என்று அறிவித்து, அவர்களை அவதூறாக ஏசி, பேச முடியாமல் வாயடைத்துவிட்டால், நம் அரசியலின் குடியரசு அடையாளத்துக்கு ஆபத்து வரும்போது அதை எதிர்த்துப் போராட ஆளில்லாமல் போய்விடும்?" என்று எச்சரித்தார் ஹெபர்மாஸ்.

அது இன்றைய இந்தியாவுக்கு மிகவும் பொருந்தும். சுயேச்சையான அறிவுஜீவிகளைத் 'தேச விரோதிகள்' என்றும் 'நகர்ப்புற நக்ஸல்கள்' என்றும் இழிவுபடுத்த மோடி பக்தர்கள் தயாராகிவிட்டனர். இந்த நோக்கத்தில் நல்ல கல்வித்தரம் வாய்ந்த சில பொது பல்கலைக்கழகங்களையும் ஆய்வு மையங்களையும்கூட தூற்றத் தொடங்கிவிட்டனர்.

இத்தாலிய வாரப் பத்திரிகையான எல்'எக்ஸ்பிரஸோ ஒரு முறை ஹெபர்மாஸைப் பேட்டி கண்டது. "ஒரு ஜெர்மானியராக இருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டது. "சோவியத் ஒன்றியம் சிதறிய 1989, நாஜிகள் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்ட 1945 ஆகியவற்றை நம்மால் மறக்க முடியாமல் போய்விட்டது" என்று பதில் அளித்தார். இரண்டும் உலக வரலாற்றின் முக்கியமான ஆண்டுகள். இந்தியர்களுக்கு அப்படிச் சொல்ல வேண்டும் என்றால், ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்ட நெருக்கடி நிலை ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த 1977—ம், எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமை இல்லாததால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, மீண்டும் இந்திரா காந்தியே ஆட்சிக்கு வந்த 1980—ம் முக்கியமான ஆண்டுகள்.

## ஹெபர்மாஸூம் சென்னும்

இந்தப் புத்தகத்தைப் படித்த உடனேயே, இதே போல அமர்த்தியா சென் பற்றியும் யாராவது வாழ்க்கை வரலாற்று நூல் எழுத வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. ஹெபர்மாஸ், அமர்த்தியா சென் இருவருக்கும் இடையே பல ஒற்றுமைகள் உள்ளன. இருவருமே தங்களுடைய துறை மட்டுமல்லாமல், பிற துறைகளிலும் புலமை மிக்க அறிவுஜீவிகள். இருவரும் துடிப்பாகச் செயல்படும் பொதுச் செயல்பாட்டாளர்கள்.

மக்களை வாட்டும் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதில் ஆர்வம் மிக்கவர்கள். இருவருமே தொடக்க காலத்தில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் அடிப்படையில் பக்குவம் பெற்றவர்கள். ஹெபர்மாஸூக்கு உதட்டுப் பிளவும் நாஜிக்களின் வீழ்ச்சியும் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகள் என்றால், அமர்த்தியா சென்னுக்குப் புற்றுநோயும் இந்திய—பாகிஸ்தான் பிரிவினையும் முக்கிய நிகழ்வுகள்.

இருவரும் சொந்த நாடுகளில் விரும்பப்படுவதுடன்




உலக அளவிலும் அங்கீகரிக்கப்பட்ட பெரிய ஆளுமைகள். இருவருமே இடது, வலது சிந்தனாவாதிகளில் தீவிரவாதப் பிரிவினரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டவர்கள்.

இருவருக்கும் இடையில் வேறுபாடுகளும் உண்டு. ஹெபர்மாஸ் மெய்யியலாளராக இருந்து சமூகவியலாளராக மாறியவர். சென் பொருளாதார அறிஞராகத் தொடங்கி மெய்யியலாளராக மாறியவர். ஹெபர்மாஸ் ஜெர்மனியிலேயே எப்போதும் வாழ்ந்து பணி செய்தவர். சென் தனது இள வயதில் மட்டுமே இந்தியாவில் அதிகம் வாழ்ந்தவர். ஹெபர்மாஸ் நோபல் விருதை வாங்கவில்லை. அவர் மேதையாக விளங்கிய துறைகளை நோபல் பரிசுக் குழு பரிசுக்குரியதாகத் தேர்வுசெய்வதில்லை.

ஹெபர்மாஸ் பற்றிய நூல் அவரைத் தெய்வமாகப் போற்றிவிடவில்லையே தவிர, மிகுந்த மரியாதையுடன் எழுதப்பட்டிருக்கிறது. அமர்த்தியா சென் வாழ்க்கையும் பயனுள்ள ஆராய்ச்சிகளில் ஈடுபட்டது. பொருத்தமான ஒருவர் அவரைப் பற்றிய வரலாற்று நூலை எழுத வேண்டும். அவர் பொருளாதாரத்திலோ மெய்யியலிலோ தேர்ந்தவராக இருக்க வேண்டும். ஆனால், அவர் சென்னுடைய மாணவராகவோ, வங்காளியாகவோ இருந்துவிடக் கூடாது!

தமிழில்: சாரி



# அன்புடன்

## லண்டன்: காட்டுக்குள் ஒரு பெருநகரம்

அன்று அதிகாலையிலேயே எழுந்துவிட்டேன். மரங்களுக்காக அந்த ஒரு முழு நாளை ஒதுக்கிக்கொள்வது என்று முந்தைய இரவில் முடிவெடுத்தேன். ஏழு நாள் லண்டன் பயணத்தில், மரங்களுக்காக ஒரு நாள் எனும் திட்டம் யோசித்தபோது மனதுக்குத் திருப்தி அளிப்பதாக இருந்தது. அது எவ்வளவு பெரிய அசட்டுத்தனம் என்பது விடுதியை விட்டுக் கிளம்பி சாலையில் கால் வைத்ததும் புரிந்தது. விடுதியைச் சுற்றியே நோக்கி நகர்ந்துகொண்டிருந்தன. லண்டனிலிருந்து கடல்தூரம். ஆனால், காற்றில் கடல்வாடையடித்தது. ஒருவேளை இதுவரை அறிந்திராத ஏதேனும் ஒரு மரத்திலிருந்து வெளிப்படும் மணமாகவும் இருக்கலாம். அதிகாலைகளை மரங்கள் தங்களுடையதாக மாற்றிவிடுகின்றன. கருத்த, வெளுத்த, பழுப்பேறிய, சாம்பல் பூத்த மரங்களை ஒவ்வொன்றாகக் கடந்தேன். இன்னும் வெளிச்சம் முழுவதுமாகச் சூழாத அந்த அதிகாலையிலேயே நகரம் சுறுசுறுப்பாகியிருந்தது.



இப்போது ஏராளமான மரங்கள் நின்றன. பெரிய பெரிய மரங்கள். நிறைய வயதான மரங்கள். எப்படி முதல் நாள் முழுமையிலும் கண்ணில் படாமல் போயின!

அன்றைக்கு மழை இன்னும் தொடங்கியிருக்கவில்லை. இரவு மழை பெய்த தடம் காற்றில் கலந்திருந்தாலும் மண் உலர்ந்திருந்தது. வானம் கருநீலம் பூத்திருந்தது. மேகங்கள் கிழக்கு

விக்டோரியா பூங்காவுக்கு வரச்சொல்லியிருந்தார் ஹெலன். அங்கிருந்து ஒவ்வொரு பூங்காவாகப் பார்க்கலாம் என்று திட்டம். வாழ்க்கையை எவ்வளவு எளிமையாகத் திட்டமிட்டுவிடுகிறது ஒரு தமிழ் மனம்? மூன்று பூங்காக்களைப் பார்த்த மாத்திரத்தில் திட்டத்தின் அபத்தம் பல் இளித்தது. நகரம் எங்கிலும் மொத்தம் 3,000 பூங்காக்கள். பூங்கா என்பது பெயர்தான். எல்லாம் சிறு, குறு காடுகள். 35,000 ஹெக்டேருக்கு இவை பசுமை

# லண்டன்



**சமஸ்**

போர்த்தியிருக்கின்றன. சொல்லப்போனால், லண்டன் பெரிய நகர்ப்புறக் காட்டைத் தன்னுள்ளே உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருநகரம் என்று அதைச் சொல்லலாம் அல்லது வளர வளரப் பெருக்கும் ஒரு பெருநகரத்தைத் தன்னுள் உள்ளடக்கி விரித்துக்கொண்டேயிருக்கும் காடு என்றும் அதைச் சொல்லலாம். ஹெலன் சிரித்தார்.

“இங்குள்ள மரங்களைப் பார்க்க உங்களுக்கு ஒரு ஆயுள் போதாது சமஸ். லண்டனில் இன்றுள்ள மரங்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 84 லட்சம். இன்றைய மக்கள்தொகையுடன் ஒப்பிட்டால் கிட்டத்தட்ட ஒவ்வொரு லண்டன்வாசிக்கும் ஒரு மரம். மக்கள்தொகை ஏறஏற இந்த எண்ணிக்கையையும் அதிகரிக்க முயற்சி நடக்கிறது. இந்த மரங்கள் அத்தனையையும் ஒரே இடத்தில் தொகுத்தால் நகரின் 20% இடங்கள் மரங்களால் மட்டும் நிறைந்திருக்கும்.”

“எனக்கு உண்மையாகவே பெரிய பிரமிப்பாக இருக்கிறது ஹெலன். லண்டனைக் காட்டிலும் விகிதாச்சார அடிப்படையில் கூடுதலான பசுமைப் பரப்பைக் கொண்ட நகரங்கள் ஐரோப்பாவில் உண்டு என்பதை அறிவேன். ஆனாலும், லண்டனில் இவ்வளவு மரங்கள் ஆச்சரியம்தான். தொழில்மயமாக்கலை உலகுக்கு அறிமுகப்படுத்திய நாட்டின் தலைநகரம். அதன் எல்லாச் சீரழிவுகளையும் பார்த்த நகரம். உலகிலேயே அதிக மக்கள்தொகை கொண்ட நகரங்களில் ஒன்றாக வளர்ந்த நகரம். இன்னும் விரிந்துகொண்டேயிருக்கும் நகரம். உங்களால் மரங்களைத் தொடர்ந்து காக்க முடிகிறது?”



“தொடர்ந்து பாதுகாத்தோம் என்று சொல்ல

முடியாது. நீங்கள் குறிப்பிட்ட விஷயம்தான். தொழில்மயமாக்கல் காலகட்டம் பெரிய நாசத்தை லண்டனில் உருவாக்கியது. கணிசமான மரங்களை இழந்தோம். நீர்நிலைகள் நாசமாயின. சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. லண்டனில் பனி நாட்களில் தொழிற்சாலைப் புகையால் மக்கள் வெளியவே வர முடியாத சூழல் எல்லாம் இருந்திருக்கிறது. நான் சொல்வதெல்லாம் நூறு, இருநூறு வருடங்களுக்கு முன்பு. தொழில்மயமாக்கல் தொடங்கியே இருநூற்றைம்பது வருடங்கள் தொடுகின்றன, அல்லவா? 1950—களில்கூட நிலைமை சீரடைந்தது என்று சொல்ல முடியாது. ஆனால், மரங்கள் மீது கை வைப்பது என்பது ஏதோ ஒருவகையில் புனிதத்தோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. வருடத்தில் மரங்களைக் கொண்டாட மட்டும் லண்டனில் 60 நிகழ்ச்சிகள் நடக்கும்."

"எங்கள் தமிழ்க் கலாச்சாரத்திலும் மரங்களுக்குப் பெரிய இடம் உண்டு. சொல்லப்போனால், தலவிருட்சம் என்ற பெயரில் கோயிலுக்குக் கோயில் தனி மரங்கள் உண்டு. நாட்டார் மரபில் மரங்களே கடவுளாக வணங்கப்படுவதும் உண்டு. நெடிய கிராமியப் பண்பாடு எங்களுக்கு உண்டு என்பதை நீங்கள் படித்திருப்பீர்கள். அதற்கு இணையான இரண்டாயிரம் வருட நகரியப் பண்பாடும் உண்டு. என்னை எடுத்துக்கொண்டால், என்னுடைய சொந்த ஊரான மன்னார்குடி, ஒரு சிறுநகரம். கிட்டத்தட்ட ஆயிரம் வருடப் பழமையான ஊர். கச்சிதமாகத் திட்டமிட்டு வடிவமைக்கப்பட்ட நகரங்களில் ஒன்று அது. சின்ன ஊரில் நூறு குளங்கள் இருந்தன. ஊர் எல்லையில் சிறுவனங்கள் பராமரிக்கப்பட்டன. வரலாற்றின் ஏதோ ஒரு கணத்தில் இவ்வளவும் சடசடவென்று மக்களின் மறதிக்குள் போய்விட்டன. இன்று எல்லாம் மாறிவிட்டது. மரங்களை வெட்டுவது மிகச் சாதாரணமாகிவிட்டது. 'வளர்ச்சி', 'விரிவாக்கம்' என்ற பெயரில் ஒவ்வொரு நாளும் எங்கோ மரங்கள் கீழே வீழ்ந்தபடியே இருக்கின்றன."

"மேம்பாடு என்பது வேண்டியதுதான். ஆனால், எதைக் கொடுத்து எதை வாங்குகிறோம் என்று ஒரு கேள்வி இருக்கிறது இல்லையா?"

"மனித வாழ்க்கையில் மிக முக்கியமான கேள்வி அது. எதைக் கொடுத்து எதை வாங்குகிறோம்? அது ஒன்றை ஞாபகத்தில் வைத்திருந்தால் பல பிரச்சினைகளுக்குத் தேவையே இல்லையே! காந்தி இதைத்தான் ஆழமாகக் கேட்டார். பிரிட்டனையே இந்த விஷயத்தில் கடுமையாக அவர் விமர்சித்திருக்கிறார். அதேசமயம், இங்கு வளர்த்தெடுக்கப்பட்டிருக்கும் குடிமைப் பண்பை மெச்சவும் செய்திருக்கிறார். மக்கள்தொகை பிரச்சினையை எப்படி எதிர்கொள்கிறீர்கள்? வளரும் மக்கள்தொகைக்கு ஏற்ப நகரத்தை விஸ்தரிக்கும்போது மரங்களை எப்படிப் பாதுகாக்கிறீர்கள்?"

"இரண்டாயிரம் வருட வரலாற்றில் லண்டன் எல்லாக் காலங்களிலும் வளர்ந்தபடியே வந்திருக்கிறது. 1750—லேயே பிரிட்டனின் மக்கள்தொகையில் பத்தில் ஒரு பங்கினர் — 6.75 லட்சம் பேர் — லண்டனில் இருந்தார்கள். உலகில் முதலில் ஒரு மில்லியன் மக்கள்தொகையைத் தொட்ட ஐந்து நகரங்களில் ஒன்று இது. ஐம்பது லட்சம் மக்கள்தொகையைக் கடந்த முதல் நகரமும் இதுதான். தொழில்மயமாக்கல் காலகட்டத்தில் லீட்ஸ், மான்செஸ்டரில் ஏராளமான மக்கள் குவிந்தார்கள். அவ்வளவு தொழிற்சாலைகள் இங்கிருந்தன என்று சொல்லத்தக்க அளவுக்கு லண்டன் சூழல் இல்லை என்றாலும், லண்டனில் மக்கள் குவிவது நிற்கவே இல்லை. இன்றும் ஒரு சின்ன அறைக்குள் வாழ்பவர்கள் அவ்வளவு பேர் இருக்கிறார்கள். ஆனால், நகரம் காங்கிரீட் மேடாக மாறிவிடக் கூடாது என்ற எண்ணம் மட்டும் மக்களிடம் இருக்கிறது. அப்புறம் ஒரு பட்ட மரத்தைக்கூட முன் அனுமதியில்லாமல் இங்கே வெட்டிவிட முடியாது. நீங்கள் அறிந்தே ஒரு மரம் சேதமடையக் காரணமாக இருந்திருக்கிறீர்கள் என்றால், 20,000 பவுண்டுகள் வரை அபராதம் உண்டு. ஒருவேளை ஒரு மரத்தை வெட்ட அனுமதி அளிக்கப்பட்டாலும் அதற்கு மாற்றாக இன்னொரு மரத்தை வளர்க்க வேண்டும்."

"இதற்காகவே லண்டன்வாசிகளுக்குப் பெரிய சலாம் போடுவேன் நான்!"

"உங்கள் பாராட்டை நீங்கள் லண்டன் மேயரை நேரில் சந்திக்கும்போது சொன்னால் அவர் சந்தோஷப்படுவார். ஏனென்றால், அடுத்தடுத்து வரும் மேயர்கள் எல்லோருமே மரம் வளர்ப்பில் எவ்வளவு அக்கறையைக் காட்டினாலும், 'இதெல்லாம் போதாது' என்றே பெரும்பான்மை லண்டன்வாசிகள் நினைக்கிறார்கள். நான் உட்பட. விளைவாக, காற்று மாசை எதிர்கொள்ள மரம் வளர்ப்பு நீங்கலாக செயற்கை மரங்களை இப்போது நகரத்தின் முக்கியப் பகுதிகளில் அமைக்கிறார்கள்."

அப்படியான மரம் ஒன்றையும் ஹெலன் எனக்குக் காட்டினார். 'சிட்டி ட்ரீ' என்று அந்தக் கட்டுமானத்தைச் சொல்கிறார்கள். நான்கு சாலைச் சந்திப்பு ஒன்றில் அதைப் பார்த்தேன். செங்குத்தான புதர் வேலிப் பலகையை நிற்கவைத்ததுபோல அது காட்சியளிக்கிறது. பார்க்க பச்சைப்பசேலென்று இருக்கிறது. ஒருவகை பாசியில் செய்கிறார்களாம். அதில் உள்ள ஈரப்பசை காற்றில் கலந்து வரும் மாசுத்துகள்களையும் கெடுதல் செய்யும் கிருமிகளையும் ஈர்த்துக்கொள்ளுமாம். சுமார் 275 மரங்கள் உறிஞ்சும் அளவுக்கு இணையான



மாசை இந்த 'சிட்டி ட்ரீ' ஒவ்வொன்றும் உறிஞ்சுகிறதாம். லண்டன்வாசிகளின் மனநலன் சார்ந்து மட்டும் ஆண்டுக்கு 260 கோடி பவுண்டுகளைச் செலவிடுகிறார்கள். இப்படி ஒவ்வொரு நோய்க்கான காரணத்தையும் செலவையும் சுற்றுச்சூழலோடு பொருத்திப்பார்க்கிறார்கள். ஒவ்வொரு மரமும் இந்த வகையில் விலைமதிப்பற்றதாக மாறிவிடுகிறது.

பசுமை லண்டனுக்காகக் குரல்கொடுப்பவர்கள் சிலரைப் பற்றி ஹெலன் என்னிடம் சொன்னார். அவர்களில் டேனியல் ரேவன் எல்லிசன் என்னை ஈர்த்தார். புவியியல் ஆசிரியரான இவர், குழந்தைகள் — மாணவர்களிடம் ஏன் ஒரு நகரம் பசுமையாக இருக்க வேண்டும் என்பதையும் என்னென்ன வழிகளில் எல்லாம் லண்டனை மேலும் பசுமையாக்கலாம் என்றும் தொடர்ந்து பேசிவருகிறார்.

"மரங்களால் நகரின் பொருளாதாரத்துக்கு மறைமுகப் பலன் அதிகம். காற்றில் கலக்கும் கரியமில வாயுவை வெளியேற்றி பிராண வாயுவை மரங்கள் வாரி வழங்குகின்றன. நகரில் மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படாமல் காக்கின்றன. நகரின் வெப்பத்தைத் தணிக்கின்றன. மேய்ச்சல் நிலங்களைக்காட்டிலும் மரங்கள் அடர்ந்த பகுதியின் நிலம் மழை நீரை அறுபது மடங்கு அதிகம் உறிஞ்சிக்கொள்கிறது. முக்கியமாக நச்சுக்காற்றால் மோசமாகாமல், மக்களுடைய சுகாதாரம் பாதிக்கப்படாமல் மரங்கள் தணிக்கின்றன. இதன் மதிப்பு மட்டும் ஆண்டுக்கு 1,327 லட்சம் பவுண்டுகள் என்று சொல்வேன். குழந்தைகளிடம் நான் முக்கியமாகச் சொல்வதே லண்டனில் 13,000 வகை ஜீவராசிகள் இருக்கின்றன. இந்த 13,000 ஜீவராசிகளில் மனிதனும் ஒன்று என்ற புரிதல் நமக்கு வேண்டும் என்பதைத்தான். இன்று உலகில் இறக்கும் ஏழு பேரில் ஒருவர் காற்று மாசினால் இறக்கிறார்; பிரிட்டனை எடுத்துக்கொண்டால் வருடத்துக்கு 40,000 பேர் காற்று மாசினால் இறக்கிறார்கள். மரங்களை வெட்டுபவர்கள் ஒருவகையில் கொலையாளிகள்" என்கிறார் ரேவன் எல்லிசன்.

ஆயிரம் வருடங்களைக் கடந்த பல மரங்கள் லண்டனில் இருப்பதாகச் சொன்னார் ஹெலன். டாட்டரிட்ஜ் யியூவில் உள்ள மரம் மிகப் புராதனமானது என்றார். அந்திரேயர் தேவாலய வளாகத்தில் உள்ள இந்த மரம் 2,000 வருடங்கள் பழமையானதாம். "ஐயாயிரம் வருடப் பழமையான மரங்கள் அமெரிக்கக் கண்டத்தில் இருக்கின்றன. அந்த வகையில் பார்த்தால் நாங்கள் ஏழைகள்" என்றார்.

"ரொம்ப ஏழைகள்தான்" என்றேன்.

அன்று மாலை கொஞ்சம் சீக்கிரமாகவே ஹெலன் விடைபெற்றுக்கொண்டார். நன்கு இருட்டியும் விடுதிக்குத் திரும்ப மனமில்லாமல் வீதிகளில் சுற்றிக்கொண்டேயிருந்தேன். அநேகமாக எல்லா வீடுகளை ஒட்டியும் மரங்கள் நிற்கின்றன. வீட்டின் வாசலில், மாடி பால்கனியில் கொடிகளைப் படரவிட்டிருக்கிறார்கள். வீட்டுக்குப் பின்புறம் சின்ன தோட்டம். சாலைகளில் மரங்கள். மழைத் தூறல்கள் விழுந்தன. குடையை விரிக்க மனமில்லை. உடலும் குளிரவில்லை. இலக்கின்றி நடந்துகொண்டிருந்தேன். நெஞ்சமெல்லாம் குற்றவுணர்வு அப்பிக்கொண்டிருந்தது. எதை வாங்க இப்படி எல்லாவற்றையும் பறிகொடுத்துக்கொண்டிருக்கிறோம்?

# இலைசொரியும் இயற்கை அழகு !

பூக்களாய் இருந்த மேனி
பிரிகின்ற போதும் அந்த
ஆக்கமும் அறிவும் கூடி
ஆகிடும் அறிஞன் போலே
வீக்கமாய் மரத்துக் காகி
விருட்சமாய்ப் பழுத்துப் பின்பு
பூக்களாய்த் தோன்றும் இந்தப்
பொழுதிலும் அழகு என்னே!

உறைபனி தோன்றுங் காலம்
உருக்கொண்டு மாறுங் கோலம்
நிறைமலர் இல்லை யாக்கி
நிர்வாணம் ஆகுங் காலம்
கறையிலாக் கனடா நாட்டைக்
காவிய மாக்கிப் போகும்
குறையிலா அழகே உன்றன்
கோலத்தில் மனத்தை விட்டேன்!

மலையெலாம் நிறங்கள் மாறும்
வழியெலாம் ஆடை பூணும்!
இலையெலாம் நடனங் காட்டும்!
இயற்கையின் வடிவு எல்லாம்
கலையிலே முடியும் என்கக்
காட்சியில் வரையும் தெய்வச்
சிலையென ஆகும் வாழ்க்கை
தீர்ந்துமெய் ஆகும் காண்போம்!

பச்சையாய் இருந்த மேனி
பட்டென உடுக்கக் கண்டேன்!
இச்சையாய் அழைத்த சோலை
இலைகளில் லாமற் கண்டேன்!
பிச்சையில் முடிந்த வாழ்வாய்
மரங்களின் நிழலைக் கண்டேன்!
உச்சியின் வாழ்வென் றாலும்
உலகமே மாறும் அம்மா!

**தீவகம் வே.இராஜலிங்கம்**

## இயற்கை எழில்

வான்மிதந்து சென்றடையும் கதிரவனைத்
தான்தழுவி ஒளிஉமிழும் தண்நிலவில்
கண்நிறைந்த காட்சிகாண கடல்வெளியில்
மண்மீது படுத்தேன்என் கண்முன்னே

தொங்கிச் சுழலும்இப் பூமிப்பந்தில்
தங்கிவாழும் மக்கள்குலம் தழைக்க
பொங்கிவழியும் அழகுடன்நம் பூமித்தாய்
இங்கிருக்கும் மக்களுக்கே படைத்தாள்
குறிஞ்சிமுல்லை குறையாத மருதத்துடன்நாம்
அறிந்த நெய்தல்பாலை எனப் படைத்தாளே !

ஐவகைநிலத்தை அழகுடன் பார்த்தேன்
மூவகைத் தமிழுடன் முத்திரைபதித்து
பாவகையுடன் பைந்தமிழ்ப் புலவர்கள்
பாடக்கேட்டேன் இயற்கை எழில்பற்றி !எங்கு
பார்க்கினும் மக்களெல்லாம்
பொங்கும் மகிழ்ச்சியால் பூரித்ததையும்

வறுமையைப் புறந்தள்ளி வாழும்
வளமையும் கண்டேன் நாட்டில் !

இயற்கை அன்னை ஈந்தளித்த
எழில் நலத்தை எம்மக்கள்
செயற்கையால் அழிக்காமல் சிறப்போடு
செம்மைவாழ்வு வாழும்நிலை கண்டேன் !
“செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத்தேன் வந்துபாயுது காதினிலே “
என்னை அறியாமல் எட்டயபுரத்து
எழிற்கவிஞன் பாடியதை என்வாய்

பாடக்கேட்டு மணலில் படுத்தவன்
பதறிஎழுந்தேன் பக்கமெல்லாம் பாழ்வெளி
கண்ட இயற்கை எழில்எல்லாம்
கனவுதான் என்றே கருதிக்கொண்டேன்!

**இளையவன்**

# வாழ்த்துப் பாட்டு

எதுகையென்ன? மோனையென்ன? கவிதை என்றால்
எழுத்தசையும் சீர்த்தளையும் தேடி சோர்ந்த
பதுங்குவதா? பிதுங்குவதா விழிகள்? இல்லை!
பாவேந்தர் பேரனென்ற ஊக்கத் தோடு
மெது மெதுவாய்ப் பயின்றேன்காண் கவிதை பாடம்
மெய்மறந்தேன் அதன் சுவையில் ஒன்றிப் போனேன்!
இதுவரையில் இலக்கியத்தின் சுவையை நாட
யான்பெற்ற இன்பங்கள் கோடி கோடி!

வாழ்வுமெங்கள் வளமுஉயர் தமிழே என்ற
வழங்காத வாயுண்டோ தமிழர் தம்மில்!
ஆழ்கடலில் முத்தெடுத்த களிப்புப் பொங்க
அருந்தமிழர் நாமணக்கும் அமுதப் பாட்டாய்
சூழ்புரியும் பாவேந்தர் வரிகள் என்றும்
சுடர்ந்திருக்கும் உண்மையதை மறுப்பாருண்டோ!
யாழ்குழலின் இசையெல்லாம் இணைத்து வார்க்கும
இன்சுவையின் எல்லைவரை கவிதை செல்லும்!

துறைதோறும் கவிதைகளே இன்பம் சேர்க்கும்
தொட்டதெல்லாம் துலக்கமுற ஒளியைப் பாய்ச்சும்
நிறைவான எழுச்சித்தரும் வீரப் பாட்டா
நித்திரைகொள் மழலையர்க்கு பூந்தா லாட்டா
விரைவான வெற்றிகண்டால் பரணி பாட்டா
வீறுபெறு தமிழா நீ அச்சம் ஓட்டு!
மறையாநற் புகழ்சிறக்க வாழ்த்துப் பாட்டு!

கவிஞர் க.பெருமாள்

# புதிய புயல்! ஆந்திரத்தின் அதிரடி அலை! மையம் கொள்ளட்டும்!

தமிழகத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய `மெட்ராஸ் கஃபே' படத்தில் ஹிரோயினாக அறிமுகமாகி பின் ஆந்திரா, கேரளா என மையம் கொண்ட ராஷி கண்ணா புயல் சென்னையை வந்தடைந்திருக்கிறது. தமிழில் சித்தார்த் நடிக்கும் `சைத்தான் கி பச்சா', ஜெயம் ரவியுடன் `அடங்க மறு', அதர்வாவுடன் `இமைக்கா நொடிகள்', விஷால் நடிக்கும் புதிய படம் என்று வரிசையாக தமிழ்ப் படங்கள் ராஷிக்கு தவம் கிடக்கின்றன.



# அலறப் போகுது இளைய பட்டாளம்!

தெலுங்கு படமான 'அர்ஜுன் ரெட்டி' மூலம் தமிழிலும் பிரபலமான நடிகர் விஜய் தேவரகொண்டா. இப்போது இவர் 'நோட்டா' என்னும் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகிறார். ஸ்டுடியோ கிரீன் தயாரிப்பில், ஆனந்த் சங்கர் இயக்கத்தில் உருவாகும் இந்தப் படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவில் விஜய் தேவரகொண்டா பேசும்போது, "முதல் பத்திரிகையாளர் சந்திப்பின்போது மற்றவர்கள் பேசுவது புரியாமல் தவித்தேன். ஆனால் இப்போது நல்ல தமிழில் நானே பேசுவேன். அதுமட்டுமல்ல, திருக்குறளும் படித்து வருகிறேன். இந்த படத்தின் மூலம் தமிழ் மக்களின் மனதை வெல்ல வேண்டும் என்பதுதான் என் ஆசை!" என தெரிவித்துள்ளார். இவரது வருகையால் இங்குள்ள இளைய நடிகர்கள் பலரும் ஏனோ அதிக எதிர்பார்ப்பில் உள்ளனர்.



## பலமுக மன்னன்!

தனுஷ் நடிகராக அறிமுகம் ஆகி பின்பு பாடலாசிரியர், பாடகர், தயாரிப்பாளர், என மாறி, ‘பவர் பாண்டி’ படத்தின் மூலம் இயக்குனரானார். இயக்கிய முதல் படத்திலேயே, வயதான மனிதர்களின், பழைய காதல் உணர்வுகளை அற்புதமாக காட்டி பாராட்டு பெற்றார். தற்போது மீண்டும் புதிய படத்தை இயக்கி வருகிறார். அந்த படத்தில், தனுஷ், நாகர்ஜுனா, அதிதி ராவ், சரத்குமார், எஸ்.ஜே.சூர்யா, ஸ்ரீகாந்த் ஆகியோரும் முக்கியக் கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள். இந்தப் படம் இந்தியா சுதந்திரம் பெறுவதுக்கு முன்பு இருந்த கால கடத்தில் கதைகளம் இருப்பதாக கூறுகிறார்கள். ‘மதராசபட்டினம்’ போல் இப்படம் பெரும் வெற்றி பெரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தனது பன்முகத் திறமையால் உயர்கிறார் தனுஷ்.

## திறமை நாயகன்!



## தன்னை உணர்ந்தவர்!



நடிகை அர்த்தனா பினு, ‘கடைக்குட்டி சிங்கம்’ படத்தை தொடர்ந்து ‘வெண்ணிலா கபடிக்குழு 2’ படத்தையும் முடித்துவிட்டார். “நான் முதலில் நடிக்க ஒப்பந்தமான படம் இதுதான். ஆனால், ‘தொண்டன்’, ‘கடைக்குட்டி சிங்கம்’ படங்கள் முந்திக்கொண்டன. இந்தப் படத்திலும் தமிழ் கலாச்சார கெட்டப்பில் வருகிறேன். ஒரேமாதிரியாக நடிப்பதில் இஷ்டம் இல்லை. அதற்காக, எல்லாவிதமான கதாபாத்திரங்களையும் ஏற்கமாட்டேன். ஒரு எல்லைக்குள் வித்தியாசமாக நடிப்பேன். என்று உறுதி காட்டும் அர்த்தனா, தமிழில் இரண்டு புதிய படங்களிலும், மலையாளத்திலும் சில படங்களில் நடித்து வருவதோடு தன் முதுகலைப் படிப்பையும் தொடர்கிறார்.

## எல்லைக்குள் நடிகை!


# மங்காத தமிழென்று

### ஜேம்ஸ் எச்.கஸின்ஸ்: பாரதி கவிதைகளின் முதல் மொழிபெயர்ப்பாளர்

மகாகவி பாரதியின் பாடல்களை உலக மொழிகளிலெல்லாம் மொழிபெயர்க்க வேண்டும் என முதலில் கனவு கண்டவர் பாரதிதாசன். 'தராதலத்துப் பாஷைகளில் அண்ணல் தந்த தமிழ்ப்பாட்டை மொழிபெயர்த்தால் தெரியும் சேதி' என்று அவர் பாடினார்.

பாரதியின் 'சுதேச கீதங்கள்' கவிதை நூலுக்கு ஆங்கிலேய அரசாங்கம் 1928—ல் தடைவிதித்தபோது, காந்தியடிகள் தம் ஆங்கில ஏடான 'யங் இந்தியா'விலும் குஜராத்தி ஏடான 'நவஜீவ'னிலும் பாரதி பாடல்களின் மொழிபெயர்ப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டார். சுதந்திர இந்தியாவின் பிரதமர் நேரு 1963—ல் பாரதியின் பாடல்கள் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் எனக் கருத்துரைத்தார்.

இன்று உலக மொழிகள் பலவற்றிலும் பாரதி பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ராஜாஜி தொடங்கி செக் நாட்டின் கமில் சுவலபில் வரை பலரும் மொழிபெயர்த்திருக்கின்றனர். 'செக் மொழியில் பாரதி பாடல் தொகுதி ஒன்று பல லட்சம் பிரதிகள் விற்றுள்ளதாம்' என்று ரா.அ.பத்மநாபனின் 'சித்திர பாரதி' நூலில் ஒரு குறிப்பு உள்ளது. பாரதியின் கவிதைகளை மொழிபெயர்க்கும் முயற்சி இன்று நேற்றல்ல, பாரதி வாழ்ந்த காலத்திலேயே தொடங்கிவிட்டது. பாரதியே தன் கவிதைகள் சிலவற்றை முதலில் மொழிபெயர்த்திருக்கிறார். ஆங்கிலேய அரசுக்குச் சமர்ப்பிப்பதற்காக அரசின் மொழிபெயர்ப்பாளர்கள் பல கவிதைகளை மொழிபெயர்த்தனர் என்பதும் வரலாறு.




### புதிய இந்தியாவில் விடுதலை கீதம்

பாரதி வாழ்ந்த காலத்திலேயே புகழ்பெற்றிருந்த அயல்நாட்டு அறிஞர் ஒருவர் பாரதி பாடலை முதன்முதலாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கின்றார். அவர்தான் அயர்லாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ் எச்.கஸின்ஸ்.

சங்கே

# முழங்கு!

## ய.மணிகண்டன்

அந்தக் கவிதை மொழிபெயர்ப்பு அன்னிபெசண்ட் நடத்திய 'நியூ இந்தியா' இதழில் 21.06.1916 அன்று வெளிவந்தது. 'வேண்டுமடி எப்போதும் விடுதலை' எனத் தொடங்கும் 'விடுதலை' என்னும் கவிதையே அவரால் 'லிபரேஷன்' என்னும் தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டது.

பாரதியின் கவிதையை முதலில் மொழிபெயர்த்ததோடு, பாரதியை அவர் வாழும் காலத்திலேயே இந்தியாவின் நான்கு முதன்மையான கவிஞர்களுள் ஒருவராகவும் கஸின்ஸ் மதிப்பிட்டிருந்தார். பிற மூன்று கவிஞர்கள் அரவிந்தர், தாகூர், சரோஜினி நாயுடு. அந்தப் பதிவு அன்னிபெசண்ட் நடத்திய 'காமன்வீல்' இதழில் 08.12.1916—ல் இடம்பெற்றது.

அயர்லாந்து நாட்டிலிருந்து வருகைதந்து அன்னிபெசண்ட்டோடு இணைந்து செயல்பட்டவர் கஸின்ஸ். சிறந்த கவிஞராகவும் திறனாய்வாளராகவும் திகழ்ந்த இவர் பெசண்ட் நடத்திய இதழில் இலக்கியப் பகுதிக்குப் பொறுப்பேற்றிருந்தார். மதனப்பள்ளியில் நிறுவப்பட்டிருந்த கல்லூரியிலும் பதவிவகித்தார். பல முக்கியமான நூல்களை எழுதிய அவர் சிலகாலம் ஜப்பான் 'இம்பீரியல்' பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றினார். இப்படிப்பட்ட பெருமைக்குரிய இவர்தான் பாரதி எழுதிய கவிதையை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவராக வரலாற்றில் முகங்காட்டுகின்றார்.

பாரதியின் 'வேண்டுமடி எப்போதும் விடுதலை' கவிதையைக் கஸின்ஸ் மொழிபெயர்த்ததையும், அந்த மொழிபெயர்ப்பு ஏற்படுத்திய விளைவையும் பாரதிதாசன் விரிவாகவும் சுவையாகவும் தனது 'தேன்கவிகள் தேவை' என்னும் கவிதையில் விவரித்துள்ளார். 'சுதேசமித்திரன்' இதழ் பாரதியின் கவிதைகளுக்கு முக்கியத்துவம் தராமல், அவரது உரைநடைக்கே முக்கியத்துவம் தந்த நிலையை, 'நியூ இந்தியா'வில் வெளிவந்த இந்த மொழிபெயர்ப்பு மாற்றியமைத்து,



அவரது கவிதைகளை 'சுதேசமித்திரன்' வெளியிட வழிவகுத்ததாம். பாரதிக்கு இதனால் மகிழ்ச்சி ஏற்பட்டது என்று பாரதிதாசன் எடுத்துரைத்துள்ளார்.

கஸின்ஸ் பாரதியைச் சந்தித்திருக்கலாம். பாரதியும் கஸின்ஸை நன்றாக அறிந்திருந்தார். பாரதியின் நூல் வெளியீட்டு முயற்சிக்காகப் பாரதியின் பார்வையில் உருவான 'தமிழ் வளர்ப்புப் பண்ணை' அறிக்கையில் கஸின்ஸ் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தார்:

"ஐர்லாந்து தேசத்து மஹா கவிகளில் ஒருவரும், ஜப்பான் தேசத்தின் ராஜதானியாகிய டோக்கியோ நகரத்திலுள்ள இம்பீரியல் யூனிவர்ஸிடி என்ற ஸாம்ராஜ்ய ஸர்வ கலா ஸங்கத்தில் இங்கிலீஷ் ஆசிரியராக விளங்கியவருமாகிய ஜேம்ஸ்—எச்—கஸின்ஸ் என்பவர் இவருடைய தமிழ்ப் பாட்டுக்கள் சிலவற்றை இங்கிலிஷில் மொழிபெயர்த்து மேல் நாட்டார் வியப்புறும்படி செய்திருக்கிறார்."

இந்தப் பதிவு பாரதியின் சில கவிதைகளை கஸின்ஸ் மொழிபெயர்த்ததற்கு முக்கியச் சான்றாகும். எனினும், இதுவரை கஸின்ஸ் மொழிபெயர்த்த ஒரு கவிதை மட்டுமே கிடைத்திருந்தது. பாரதியியல் அறிஞர் சீனி.விசுவநாதன் இந்த அறிக்கை வழங்கும் செய்தியின்படி கஸின்ஸ் மொழிபெயர்த்த வேறு கவிதைகளும் இருத்தல் வேண்டும் என்பதனையும் அவற்றைத் தேட வேண்டும் என்பதனையும் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"தமிழ் வளர்ப்புப் பண்ணை அறிக்கையில், ஜேம்ஸ் எச்.கஸின்ஸ் அவர்கள் பாரதியின் பாடல்கள் சிலவற்றை மொழிபெயர்த்துள்ளதாகத் தெரிவித்திருந்தபோதிலும், நமக்குக் கிடைத்துள்ளது இந்த விடுதலைப் பாட்டு ஒன்று மட்டும்தான். ஜேம்ஸ் எச்.கஸின்ஸ் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்ட பாரதியின் வேறு சில பாடல்கள் கிடைக்க வழி உண்டா? என்பதை அறிய பாரதீய உலகம் முயல வேண்டும்." (காலவரிசை. பாரதி படைப்புகள், தொகுதி. 12, பக். 423) கஸின்ஸ் மொழிபெயர்த்த பாரதி பாடல் ஒன்று மட்டுமே இதுவரை கிடைத்திருக்கிறது. எனவே, பாரதி பாடல்கள் சிலவற்றை அவர் மொழிபெயர்த்ததாகக் குறிப்பிடும் வாசகம் மிகை நவிற்சியோ என ஐயுறுவாரும் தமிழுலகில் உள்ளனர். இந்நிலையில், கஸின்ஸ் மொழிபெயர்த்த பிறிதொரு பாரதி பாடல் இப்போது புதிதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

1917—ல் வெளிவந்த கஸின்ஸின் 'தி கார்லாண்ட் ஆஃப் லைஃப்' (போயம்ஸ் ஆஃப் வெஸ்ட் அன்ட் ஈஸ்ட்) என்னும் நூலில் இம்மொழிபெயர்ப்புக் கவிதை வெளிவந்துள்ளது. 'சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ?' எனத் தொடங்கும் 'கண்ணம்மா என் காதலி' பாடலையே கஸின்ஸ் மொழிபெயர்த்து இந்நூலில் வெளியிட்டுள்ளார். இம்மொழிபெயர்ப்பு 'எ கோபி சாங்க் டூ கிருஷ்ணா' என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. இந்நூலில் இக்கவிதை 'இந்தியன் பாராப்ரேசஸ்' என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்தியக் கவிதைகளுக்கான இப்பகுதியில் கஸின்ஸ் தமிழுக்கே முதலிடம் தந்திருக்கின்றார்.

தமிழிலிருந்து மொழிமாற்றம் செய்த கவிதைகளை முதலில் இடம்பெறச் செய்த பின்னரே மராட்டியின் துக்காராம் கவிதையையும், ரகுநாத பண்டிதர் கவிதையையும் சம்ஸ்கிருதத்தின் பர்த்ருஹரி கவிதையையும், இந்தியின் ராணி மீராபாயின் கவிதைகளையும் மொழிமாற்றம் செய்து வெளியிட்டுள்ளார். தமிழிலிருந்து இரு கவிதைகளைக் கஸின்ஸ் மொழிமாற்றம் செய்து உலகுக்கு அறிமுகம் செய்துள்ளார். தமிழிலிருந்து முதலிடம் பெறுவது பாரதியின் கவிதை. அடுத்து, 'நாமார்க்கும் குடியல்லோம்' என்னும் அப்பர் கவிதையின் மொழிபெயர்ப்பு இடம்பெற்றுள்ளது. இந்திய அளவில் மொழிபெயர்த்து உலகுக்கு அறிமுகம் செய்யப்பெற்ற கவிஞர்களுள் சமகாலக் கவிஞராகப் பாரதி மட்டுமே விளங்குகின்றார். இந்த ஆங்கில ஆக்கத்தைத் துல்லியமான மொழிபெயர்ப்பு வடிவம் என்பதைவிடச் சாரத்தை உள்ளடக்கிய மொழிமாற்று வடிவம் என்பது பொருத்தமாக இருக்கும். கஸின்ஸே 'இந்திய மொழிக் கவிதைகளை வரிக்கு வரி மொழிபெயர்ப்பது என்பது இயலாத செயல்' எனவும் குறிப்பிட்டுள்ளார். சிருங்கார பாவம் விஞ்சியிருக்கும் ஒரு பகுதி கஸின்ஸின் ஆங்கில மொழிபெயர்ப்பில் விடுபட்டுள்ளது.

பாரதி குறித்த ஒரு முக்கியமான குறிப்பையும், இக்கவிதை மொழிபெயர்ப்பு தொடர்பான சில செய்திகளையும் நூலின் இறுதியில் தனியே பதிவு செய்துள்ளார் கஸின்ஸ். பாரதி பாடலை மொழிபெயர்க்கும்போது, பரம்பொருளை அடைய முயலும் மனித ஆன்மாக்களைப் பெண்கள் எனவும் இறைவனை ஆண் எனவும் வழக்கமாகக் கொள்வதுபோலக் கொண்டு முதலில் எண்ணியதாகவும், பின்னரே பாரதி ஆன்மாவை ஆணாகவும் பரம்பொருளைப் பெண்ணாகவும் படைத்திருப்பதனை அறிந்துகொண்டதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

பாரதியைப் பற்றி இந்தக் குறிப்பில் கஸின்ஸ், 'சி.சு.பாரதி நன்கு அறியப்பட்ட தமிழ்க் கவிஞர்' எனவும், சென்னைக்குத் தெற்கே சில கல் தொலைவில் உள்ள புதுச்சேரி என்னும் பிரெஞ்சு ஆட்சிப் பகுதியில் அரசியல் அகதியாக அரவிந்தரோடு வாழ்ந்துவருகின்றார் எனவும் பதிவு செய்துள்ளார். இப்போது புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள இம்மொழிபெயர்ப்புக் கவிதையும், குறிப்பும் பாரதி சமகாலத்தில் உரிய இலக்கிய வட்டங்களில் சிறப்பாக மதிக்கப்பட்ட நிலையை உணர்த்துகின்றன.

# புத்தக விமர்சனம்

## நடைவெளிப் பயணம்

**ஆசிரியர் : அசோகமித்திரன்**

**கட்டுரைத் தொகுதி**

**விலை : ரூ. 130**

**வெளியீடு :**
**சூரியன் பதிப்பகம்,**
**229 கச்சேரி ரோடு,**
**மயிலாப்பூர், சென்னை 600 004**




குங்குமம் இதழில் தொடராக வந்திருந்த கட்டுரைத் தொகுப்பு இது. பலவிதங்களில் இப் புத்தகம் சிறப்பாக இருப்பதற்குக் காரணம், 83வயதாகும் அசோகமித்திரன் தன் அனுபவங்களைப் பிழிந்து கொடுத்திருப்பதுதான். 'மேலும் படிக்க' என்ற தலைப்பில் என்னன்ன புத்தகங்கள் ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்கலாம் என்பதைக் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடும் புத்தகங்களை வாங்கிப் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தை படிப்பவர்களுக்கு உண்டாக்குகிறார்.

அசோகமித்திரரன் கட்டுரையில் அவ்வப்போது நகைச்சுவை தன்மையும் வெளிப்பட்டுக் கொணடிருக்கும். தி.க.சியின் தங்கத் தாமரை நாட்கள் என்ற கட்டுரையில், ஜஎன் பக்கத்து வீட்டுக்காரர், "உங்களுக்குத் தினம் இவ்வளவு தபால்கள் வருகின்றனவே, என்னிடமும் ஒரு பத்திரிகையைத் தாருங்களேன்," என்று கேட்டார். நான் அவரிடம் 'சோவியத் பலகனி' சில இதழ்கள் கொடுத்தேன். அவர் என்னோடு பேசுவதையே விட்டுவிட்டார்' இப்படி எழுதுவதுதான் அசோகமித்திரன்.

அசோகமித்திரனின் கதைப் புத்தகத்தைப் படித்தாலும், கட்டுரைப் புத்தகத்தைப் படித்தாலும் பெரிதாக வித்தியாசம் இருக்காது. கட்டுரைகளைக் கூட கதைகள் மாதிரி எழுதும் அசோகமித்திரன், வாசகனைக் கவர்ந்திழுக்கும் திறமையை அறிந்து வைத்திருப்பதை இந்நூல் வாயிலாகத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறார்.



# நந்தினியின் வாள்

கொற்றவன்

**வா**ள் ஏந்திய கோலத்துடன் கருவறையில் நிற்கும் காளியின் சிலைபோல நின்று கொண்டிருந்த நந்தினியின் கோலத்தைப் பார்த்து பேச்சற்றவளாய் தானும் சிலையாகிப் போனாள் ராக்கம்மாள்.

இந்த முதிய வயதில் எத்தனையோ பார்த்துவிட்ட தன்னையே இந்த சின்னப்பெண் தினம் தினம் திக்குமுக்காட வைத்து விடுகிறாளே என்ற நினைப்பு மேலிட வியப்பு விலகாமல், வைத்த கண் வாங்காமல் நந்தினியின் மீதே பார்வையைப் பதித்தபடி நின்றிருந்தாள் ராக்கம்மாள்.

முன்னிரவு நேரத்தில், மண்ணெண்ணெய் விளக்கின் மங்கிய வெளிச்சம் பரவும் அந்தச் சின்னஞ்சிறிய மண்குடிசையின் நடுக்கூடத்தில் சட்டை பாவாடை அணிந்த சிலையாய் நின்றிருந்தாள் நந்தினி.

உயர்த்திப் பிடித்த வாள் போல அவளது வலக்கையில் ஒரு பேனா வான் நோக்கிப் பார்த்திருந்தது. இடுப்பில் கம்பீரமாக மடித்திருந்த இடக்கையில் கனத்த புத்தகம் ஒன்று இருந்தது.

"ஆயி... மகமாயி... மதுரவீரன் செல கணக்கா மவராசி இப்படி நிக்காளே! என்னத்த படிச்சு, எதை நெனச்சி நிக்காளோஞ்" ஒட்டி உலர்ந்து சுருக்கங்கள் மிகுந்த தன் கன்னத்தில் கை வைத்தபடி புலம்பினாள் ராக்கம்மாள். அவள் வந்து வாய் பிளந்து நிற்பதைச் சற்றும் உணராதவளாய் சிலையென நின்றிருந்த நந்தினியின் உதடுகள் முணுமுணுத்தன.

"இதோ... இந்த வாளின் துணைகொண்டு நான் எனது சாம்ராஜ்யத்தை கட்டியெழுப்பப் போகிறேன்! என் ஆட்சியில் மக்களுக்கு ஒரு குறையும் இருக்காது!"

"மகமாயி... மகமாயி... என் பேத்தி தனியா பேசறாளே... தனியா பேசறாளே! என்ன பண்ணுவேன்? ஊருசனம் என்ன சொல்லுமோ?" உரக்க ஒலித்த பாட்டியின் வார்த்தைகள் கவனம் திருப்பியதில் நந்தினி சட்டெனத் தன்னுணர்வு கொண்டவளாகத் திரும்பினாள்.

"வா, ராக்கு! என்ன புலம்பறே?" மலர்ந்த முகத்துடன் அவளை எதிர்கொண்டாள் நந்தினி.

"என்னாது? நான் புலம்பறேனா? இவ்வளவு நேரமா நீதான்டி தனியா நின்னு பேசிக்கிட்டு இருந்தே! நீ நின்ன கோலமும்... பேசின தோரணையும்... செத்தநாழி எனக்கு வெலவெலன்னு போச்சுடி! பொட்ட புள்ளய ஏன் கெழவி இன்னும் படிக்க வைக்கிறேன்னு ஊரிலே பலபேரு என்ன வையறானுவே!"

"இப்போ என்ன ஆச்சுன்னு வந்ததும் வராததுமா ஒரே குய்யோமுய்யோங்கிறே?"

“இன்னும் என்னடியம்மா ஆகணும்? படிச்சி படிச்சி தனியா புலம்பற அளவுக்கு ஆயிட்டியே... இதுக்கு மேல வேற என்ன ஆகணும்?”

“இதான் உன்கிட்ட எனக்குப் பிடிக்காத குணம்! என்ன ஏதுன்னு தெரியாம சலிச்சுக்கிறே பாரு, போ! உன்கிட்ட இனிமே என்ன பேச்சு வேண்டி கிடக்கு?” சற்றே கோபமாக சொல்லிவிட்டு விடுவிடுவென வாசற்படியில் போய் உட்கார்ந்த நந்தினி, தன் மடியில் வைத்துக்கொண்ட புத்தகத்தில் பார்வையை நிலைகுத்தியபடி தலை கவிழ்ந்தாள்.

அவளையே பார்த்த வண்ணம் நின்றிருந்த ராக்கம்மாளின் பார்வை தன்னிச்சையாய் அக்குடிசையின் ஒரு மூலையை நோக்கித் திரும்பியது. அங்கே மாலையிட்ட புகைப்படமாய் ராக்கம்மாளின் மகளும் மருமகனும் சிரித்த முகத்துடன் காட்சி தந்தனர்.

பக்கத்துக் கிராமத்துக்கு வயல் வேலைக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் வழியில், நெடுஞ் சாலை விபத்தொன்றில் அவர்கள் பலியாகிவிட, தாய் தந்தை இருவரையும் ஒரே நாளில் இழந்தாள் ஐந்து வயது சிறுமியான நந்தினி.

அன்றுமுதல் தன் ஒரே சொந்தமான பேத்தி நந்தினியை வளர்த்தெடுப்பதே இலட்சியமாய் கொண்ட ராக்கம்மாள், கிராமத்தில் இருக்கும் சில மேல்தட்டு வீடுகளில் பத்து பாத்திரம் தேய்த்தும், வயல் வேலை, கூலி வேலை எனக் கிடைத்த வேலைகளைச் செய்தபடியே நந்தினியைப் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறாள். நந்தினியும் சூழலை உணர்ந்து படிப்பில் கெட்டிக்காரியாக பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்றுத் தேறியிருக்கிறாள்.

மாலையிட்ட படத்தில் கண்களைப் பதித்திருந்த ராக்கம்மாளுக்குள், சட்டென அலைமோதி உடைத்த கரையைப்போல் ஏதோ ஒன்று சரிந்து விழுந்தது. மானசீகமாய் மன்னிப்புக் கேட்பதுபோல கண்கள் சற்றே துளிர்த்தன. பேத்தியை நோக்கி அவளது கால்கள் தானாய் நடக்க, அமைதியாய் நந்தினியின் அருகில் சென்று அமர்ந்தாள்.

குடிசையை ஒட்டிய மண்பாதையில், மேய்ச்சல் முடிந்து மந்தை




மந்தையாய் கால்நடைகள் வீடு திரும்பிக் கொண்டிருந்தன. வேலியாய் இருக்கும் மூங்கில் படல்களை ஒட்டியும் உரசியும் ஒன்றையொன்று கடந்து செல்லும் கால்நடைகள் நந்தினியின் கவனத்தை ஈர்த்தன.

இந்த மந்தைகளைப் போலவே மனித வாழ்க்கை ஓடுகிறது. காலையில் எழுவதும், வேலைக்குப் போவதும், வீடு திரும்புவதுமே வாழ்க்கை என்றாகி, வந்ததும் தெரியாமல் போவதும் தெரியாமல் மறைந்து போகின்றனர் இந்த மக்களில் பலர்.

வாழ்க்கையை மகத்துவமாக மாற்றிக்கொள்ளும்



மந்திரம் ஒன்று இருப்பதை ஏன் மறந்து போகிறார்கள்? அந்த வித்தையைத் தெரியாமல் தடுமாறுகிறார்களா? அல்லது தெரிந்தே தவற விடுகிறார்களா? எந்தப் புள்ளியில் மனிதர்கள் தங்கள் வாழ்க்கைக் கோலத்தை அலங்கோலப்படுத்திக் கொள்கிறார்கள்? நந்தினிக்குள் சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது.

“ஆத்தா மேலே கோபமா?” ராக்கம்மாளிடமிருந்து வாட்டத்துடன் வெளிப்பட்ட வார்த்தைகளுக்கு மதிப்பளித்து மெதுவாக முகம் திருப்பினாள் நந்தினி. வயோதிகம் தட்டிப் போயிருந்த ராக்கம்மாளின் முகத்தில், தவறிழைத்துவிட்ட குழந்தையின் பயம் தெரிந்தது.

“நீ நின்ன கோலத்தைப் பார்த்து கொஞ்சம் பதட்டமாயிடுச்சு நந்தினி! ஏதோ கொஞ்சம் உளறிட்டேன்ம்மா... வயசாயிடுச்சு பாரு, அதான் வார்த்தை வாயிலேயே நிக்க மாட்டேங்குது! வந்து உழுந்துடுது!” நந்தினியின் தலையை வருடியபடி சொன்னாள்.

தன் பொய்க் கோபத்தை இனியும் நீடிக்க வேண்டாம் என நந்தினி நினைத்த அதே கணத்தில் அந்தக் கேள்வியைக் கேட்டாள் ராக்கம்மாள்.

“ஆயி, ஏன் அப்படி செல கணக்கா கையைத் தூக்கிக்கிட்டு நீ நின்னே?”

“ம்! இப்ப கேட்கிற இந்தத் தன்மையோட இதை நீ அப்பவே கேட்டிருக்கலாம் ஆத்தா! பரவாயில்லை, இப்பவாவது கேட்டியே! சொல்றேன் கேளு!” என்றவள், தன் கையிலிருந்த ‘பொன்னியின் செல்வன்’ புத்தகத்தில் சரசரவென பக்கங்களைப் புரட்டினாள்.

‘கல்கி’ வார இதழில் நெடுந்தொடராக, அழகழகான ஓவியங்களுடன் வெளிவந்த ‘பொன்னியின் செல்வன்’ வரலாற்றுப் புதினத்தின் பக்கங்களை எல்லாம் நேர்த்தியுடன் ஒழுங்குபடுத்தி, ஒன்றாகத் தொகுத்து, பக்குவமாய் ‘பைண்ட்’ செய்து வைத்திருக்கும் நந்தினி, ஒவ்வொரு வாரமும் கல்கி எப்போது வரும் என்று காத்திருந்து காத்திருந்து ஒரு தவம்போல வாசித்து, நேசித்து அதனைப் பத்திரப்படுத்தியிருக்கிறாள். அதன் ஒவ்வொரு அத்தியாயங்களும் அவளுக்கு அத்துபடி!

“ஆத்தா, இதோ பார், இவதான் நந்தினி!” தன் கையில் விரித்து வைத்த பக்கத்தில், வாள் ஒன்றைப் பிடித்தபடி நிற்கும் அழகு ததும்பும் ஒரு ஓவியப் பெண்ணை அவள் காட்ட, ராக்கம்மாள் அந்த ‘நந்தினி’யை வியப்புடன் பார்த்தாள்.

“அடி ஆத்தி! இவ பேரும் நந்தினியா? இத்தே பெரிய கத்தியை வச்சுக்கிட்டில்லே நிக்கிறா!”

“ஆமா! இந்த வாளுக்குப் பின்னாடி ஒரு பெரிய கதையே இருக்கு! இந்த கத்தியை வைச்சிக்கிட்டு

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப்
பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும்
சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான
பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து
போவீர்கள் !!!






# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

நந்தினி செய்யற சபதமும் சாகசமும்... படிக்கப் படிக்க மெய்சிலிர்க்கும்! இந்த வாளை சிம்மாசனத்தில் ஏத்தணும்! ஒரு சாம்ராஜ்யத்தையே உருவாக்கணும்னு ஒவ்வொரு காரியத்தையும் அமர்க்களப்படுத்துவா! அவளோட வைராக்கியம், உறுதி, வேகம், விவேகம் எல்லாம் ரொம்ப ஆச்சரியமான, அற்புதமான விஷயம் பாட்டி! அந்த நந்தினி மாதிரியே நானும் வைராக்கியமா இருக்கப் போறேன் பாட்டி!”

“ஆயி, இது ஒரு கதை! இதப் படிச்சுட்டு நானும் அந்த மாதிரி



வருவேன்னு கெனா காணலாமா?”

“பாட்டி, நான் சொல்றது உனக்கு புரியுமான்னு தெரியல! இருந்தாலும் சொல்றேன் கேட்டுக்கோ! இந்தக் கதை அறுபது வருஷத்துக்கு முந்தி அமரர் கல்கி எழுதின கதை! ஆனா எப்போ படிச்சாலும், படிக்கிறவங்க மனசுக்குள் ஒரு ரசவாதம் வரும்! ஒரு நல்ல படைப்பு எத்தனை காலம் கடந்தாலும் நல்ல மாற்றத்தை உண்டாக்கும்! உண்டாக்கணும்! அரிச்சந்திர மகாராஜா கதையைக் கேட்டுத்தான் காந்தி, மகாத்மா காந்தியா உருவானார். அதுபோல இந்தப் ‘பொன்னியின் செல்வன்’ எனக்குள்ளே பல சிந்தனைகளை உருவாக்கி இருக்கு. அந்த நந்தினி தனக்கென ஒரு சாம்ராஜ்யம் உருவாக்கணும்னு வைராக்கியம் வைச்சிருந்தா! அது எனக்கு பிடிக்குது! நானும் ஒரு வைராக்கியம் வைக்கப் போறேன்! நல்லா படிச்சு கலெக்டர் ஆகணும்! நம்ம நாட்டில் இருக்கிற ஒவ்வொரு கிராமத்தையும் தன்னிறைவு பெற்ற கிராமங்களா மாத்தணும்! ‘இந்த நந்தினி மாதிரி ஒரு கலெக்டர் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் கிடைச்சா போதும்! இந்தியா உலகத்துக்கே வழிகாட்டக்கூடிய நாடா மாறிடும்னு மக்கள் வாயாரப் புகழணும்! அந்தமாதிரி நான் வாழணும்!” நம்பிக்கையுடன் பேசிய நந்தினிக்குள் வேறு யாரோ புகுந்து பேசுவதுபோல் உணர்ந்தாள் ராக்கம்மாள்.

“கலெக்டரா வந்து பச்சைக் கலர் இங்க்கில் நான் போடற ஒவ்வொரு கையெழுத்தும், இந்த நாட்டோட வளர்ச்சிக்கு முக்கிய காரணமா இருக்கும். அதை நீ பார்க்கத்தான் போறே பாட்டி! இதுதான் இந்த நந்தினியோட கனவு! இதோ, இதுதான் என்னோட வாள்!” உணர்ச்சி பொங்கக் கூறிய நந்தினி, தான் வைத்திருந்த புத்தகத்தை பாட்டியின் கைகளில் தந்துவிட்டு, எழுந்து நின்றாள். தன் கையிலிருக்கும் பேனாவை முத்தமிட்டு, வானத்தை நோக்கி தீர்க்கமாய் உயர்த்திப் பிடித்தாள்.

முழுநிலவாய் மேலேறிக் கொண்டிருந்த சித்திரை நிலவின் ஒளி அவள் கையில் இருந்த பேனாமுனையில் பட்டுத் தகதகவென மின்னியது.

தன் கையில் இருக்கும் புத்தகத்தில் இருக்கும் நந்தினியின் ஓவியத்தைப் பார்த்தாள் ராக்கம்மாளுக்கு, அந்தப் ‘பழுவூர் ராணி’ நந்தினி கடைக்கண்ணால் தன்னைப் பார்த்து புன்னகைப்பது போல் தெரிந்தது.

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



## தொடர்புகளுக்கு

*editor@ithamil.com*

# அறிவோம் தமிழர்

## ஜி.பார்த்தசாரதி ஐயங்கார்: ஜேஎன்யுவைத் தூக்கி நிறுத்திய தமிழர்!

கோபாலஸ்வாமி பார்த்தசாரதியின் முழுப் பெயரைக் குறிப்பிட்டு, அவரைப் பற்றி யாரேனும் பேசினால், யாரைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று புரிந்துகொள்ள இரண்டொரு நிமிடங்கள் ஆகின்றன. ஆனால், ஜிபி என்ற பெயரைக் குறிப்பிட்டு யாரேனும் பேசினால் உடனடியாகப் புரிந்துகொள்ள முடிகிறது. தன்னைச் சுற்றி உள்ள உலகத்தின் நன்மை குறித்து அக்கறை கொண்டவராகவே எப்போதும் நினைவுகூரப்படுகிறார் ஜிபி. மிக முக்கியமாக, அந்த அக்கறை இந்த உலகத்தின் மீதான பாசத்தின் அடிப்படையிலானது. பல்வேறு பகுதிகளில் பணிபுரிந்தவரான ஜிபியின் செயல்பாடுகள் பன்முகத்தன்மை கொண்டவை.

ஜிபியின் தந்தை கோபாலஸ்வாமி ஐயங்கார், காஷ்மீர் சமஸ்தானத்தில் பிரதமராக இருந்தவர். பின்னாளில், நேரு அமைச்சரவையில் இருந்தார். அவரது உறவினர் ரங்கசாமி ஐயங்கார், 'தி இந்து' ஆங்கில நாளிதழின் ஆசிரியராகவும் இந்திய தேசிய காங்கிரஸ் பொதுச் செயலாளராகவும் இருந்தார். திட்டக் குழுத் துணைத் தலைவராக இருந்த வி.டி.கிருஷ்ணமாசாரியும் ஜிபியின் உறவினர்தான்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் மாநிலக் கல்லூரியில் படித்தார் ஜிபி. மாணவர் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இளைஞர்களின் லட்சியங்களை உணர்ந்துகொள்ளும் தன்மை அவரிடம் உருவாக இது காரணமாக அமைந்தது. பின்னர், ஆக்ஸ்ஃபோர்டு சென்ற அவர் நவீன வரலாற்றில் பட்டப் படிப்பு முடித்தார். லண்டனில் சட்டப் படிப்பும் நிறைவுசெய்தார். இந்தக் காலகட்டத்தில், தனக்கு விருப்பமான விளையாட்டிலும் ஈடுபட்டார் அது கிரிக்கெட்.

### வெளியுறவுப் பணி

இந்தியா திரும்பிய பின்னர், 'தி இந்து' ஆங்கில நாளிதழில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். காலனியாதிக்க ஆட்சிக்கு எதிரான இயக்கம் வலுப்பெற்றுவந்த நிலையில், காங்கிரஸுடன் இணைந்தும் பணியாற்றினார். இது, காங்கிரஸ், முஸ்லிம் லீக், பிரிட்டிஷ் இந்திய அரசு ஆகியவற்றுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கும் வாய்ப்பை அவருக்கு வழங்கியது. 1949—ல் 'பிரஸ் டிரஸ்ட் ஆஃப் இந்தியா'வின் பிரதிநிதியாக அவர் லண்டன் சென்றபோது, இன்னும் விரிவான தளத்துக்கு அவரை இட்டுச்சென்றது.

நாடு சுதந்திரம் வாங்கிச் சில ஆண்டுகளே ஆகியிருந்த நிலையில், இந்திய அரசியல் பார்வைகளைச் சர்வதேச அரங்கில் முன்வைக்க அவர் கேட்டுக்கொள்ளப்பட்டார். இந்தப் பணியில் இருந்த புதிய தன்மை, அவருக்குச் சிலிர்ப்பான அனுபவமாக இருந்திருக்க வேண்டும் — பிரச்சினைக்குரிய உயர் ஆணையரான கிருஷ்ண மேனனுடன் பணிபுரிய வேண்டிய சூழல் இருந்தபோதிலும்!

அடுத்த பத்தாண்டுகளில், இதழியல் பணிகளிலிருந்து விலகிய ஜிபி, ராஜீயப் பணிகளில் சேர்க்கப்பட்டார். இந்தத் துறையில் அதில் காட்டிய உற்சாகத்தைப் பார்க்கும்போது, இதழியல் துறையைவிடவும் வெளியுறவுப் பணியை நன்கு ரசித்து அனுபவித்தார் என்று தெரிகிறது.

தொடக்கத்தில், கம்போடியா, வியட்நாம் ஆகிய நாடுகளில், சர்வதேச ஆணையங்களில் பணியமர்த்தப்பட்டார். பின்னர், இந்தோனேஷியாவுக்கான தூதராகவும், அதன் பின்னர் சீனாவுக்கான தூதராகவும் பணியாற்றினார். பின்னர், ஐநாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக 1965—ல் அவர் நியமிக்கப்பட்டார்.

### ஜேஎன்யுவின் முதல் துணைவேந்தர்

1969—ல் அவர் இந்தியா திரும்பிய பின்னர், மீண்டும் தனது பாதையை மாற்றிக்கொள்ள வேண்டிவந்தது. இந்த முறை, அவரது நியமனம் கல்வித் துறையில். ஆம், டெல்லி ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பதவியேற்க அழைக்கப்பட்டார். ராஜதந்திர நடவடிக்கைகளில் சிறந்தவர் என்று அறியப்பட்ட ஒருவர், பல்கலைக்கழகத் துணைவேந்தராக எவ்வாறு செயல்படுவார் என்று ஒரு விமர்சனம்

# பெருமை

## ரொமிலா தாப்பர்

எழுந்தது. ஜிபியைப் பொறுத்தவரை, ஒரு புதிய பணியில் தனது திறனைக் காட்ட இன்னொரு சந்தர்ப்பம்தானே தவிர, அது ஒன்றும் அந்நியமான பணி அல்ல என்பதில் சந்தேகமில்லை.

1970—ன் இறுதியில் நான் ஜேஎன்யு பல்கலைக்கழகத்தில் சேர்ந்தேன். அதற்கு முன்னர், டெல்லி பல்கலைக்கழகத்தில்தான் வகுப்புகள் எடுத்துவந்தேன். 50 ஆண்டுகளுக்கு முன்னர், இப்போது இருப்பதுபோலன்றி வரலாற்றுப் பாடங்களில் பழமைவாத அணுகுமுறையைத்தான்



டெல்லி பல்கலைக்கழகம் கொண்டிருந்தது. வரலாறு என்பது ஆய்வு அடிப்படையில் சென்றுகொண்டிருந்த அந்தக் காலகட்டத்தில், ஆய்வுகளை மையமாகக் கொண்டதாக வரலாற்றுப் பாடத்திட்டத்தை மாற்றுவதில் எங்களில் சிலர் முயற்சித்துத் தோல்வி கண்டிருந்தோம். ஜேஎன்யு மீதான எனது ஈர்ப்புக்கு முக்கியக் காரணம், அது ஒரு புதிய பல்கலைக்கழகம் என்பதும், வரலாற்றுப் புரிதல்களிலும் வரலாற்றுப் பாடங்கள் நடத்துவதிலும் புதிய வழிகளுக்கு வாய்ப்பு இருக்கும் என்பதுதான்.

எனினும், அது நடக்கவில்லையென்றால், காலாவதியாகிவிட்ட, முன்னோக்கி நகர மறுக்கும் ஒரு பயிற்றுமுறை எனும் புதைகுழியில் நான் மாட்டிக்கொள்ள நேரும் என்பதுதான் எனது அச்சம். பொதுவாகவே, நமது பல்வேறு கல்வி நிறுவனங்களில், வரலாற்றுத் துறையில் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ இருக்கும் பிரச்சினைதான். தற்போது அது மேலும் மோசமடைந்திருக்கிறது. உதாரணத்துக்கு, கற்பனையான கோட்பாடுகள் கலக்கப்படுவதன் மூலம், சரியான வரலாற்று அறிவு புதைக்கப்படும் அபாயம் எழுந்திருப்பதைச் சொல்லலாம்.

தொடக்கத்தில் ஜிபியுடனான எனது உரையாடல்கள்தான் ஜேஎன்யுவில் சேர என்னை வழிநடத்தின. டெல்லி பல்கலைக்கழகத்தில் நாங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் குறித்து அவரிடம் கேள்விகள் எழுப்பினேன். ஆச்சரியம்

தரும்விதத்தில், அவர் எங்கள் பிரச்சினைகள் குறித்து கரிசனம் கொண்டவராக இருந்தார். நாங்கள் செமஸ்டர் முறையைப் பின்பற்றிவந்த நிலையில், எங்கள் பாடங்கள் பாதியில் வெட்டப்பட்டுவிடும் பழைய பாடங்களாக இருக்கக் கூடாது என்பதில் தீவிரமாக இருந்தார். விமர்சனபூர்வமான வேண்டும் என்பது மாணவர் சேர்க்கை விஷயத்தில் எங்கள் கொள்கையாக இருந்தது.

## பல்கலைக்கழகம் என்பது என்ன?

அப்போதுதான், ஜேஎன்யு பல்கலைக்கழகமானது





விவாதங்களுக்கு வழிவகுக்கும் புதிய — அதேசமயம் சரியான வழிகளில் தற்கால அறிவை வழங்குவது குறித்துச் சிந்திக்க வேண்டியிருந்தது. வேறு இந்தியப் பல்கலைக்கழகங்களோ வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களோ பின்பற்றும் படிப்புகள், பாடத்திட்டங்களின் மறுபதிப்பாக, ஜேஎன்யு பாடத்திட்டங்கள் இருக்கக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

பல்துறைமை எனும் கட்டமைப்பின் அடிப்படையில் படிப்புகள் இருக்க வேண்டும் என்றும், ஒற்றைப் பார்வை கொண்டவையாக இருக்கக் கூடாது என்பதிலும் உறுதியாக இருந்தார். இதுவரையிலான அறிவுப்புலம் என்பது முன்னேறிச் செல்ல வேண்டும் என்றால், அது தொடர்ச்சியாகக் கேள்விக்கு உட்படுத்தப்பட வேண்டும். இவை தவிர, அறிவைப் பெற விரும்புகின்ற, வாய்ப்புகள் மறுக்கப்படும் மாணவர்களுக்கு ஜேஎன்யு இடமளிக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார். பல்கலைக்கழகக் கல்விக்குத் தகுதியிருந்தும் பிற பல்கலைக்கழகங்களில் இடம் கிடைக்காமல் இருக்கும் மாணவர்களில் எத்தனைப் பேரைச் சேர்க்க முடியுமோ அத்தனைப் பேரைச் சேர்க்க கல்வியாளராக முயற்சிக்கும் ஒரு ராஜதந்திரியைத் துணைவேந்தராகப் பெறவில்லை; மாறாக, ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்கும் விஷயங்களைப் பிரதிபலிக்கக்கூடிய, அதுதொடர்பான அறிவார்த்தமான பார்வை கொண்ட ஒரு மனிதரைத்தான் பெற்றிருக்கிறது என்பதை உணர்ந்தேன். ஜேஎன்யுவை ஒரு அறிவு மையமாக வளர்த்தெடுக்க அவர் உதவுவார் என்பதையும் உணர்ந்தேன். பல்கலைக்கழகம் என்பது வெறுமனே பட்டம் வழங்குவதற்கான இடம் மட்டும் அல்ல; அறிவை மேம்படுத்துவதற்கான ஒரு இடம் என்பதில் ஜிபிக்கு இருந்த புரிதல், இன்றைக்கு வெகு சில துணைவேந்தர்களிடமே இருக்கிறது.

அறிவை மேம்படுத்துவது என்பது, வழங்கப்பட்ட அறிவு தொடர்பாகக் கேள்விகள் கேட்பதாலும், சந்தேகங்களை எழுப்புவதாலும் சாத்தியமாவது. சுதந்திரச் சிந்தனை, பேச்சுக்கு வாய்ப்புள்ள ஒரு சூழலில் எந்தப் பாடத்திலிருந்தும் விமர்சனபூர்வமான கேள்வியை எழுப்புவதாலும் நடைபெறும் விஷயம் அது. எல்லாச் சமூகங்களும் அதைச் செய்வதற்கு உரிமை கொண்டிருக்கும் ஒரு கல்வி நிறுவனம் அது. நிர்வாகத்தில் இருப்பவர்கள்

இந்த உரிமைகளை அங்கீகரிப்பதுடன், அவற்றைப் பேண வேண்டும். அந்த உரிமைகளை அவர்கள் நசுக்குகிறார்கள் என்றால்,

மாணவர்கள் மத்தியில் வாதங்களும் விவாதங்களும் தவிர்க்க முடியாதவையாக இருந்தன. சில முற்றுகைச் சம்பவங்களும் நடந்தன. அதேசமயம்,



ஒரே ஒரு நிறுவனத்தை மட்டுமல்ல, ஒரு பல்கலைக்கழகத்தின் நோக்கமான — அறிவுக்கு முதல்படியான விவாதங்களுக்கு இடமளிக்கும் கருத்தாக்கத்தையே அழித்துவிடுவார்கள் என்பதாகும்.

நம்மில் பலரின் உதவியுடன் — இன்னும் சொல்லப்போனால், அர்ப்பணிப்புடனான அக்கறையுடன் — உருவாக்கப்பட்ட இந்தப் பல்கலைக்கழகம், ஜிபி விரும்பியதைப் போல், இந்தியாவின் முன்னணிப் பல்கலைக்கழகமாக விளங்கிவந்தது. இன்றைக்கு, அது சிதைக்கப்பட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், வரலாற்றிலிருந்து நாம் கற்றிருப்பது இதுதான்: சுதந்திரமான விவாதத்துக்கான சுதந்திரத்தை மறுப்பதும், அதிகாரபூர்வமான கருத்தாக்கத்துக்கு மட்டும் அனுமதியளிப்பதும், அதிகாரத்தில் இருப்பவர்கள் பாதுகாப்பின்மை கொண்டவர்களாக மாறியிருக்கிறார்கள். சொல்லப்போனால் கொஞ்சம் அச்சமடைந்திருக்கிறார்கள் என்பதற்கான அறிகுறிகள்தான்.

ஜிபியைப் பொறுத்தவரை, ஒரு சமூகத்தைக் கட்டமைப்பதில் பங்காற்றும் ஒரு பல்கலைக்கழகத்துக்கான வரைமுறை என்ன என்பதில் தெளிவான புரிதல் கொண்டிருந்தார். இந்தக் கல்வி நிறுவனத்தின் கட்டமைப்பு தொடர்பாக, துணைவேந்தர், ஆசிரியர்கள்,

நெகிழ்வுத்தன்மை இருந்தது. பேச்சுவார்த்தைக்கு இடமிருந்தது. அந்த நெகிழ்வுத்தன்மை இந்தக் கல்வி நிறுவனத்தின் பின்னடைவுக்குத் தவறாகப் பயன்படுத்தப்படும் என்பதை நாங்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஜேஎன்யு துணைவேந்தராக ஜிபி பணிபுரிந்த அந்த ஐந்து ஆண்டுகளைத் திரும்பிப் பார்க்கும்போது, கல்வித் தரமும் விரிவான அணுகுமுறையும் கொண்ட ஒரு கல்வி நிறுவனத்தை உருவாக்குவதில் எங்களுக்கு இருந்த அதே ஆர்வம் அவரிடமும் இருந்ததை என்னால் உணர முடிகிறது.

பல தலைமுறைகளாக மாணவர்கள், கல்வியாளர்கள் மத்தியில் ஒரு அடையாளச் சின்னமாக ஜேஎன்யு உருவானது எப்படி என்பதையும், அறிவுஜீவித்தனத்துக்கு எதிரான ஒரு சூழலில், ஜேஎன்யு ஏன் குறிவைக்கப்படுகிறது என்பதையும் இது விளக்கலாம். கல்வித் துறையுடனான ஜிபியின் தொடர்பு, பிந்தைய ஆண்டுகளிலும் தொடர்ந்தது. இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களில் அவரது பணி தொடர்ந்தது. ஆனால், ஜேஎன்யுதான் அவரது உச்சம்!

'ஸ்க்ரால் இன்' இணைய இதழில் வெளியான கட்டுரை.தமிழில்: வெ.சந்திரமோகன்




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

# 24 புள்ளலூர்ச் சண்டை

கண்ணபிரான் ரதத்தை விட்டுக் குதித்துக் குதிரைகளின் தலைக்கயிறுகளைப் பிடித்துக் கொண்டே, சிவகாமியை நெருங்கி வந்து, "தங்கச்சி! இதென்ன? இங்கே எப்போது வந்தீர்கள்? இது என்ன ஊர்?" என்று துரிதமாய்க் கேட்டான்.

"சிதம்பரம் போகலாமென்று கிளம்பி வந்தோம். அண்ணா! வழியில் இங்கே தங்கினோம். இந்த ஊருக்கு அசோகபுரம் என்று பெயராம். அதோ அசோக மகாராஜாவின் ஸ்தம்பம் தெரிகிறதே; நீங்கள் பார்க்கவில்லையா?" என்றாள் சிவகாமி.




"அதையெல்லாம் பார்க்க எனக்கு இப்போது சாவகாசமில்லை. ஆமாம், நீங்கள் என்னத்திற்காக இவ்வளவு அவசரப்பட்டுக்கொண்டு யாத்திரை கிளம்பினீர்கள்!..."

"அந்தக் காட்டு வீட்டில் இந்த யுத்த காலத்திலே தனியாக இருப்பானேன் என்றுதான் கிளம்பினோம். குமார சக்கரவர்த்தியுந்தான் எங்களை அடியோடு மறந்து விட்டாரே!.."

"என்ன வார்த்தை, அம்மா சொல்கிறாய்? மாமல்லராவது, உங்களை மறப்பதாவது? போர்க்களத்துக்குப் போகும்படி சக்கரவர்த்தியிடமிருந்து அனுமதி வந்ததும், முதலில் உங்கள் வீட்டைத் தேடிக்கொண்டுதானே வந்தோம்! வீடு பூட்டிக் கிடந்ததைக் கண்டதும் மாமல்லருக்கு என்ன கோபம் வந்தது தெரியுமா?"

"எட்டு மாதம் எங்களை எட்டிப் பாராமலே இருந்தவருக்குக் கோபம் வேறேயா? போகட்டும், எங்கே இப்படி எல்லோரும் தலைதெறிக்க ஓடுகிறீர்கள்?"

"புள்ளலூர்ச் சண்டையைப்பற்றி கேள்விப்படவில்லையா?" என்று சொல்லிக் கொண்டே கண்ணன் ரதத்தில் ஏறினான்.

"ஓகோ! சண்டைக்குப் பயந்துகொண்டா இப்படி ஓடுகிறீர்கள்?" என்று சிவகாமி பரிகாசச் சிரிப்புடன் கேட்டாள்.

"இல்லை, அம்மா, இல்லை. சண்டைக்குப் பயந்து ஓடுகிறவர்களை நாங்கள் துரத்திக்கொண்டு ஓடுகிறோம். தங்கச்சி! நீ மட்டும் இங்கேயே இருந்தால், நான் திரும்பி வரும்போது இந்த ரதத்தின் சக்கரத்திலே கங்கபாடி அரசன் துர்விநீதனைக் கட்டிக் கொண்டு வருவதைப் பார்ப்பாய்!" என்றான்.

"அண்ணா! நான் கட்டாயம் இங்கேயே இருக்கிறேன். மாமல்லரிடமும் சொல்லுங்கள்!" என்று சிவகாமி கூறி, மறுபடியும் தயக்கத்துடன், "நான் ஏதாவது தவறு செய்திருந்தாலும் மன்னித்துக் கொள்ளும்படி சொல்லுங்கள்!" என்றாள்.

அதே சமயத்தில் கண்ணன் சாட்டையைச் சுளீர் என்று கொடுக்கவே, குதிரைகள் பிய்த்துக்கொண்டு கிளம்பின. கண்ணன் தலையை மட்டும் திருப்பி, 'ஆகட்டும்' என்பதற்கு அறிகுறியாகக் குனிந்து சமிக்ஞை செய்தான். மறுகணம் ரதம் மாயமாய்ப் பறந்து சென்றுவிட்டது.

அப்போது உள்ளே இருந்து வந்த ஆயனர், "சிவகாமி! யாருடன் பேசிக்கொண்டிருந்தாய்? ரதத்திலே போனது யார்?" என்று கேட்டார்.

"கண்ணபிரான், அப்பா! ரதத்துக்கு முன்னால் குதிரை மேல் மாமல்லரும் பரஞ்சோதியும் போனார்கள்!"




“அப்படியா? நாம் அவர்களை விட்டுவிட்டு வந்தாலும் அவர்கள் நம்மை விடமாட்டார்கள் போலிருக்கிறதே?”

“அவர்கள் நமக்காக வரவில்லை, அப்பா!”

“நமக்காக அவர்கள் ஏன் வரப்போகிறார்கள். சிற்பியின் வீட்டைத் தேடிச் சக்கரவர்த்திகள் வந்த காலம் எல்லாம் மலை ஏறிப் போய்விட்டது, சிவகாமி!”

“அப்படிச் சொல்லாதீர்கள், அப்பா! கோட்டையை விட்டுக் கிளம்ப அனுமதி கிடைத்தவுடனே மாமல்லர் நம்முடைய வீட்டைத் தேடிக்கொண்டுதான் வந்தாராம்.”

“அப்படியானால் குண்டோதரன் சொன்னது உண்மைதானா?”

“ஆமாம், நாம் வீட்டில் இல்லாமற் போனதில் மாமல்லருக்குக் கோபம் என்பதும் உண்மைதான்.”

“அதனால்தான் நான் சொன்னேன், இருக்கும் இடத்திலேயே இருப்போம் என்று. நீ பிடிவாதம் பிடித்து, தேச யாத்திரை கிளம்ப வேண்டுமென்று ஒற்றைக் காலால் நின்றாய்! அதன் பலனைப் பார்!”

ஆயனருக்கும் மனம் கசந்து போயிருந்தபடியால், இப்படியெல்லாம் பிறர்மேல்



குறை சொல்வது கொஞ்ச நாளாக வழக்கமாய்ப் போயிருந்தது. எனினும், இப்போது அவர் கூறியது உண்மையானபடியால், சிவகாமிக்குப் பெரிதும் வேதனை உண்டாயிற்று.

"போனதைப்பற்றிச் சொல்லி என்ன பயன், அப்பா?"

"ஒன்றுமில்லைதான். இருந்தாலும், இந்த வழியாய்ப் போனவர்கள் சற்று நின்று நம்மைப் பார்த்துவிட்டுப் போகக்கூடாதா? ஒரு காலத்தில் மாமல்லர் நம்மிடம் எவ்வளவு பிரியமாயிருந்தார்?"

"பிரியத்துக்கு இப்போதுதான் என்ன குறைவு வந்தது? இது யுத்த காலமல்லவா? அதனால் எல்லாருக்கும் அவசரமாயிருக்கிறது. திரும்பி வரும்போது மாமல்லர் இங்கே வந்து நம்மைப் பார்ப்பார் என்று கண்ணபிரான் சொன்னான், அப்பா!"

"அந்தமட்டில் சந்தோஷம் ஆனால், எதற்காக இப்படி எல்லாரும் ஓடுகிறார்களாம்?"

"புள்ளலூர் என்னுமிடத்தில் பெரிய யுத்தம் நடந்ததாம்!.."

"ஓகோ! யுத்தக்களத்திலிருந்துதான் இப்படி ஓடுகிறார்களாக்கும்! ஆஹா! காலம் எப்படி மாறிவிட்டது! முன் காலத்தில் போருக்குப் புறப்படுகிறவர்கள் வெற்றி அல்லது வீரசொர்க்கம் என்று உறுதியுடன் கிளம்புவார்கள். போர்க்களத்தில் முதுகு காட்டி ஓடுவதைப்போல் கேவலம் வேறொன்றுமில்லை என்று நினைப்பார்கள்..."

"அப்பா! இந்த யுத்தத்தில் போர்க்களத்திலிருந்து ஓடியவர்கள் எதிரிகள்தான். அது உங்களுக்குத் திருப்திதானே?"

"அதிலே என்ன திருப்தி? சுத்த வீரர்களை வென்று ஜயக்கொடி நாட்டினால் புகழும் பெருமையும் உண்டு. புறமுதுகிட்டு ஓடுகிறவர்களைத் துரத்தி ஜயிப்பதில் என்ன கௌரவம் இருக்கிறது?"

எந்த வழியிலும் ஆயனரைத் திருப்தி செய்யமுடியாது என்பதைக் கண்ட சிவகாமி



அவருடன் பேசுவதில் பயனில்லையென்று தீர்மானித்து மௌனம் பூண்டாள். இருவருடைய உள்ளங்களும் வெவ்வேறு சிந்தனையில் ஆழ்ந்தன.

அன்று சூரியன் அஸ்தமிக்க ஒரு நாழிகை இருக்கும்போது குண்டோ தரன் திடும்பிரவேசமாக வந்து சேர்ந்தான். அவன் எங்கே போயிருந்தான், புத்த பிக்ஷுவைக் கண்டுபிடித்தானா, குதிரை திரும்பக் கிடைத்ததா என்னும் விஷயங்களைப் பற்றி ஆயனரும் சிவகாமியும் ஆவலுடன் அவனை விசாரித்தார்கள்.

"அதை ஏன் கேட்கிறீர்கள், போங்கள்! உங்களுடைய சொல்லைத் தட்டிவிட்டு, புத்த பிக்ஷுவைப் பிடிப்பதற்காக ஓடினாலும் ஓடினேன், நேரே யுத்த களத்திலேயே போய் மாட்டிக் கொண்டேன். அப்பப்பா! இந்த மாதிரி பயங்கர யுத்தத்தை நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை!" என்றான் குண்டோ தரன்.




சிவகாமி, "என்ன சண்டை? எங்கே நடந்தது? சண்டை முடிவு என்ன ஆயிற்று?" என்று கேட்டாள்.

அதன் பேரில் குண்டோ தரன் புள்ளலூர் சண்டையைப் பற்றி விவரமாகக் கூறினான். பழந்தமிழ் நாட்டின் சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற அந்தப் புள்ளலூர்ச் சண்டையைப்பற்றி இப்போது வாசகர்களும் தெரிந்து கொள்வது அவசியமாகும்!

வாதாபிப் புலிகேசியின் சைன்யம் பல்லவ சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்த சில நாளைக்கெல்லாம் கங்கநாட்டு அரசன் துர்விநீதனுடைய சைன்யம் திரண்டு பல்லவ இராஜ்யத்தின் மேற்கு எல்லையில் வந்து நின்றது. வாதாபி சைன்யத்தினால் பல்லவர் படை முறியடிக்கப்பட்டது என்ற செய்தி வந்ததும் பல்லவ இராஜ்யத்துக்குள் பிரவேசிக்க ஆயத்தமாக அந்தச் சைனியம் காத்துக்கொண்டிருந்தது. ஆனால், திடீரென்று துர்விநீதனுக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ, தெரியவில்லை. ஒரு நாள் கங்கநாட்டுச் சைனியம் பல்லவ இராஜ்யத்துக்குள் நுழைந்துவிட்டதென்றும் காஞ்சியை நோக்கி முன்னேறி வருகிறதென்றும் தெரிந்தது. இதையறிந்த மகேந்திர பல்லவர் வடக்குப் போர் முனையிலிருந்து குமார சக்கரவர்த்திக்குக் கட்டளை அனுப்பினார். திருக்கழுக்குன்றத்திலுள்ள பாதுகாப்புப் படையுடன் சென்று கங்கநாட்டுச் சைனியம் காஞ்சியை அணுகுவதற்கு முன் அதை எதிர்க்கும்படியாகச் சொல்லி அனுப்பினார்.

இத்தகைய கட்டளைக்காக எட்டுமாத காலமாகத் துடிதுடித்துக் கொண்டிருந்த மாமல்ல நரசிம்மர் தளபதி பரஞ்சோதியுடன் உடனே கிளம்பிச் சென்று திருக்கழுக்குன்றத்திலிருந்த படைக்குத் தலைமை வகித்து நடத்திச் சென்றார். காஞ்சி நகருக்குத் தென் மேற்கே இரண்டு காத தூரத்தில் புள்ளலூர்க் கிராமத்து எல்லையிலே இரண்டு சைன்யங்களும் சந்தித்தன.

மாமல்லர் தலைமை வகித்த பல்லவ சைனியத்தைக் காட்டிலும் கங்கநாட்டுச் சைனியம் மூன்று மடங்கு பெரியது. ஆனாலும், மாமல்லரின் வீரப்படை கங்கநாட்டுச் சைன்யத்தின் மேல் எதிர்பாராத சமயத்தில் இடி விழுவதுபோல் விழுந்தது. மாமல்லரும் பரஞ்சோதியும் கையாண்ட யுத்த தந்திரங்களும், போர்க்களத்தில் முன்னணியில் நின்று நிகழ்த்திய வீரச் செயல்களும், பல்லவ வீரர்களுக்கு இணையில்லாத உற்சாகத்தையும் துணிச்சலையும் அளித்தன.

போர் உச்ச நிலை அடைந்தபோது கங்க சைனியத்தை மற்றொரு பக்கத்தில் இன்னொரு புதிய படை தாக்குவதாக வதந்தி உண்டாயிற்று. அவ்வளவுதான்! அத்தனை நேரமும் ஒருவாறு தைரியமாகப் போரிட்டு வந்த கங்க சைனியத்தின் வீரர்களைப் பீதி பிடித்தது. உயிர் பிழைத்தாற் போதும் என்று கங்க வீரர்கள் சிதறி ஓட ஆரம்பித்தார்கள்.

கங்க நாட்டரசன் துர்விநீதன் பட்டத்து யானை மேல் ஏறிக் கொண்டு தெற்குத் திக்கை நோக்கி ஓடிக் கொண்டிருந்ததாகச் செய்தி வந்தது. அவனை எப்படியாவது சிறைப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்து மாமல்லரும் பரஞ்சோதியும் பல்லவ சைனியத்தைச் சிறு சிறு படைகளாகப் பிரித்துத் தெற்கு நோக்கிப் பல வழிகளிலும் போகச் சொல்லிவிட்டுத் தாங்களும் அதே திசையில் அதிவேகமாகச் சென்றார்கள்.

போர்க்களத்தில் தறிகெட்டு ஓடிய ஒரு குதிரையைக் கைப்பற்றி அதன் மேல் ஏறிக்கொண்டு குண்டோ தரனும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தான். துரதிருஷ்டவசமாக வழியில் அவன் ஏறிவந்த குதிரை காலை ஒடித்துக்கொண்டது. அதனால் அவன் பின்னால் தங்கிவிடும்படி நேர்ந்தது. குதிரையை அப்படியே விட்டு விட்டுக் கால்நடையாக நடந்து அசோகபுரம் வந்து சேர்ந்ததாகக் கூறிக் குண்டோ தரன் அவனுடைய வரலாற்றை முடித்தான்.

(சபதம் தொடரும்)

# இயற்கை

## இயற்கையைக் காக்க மக்கள் இயக்கம் அவசியம்

வெள்ளத்தால் கேரளத்துக்கு ஏற்பட்ட சொத்துகளின் சேத மதிப்பு ரூ.26,000 கோடி என்று மதிப்பிடப்படுகிறது. இதற்கும் அப்பால் இயற்கை, மனித, சமூக மூலதன இழப்பு எவ்வளவு என்பதை எளிதில் மதிப்பிட்டுவிட முடியாது.




கேரளத்தின் மலைவனங்கள், சதுப்பு நிலங்கள், ஆறுகள் ஆகியவற்றைச் சிதைத்து உருவாக்கிய கட்டிடங்களும் அணைகளும் கல் குவாரிகளும்தான் இந்த இழப்பை ஏற்படுத்தியுள்ளன. மறுவாழ்வு, நிவாரணப் பணிகளுக்குத்தான் இப்போது முன்னுரிமை என்றாலும் வெள்ளச் சேதத்துக்கான காரணங்கள் எவை என்பதையும் அடையாளம் கண்டாக வேண்டும்.

### அரசுகளின் அலட்சியம்

கேரளத்தில் மட்டும் அல்ல மேற்குத் தொடர்ச்சி மலையுள்ள அனைத்து மாநிலங்களிலும், நாட்டின் பிற பகுதிகளிலும்கூட இயற்கையை அழித்துவருகின்றனர். 1. இயற்கை வளத்தைக் காக்க உருவாக்கப்பட்ட சட்டங்கள் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளன. 2. மனிதவளம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. சுகாதார வசதிகள், வேலைவாய்ப்புகள் போதிய அளவு உருவாக்கப்படவில்லை. இதனால் இயற்கை வளம் பாதிக்கப்படும் என்று தெரிந்தும் வேலைவாய்ப்பு, வருமானத்துக்காகப் பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. (பாலக்காடு மாவட்டத்தில் பிளாச்சிமடா பஞ்சாயத்தில் கோகா கோலா நிறுவனம் நீர்வளத்தை வணிகநோக்கில் வரம்பின்றி உறிஞ்சி எடுத்தது. இதனால் நீர்வளம் குறைந்ததுடன் மாசுபடவும் நேர்ந்தது. நீர்வள இழப்பு மட்டும் ரூ.160 கோடியாக மதிப்பிடப்பட்டது.) 3. வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக வழங்கப்பட்ட அறிவியல் சார்ந்த ஆலோசனைகள் அரசுகளால் தொடர்ந்து அலட்சியப்படுத்தப்பட்டன. ஆதிரப்பள்ளி நீர்மின்சார திட்டத்தை வகுத்தவர்கள் தண்ணீர் கிடைக்கும் அளவை மிகையாக மதிப்பிட்டுவிட்டார்கள். எனவே, அதில் கிடைத்த மின்சாரத்துடன் ஒப்பிடுகையில் அளவுக்கு அதிகமாகச் செலவு செய்து அணையைக் கட்டினார்கள். பராமரிப்புச் செலவும் அதிகமாகவே இருக்கிறது. 4. சமூக மூலதனத்தில் கடுமையான அழிவு ஏற்பட்டதை அரசுகள் லட்சியம் செய்யவில்லை.

# இயக்கம்

## உள்ளூர் சமூகங்களின் உரிமைகள்

மனிதர்கள் உருவாக்கிய மூலதனங்களை மட்டும் பார்க்கக் கூடாது. மனிதர்கள் உருவாக்கியவை, இயற்கை உருவாக்கியவை, மனிதர்களாலான மூலதனம், சமூகமாகிய மூலதனம் ஆகியவற்றை வளர்த்தெடுக்க வேண்டும். ஒரு பகுதியின் சுற்றுச்சூழலைக் கெடுக்காமல் பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை அங்கே வாழும் மக்களுக்குத்தான் இருக்கும் என்பதை இனி புதிய நிர்வாகத்தில் அங்கீகரிக்க வேண்டும். இயற்கை வளங்களைக் காக்க இப்போது எதிர்மறையான ஊக்குவிப்புகளைத்தான் அளிக்கிறோம். அதையும் ஊழலும் கெடுபிடியும் மிக்க அதிகாரவர்க்கம் மூலமாகவே அளிக்கிறோம். இது மாற வேண்டும்.

சுற்றுச்சூழலைப் பராமரிக்க வேண்டிய அனைத்துத் தரப்பினருக்கும், வெளிப்படையான விதத்தில் ஊக்குவிப்புகளை அளிக்க வேண்டும். மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிக்கு எங்களுடைய குழு அப்படிப் பல பரிந்துரைகளைக் கூறியிருக்கிறது.



## மாதவ் காட்கில்

‘சர்ப்ப காவுகள்’ என்று அழைக்கப்படும் பாம்புகளின் வசிப்பிடத்தைச் சிதையாமல் காக்க, அப்பகுதி மக்களுக்கு சேவைக் கட்டணம் தர வேண்டும். மண்ணில் கரித்தன்மையை அதிகரிக்க, ரசாயன உரங்களைப் பயன்படுத்தாமல் இயற்கை எருவை இட மானியம் தர வேண்டும்.

‘கேரளத்தின் எந்தப் பகுதிக்கான வளர்ச்சி, காப்புத் திட்டங்களிலும் இனி உள்ளூர் மக்கள் விலக்கப்பட மாட்டார்கள், அவர்களிடம் ஆலோசனை கலந்து அவர்களுடைய ஒத்துழைப்புடனேயே திட்டங்கள் அமல்படுத்தப்படும்’ என்ற உறுதியை கேரள அரசு அளிக்க வேண்டும். அது எந்த வளர்ச்சி, காப்புத் திட்டம் என்பதையும் அவர்களையே தேர்ந்தெடுக்கச் சொல்ல வேண்டும். இதை அமல்படுத்த வார்டு, கிராமப் பஞ்சாயத்துகளுக்கும்



நகர, மாநகர ஆட்சி மன்றங்களுக்கும் அதிகாரம் அளித்து உள்ளாட்சி அமைப்புகளின் உதவியோடு அறிக்கைகளைத் தயாரித்து சூழலைக் காக்க வேண்டும்.

மக்களை உறுப்பினர்களாகக் கொண்ட பல்லுயிர்ப் பெருக்க மேலாண்மைக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும். அந்தக் குழுக்களே எல்லா நிர்வாகப் பணியையும் மேற்கொள்ள உரிய அதிகாரங்களையும் வழங்க வேண்டும். பல்லுயிர்ப் பெருக்கப் பகுதிகளை அணுக சுற்றுலாப் பயணிகளிடம் சேவைக் கட்டணம் வசூலிக்க வேண்டும். புதிய நடைமுறைகளுக்குப் பிறகு சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களை உள்ளது உள்ளபடி தொகுத்து அறிக்கை தயாரிக்க வேண்டும்.

வன உரிமைச் சட்டம் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும். பழங்குடிகள் மட்டுமல்லாது வனங்களில் பாரம்பரியமாக வாழுவோர் அனைவரும் வனப்பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும், மேலாண்மை செய்யவும், மரம் அல்லாத இதர வனப் பொருட்களைச் சந்தைப்படுத்திக்கொள்ளவும் அனுமதிக்க வேண்டும். வனப் பகுதிகளில் மேற்கொள்ளும் வளர்ச்சிப் பணிகளால் சுற்றுச்சூழலுக்கு என்ன நேரிட்டது என்பதை உடனுக்குடன் இணையதளங்களில் பதிவேற்ற வேண்டும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி, இந்தத் தகவல்கள் மறைக்கப்படாமல் பெறப்பட வழி செய்ய வேண்டும். தகவல்களைத் திரிக்காமல் பதிவு செய்துவந்தால் சூழலுக்குக் கேடான அம்சங்களை உடனுக்குடன் களைந்துவிடலாம்.

### பாதுகாப்பான எதிர்காலம்


மேற்குத் தொடர்ச்சி மலை சுற்றுச்சூழல் பற்றிய நிபுணர் குழுக்களின் அறிக்கைகள், கஸ்தூரிரங்கன்





குழு அளித்த அறிக்கை, ஊம்மன் வி ஊம்மன் குழு அறிக்கை ஆகியவை மக்கள் பார்க்கும் வகையில் பதிவேற்றப்பட வேண்டும். தங்களுடைய பகுதியில் உள்ள நிலம் தனியாருக்குச் சொந்தமாக இருந்தாலும், அரசுக்குச் சொந்தமாக இருந்தாலும் அந்த நிலம் எப்படிப் பயன்படுத்தப்படுகிறது, அதில் உள்ள தாவரங்கள் எப்படிப்பட்டவை, அதன் நீரியியல் தன்மை என்ன, அந்த சுற்றுவட்டாரம் எப்படிப்பட்டது என்ற ஆவணங்களை இனி உள்ளாட்சி மன்றங்கள் தயாரித்து தங்கள் பொறுப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். சுற்றுச்சூழலைக் காக்கும் பெரும் பொறுப்பை அந்தந்த உள்ளாட்சி மன்றங்களும் பகிர்ந்துகொள்ள வேண்டும். நிலங்களின் தன்மைக்கேற்ற பொருத்தமான மேலாண்மை நடைமுறைகளை உள்ளாட்சி மன்றங்கள் பரிந்துரைக்கலாம். சுற்றுச்சூழலைக் காக்க ‘ஸ்மார்ட்போன்’ போன்ற நவீனத் தகவல் தொடர்பு சாதனங்களைக்கூட மக்களும் உள்ளாட்சி அமைப்புகளும் பயன்படுத்த வேண்டும். உள்ளூர் நிலப்பகுதிக்கும் பருவங்களுக்கும் ஏற்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வளர்ச்சி திட்டங்களை வகுப்பதில் மக்களும் உதவ வேண்டும்.

1990—களில் கேரளத்தில் தொடங்கப்பட்ட ‘மக்கள் திட்ட இயக்கம்’ போல அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு—வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்போதைய நிதியமைச்சரான தாமஸ் ஐசக் இதை அப்போது தலைமையேற்று நடத்தினார். இதை ஐசக் மீண்டும் புதுப்பிக்க வேண்டும். அதன் மூலம் மட்டுமே கேரள மக்களால் பழைய இயற்கைச் சூழலை மறு உருவாக்கம் செய்வதுடன், காப்பாற்றவும் முடியும். கேரள அரசு இத்தகைய முற்போக்கான அணுகுமுறையைக் கையாள வேண்டும். அதன் மூலம்தான் எதிர்காலத்தில் இதைப்போன்ற அதிக மழை வெள்ளப் பெருக்கு ஏற்படும்போது முழுக்க இல்லாவிட்டாலும், ஓரளவுக்காவது சேதங்களைக் குறைத்துக்கொள்ள முடியும்.






## நான்கு நாளில் சிறுநீரக்கல் கரைக்க சித்தர்கள் கூறும் அற்புத மூலிகை




கல்தோன்றி, மண்தோன்றி மனிதன் தோன்றிய சமயத்தில் கடவுளும் சித்தர்களும் ஞானிகளும் மனிதர்களுக்கு உண்டாகக் கூடிய மருத்துவ முறைகளை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைய நாட்களில் சிறுநீரகக் கல் பிரச்னை பொதுவாக நிறைய பேருக்கு வருகிறது. இது பெரும்பாலும் ஆண்களுக்கு மட்டுமே இருந்த பிரச்சினை போய் இப்போது பெண்களுக்குமே வருகிறது.

சிறுநீரகக் கல் மனிதர்களுடைய வியர்வை, சாப்பிடும் உணவுகளில் உள்ள அதிகப்படியான உப்பு ஆகியவை மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்களில் சென்று படிந்து விட்டால் தான் அதை நாம் சிறுநீரகக் கல் என்று குறிப்பிடுகிறோம். அந்த கல்லை கண்ட மருந்துகளையெல்லாம் சாப்பிடக் கூடாது. சித்தர்கள் சொல்லும் அற்புத இயற்கை மூலிகைகள் மூலம் கரைக்க முயற்சி செய்ய வேண்டும். அதுதான் நமக்கு நிரந்தரப் பயன் கிடைக்கும்.

மூலிகை மருந்து பொதுவாக சிறுநீரகக் கல்லை கரைப்பதற்கு நமக்குத் தெரிந்த பிரபலமான மருந்து வாழைத்தண்டு சாறு. ஆனால் வாழைச்சாறு அதிகமாகக் குடித்தால், உடலில் உள்ள நீரை முழுக்க முழுக்க உறிஞ்சி எடுத்துவிடும். அதைவிட எளிமையான மருத்துவ மூலிகை ஒன்று உண்டு. இந்த மூலிகை மூலமாக ஒரு பைசா செலவு இல்லாமல் சிறுநீரகக் கல்லை அடியோடு கரைத்துவிட முடியும்.

யானை நெருஞ்சி எத்தகைய கல்லையும் கரைத்துவிடும் அற்புத மூலிகையான சித்தர்கள் சொல்வது இந்த யானை நெருஞ்சி செடி தான். இது எப்பேர்ப்பட்ட கல்லடைப்பையும் கரைக்கும். இந்த செடிக்கு ஏன் இந்த பெயர் வந்தது என்று தெரியுமா?

யானையின் கால் மிகவும் தடிமனனானது. முள்ளெல்லாம் ஒன்றுமே செய்ய முடியாது.




ஆனால் இந்த முள்ளானது யானையின் காலில் பட்டுவிட்டால், யானையால் எழுந்திருக்க முடியாமல் படுத்துக் கொள்ளும். மற்றொரு விளக்கமும் உண்டு. அதேபோல ஆனானப்பட்ட நோய்களையும் தீர்க்கும் மூலிகை என்றும் பெயர்.

எப்படி சாப்பிட வேண்டும்? முதல் நாள் சமைத்த அரிசி சாதத்தில் தண்ணீர் ஊற்றி வைத்து நீராகாரம் சாப்பிடுவது நம் முன்னோர்களின் காலை உணவு. ஆனால் இன்றோ நமக்கு அது கீழ்தரமான உணவாக கருதி விட்டுவிட்டோம். இதில் உள்ள அற்புதமே வேறு. இனியாவது அதை அலச அலச நீராகாரம் கொஞ்சம் திக்காகிக் கொண்டே வரும். ஓரளவுக்கு திக்கானதும் அப்படியே 20 நிமிடங்கள் வரையிலும் வைத்திருக்க வேண்டும். அப்படி வைத்திருந்து பின் குடிக்க குடிக்க வேண்டும். இரவிலேயும் இந்த இலையை நீராகாரத்தில் போட்டு வைத்துவிட்டு, காலையில் வெறும் வயிற்றில் குடிக்கவும் செய்யலாம்.

அறிகுறி நான்கு நாட்கள் குடித்து வந்தால் போதும். சிறுநீரகக் கல் வெளியேறிவிடும். இதை எப்படி நாம் தெரிந்து கொள்வது என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம். சிறுநீர் கழிக்கும்போது





உணருங்கள்.

தேவையான பொருள்கள் ஆனை நெருஞ்சி செடி 1 பழைய சாத நீராகாரம் 1 கப்

செய்முறை ஒரு கப் பழைய சாதத்துக்கு நீராகாரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். அதில் ஆனை நெருஞ்சி செடியை வேரை வெட்டி விட்டு, தண்டோடு வெட்டி வைத்துக் கொண்டு, நன்கு சுத்தம் செய்து, அந்த நீராகாரத்தில் விட்டு நன்கு அலசி விட வேண்டும். நன்கு இந்த செடியை

சிறுநீர் கடுப்பு உண்டாகும். அப்போது கல் கெரைந்து வெளியேறுகிறது என்று அர்த்தம். நான்கு நாட்களில் கிட்டதட்ட 18 ஊீ அளவுள்ள கல் வரையிலும் கரைந்து விடுமாம். மேலும் அதிகமாக நீர் அருந்துதல், இளநீர், பழச்சாறுகள் போன்றவற்றை அருந்துதல் போன்றவை சிறுநீரக கற்களை குறைக்க உதவியாக இருக்கும். சிறுநீரக கல் கோளாறு உள்ளவர்கள் மேலும் என்னென்ன உணவுகள் சாப்பிட வேண்டும் என்பதை தொடர்ந்து காணலாம்.

காரட், பாகற்காய் இதில் பொட்டாசியம், மெக்னீஷியமும் அதிகம் உள்ளன. இவை சிறுசீரகக் கற்களின் முன்னோடிகளான படிகங்களைக் கரைத்து படிய விடாமல் தடுக்கும் சக்தியுடையது. கேரட்,பாகற்காய்களில் பொதுவாக சிறுநீரகக் கற்களின் படிகங்களை தடுக்கும் பலவித தாது உப்புக்கள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.




வாழைப்பழம், எலுமிச்சை: இவற்றில் விட்டமின் பி6 சத்தும், சிட்ரேட் (நீவீமீக்ஷீணீமீமீ) சத்தும் அதிகம் உள்ளன. இவை சிறுநீரகக் கற்களின் ஒரு முக்கிய அங்கமான ஆக்சலேட் (ளிஜ்ணீறீணீமீமீ) என்ற இரசாயனத்துடன் சேர்த்து அதைச் சிதைத்து படிய விடாமல் தடுத்து சிறுநீரகக் கற்கள் உருவாகாமல் தடுக்க வல்லவை.

அன்னாச்சி பழம்: இதில் சிறுநீரக கற்களின் கருவாக இருக்கும் ஃபைப்ரின்(திவீதீக்ஷீவீஸீ) எனப்படும் சத்தை சிதைக்கும் நொதிகள் (ணிஸீ—க்ஷ்ஹ்னீமீவ) உள்ளன. இது சிறுநீரக கற்களை கறைக்கும் தன்மை கொண்டுள்ளது.

கொள்ளு, பாதாம் பருப்பு, பார்லி ஓட்ஸ் கொள்ளில் உள்ள சில நீர்ப் பொருட்கள் சிறுநீரகக் கற்கள் உருவாவதை தடுக்கும் திறன் கொண்டவை. நார்ச்சத்து உள்ள உணவுகள். பாதாம் பருப்பு, பார்லி ஓட்ஸ் போன்றவற்றில் சிறுநீரக கற்கள் வராமல் தடுக்கும் பலவித சத்துகள் உள்ளன. பொதுவாக சில காய்கறிகள், பழங்களைத் தவிர தினமும் உணவில் நார்சத்து உள்ள காய்கறிகள், பழங்கள், முழு தானியங்களை அதிகமாக சேர்த்துக் கொள்வது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது. கற்கள் வருவதையும் தடுக்கும்.

உப்பு: உணவில் உப்பையும் பெருமளவு குறைத்துக் கொள்வது சிறுநீரில் கால்சியம் சத்து வெளியாவதை தடுத்து சிறுநீரகக் கற்கள் வரும் வாய்ப்பை குறைப்பதாக இப்போது கண்டறியப்பட்டுள்ளது.

இளநீர் சிறுநீரக கல் பிரச்சனை உள்ளவர்கள் இளநீர் அதிகமாக அருந்த வேண்டியது அவசியமாகும். தினமும் இரண்டு இளநீராவது அருந்தலாம். அவர்கள் பழச்சாறு போன்றவற்றை கண்டிப்பாக அருந்த வேண்டும். சிட்ரஸ் பழச்சாறு, வாழைத்தண்டு சாறு போன்றவற்றை அருந்துவது சிறந்தது.

வெயில் வெயிலில் அலையும்போதும் வேலை செய்யும்போதும் உடலில் வெயில் தோற்றுவிக்கும் நீர் வறட்சிதான் சிறுநீரகக் கற்கள் உருவாகத் துணைபுரிகிறது. எனவே, கோடையில் 2




மணி நேரத்துக்கு மேல் தொடர்ந்து வெயிலில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். பகல்



12 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வெளியில் செல்லாமல் இருப்பது நல்லது.


புளி, காரம் உணவில் காரம், புளி, மசாலாவைக் குறைத்துக்கொள்ள வேண்டும். கேழ்வரகு, கீரைகள், கருணைக்கிழங்கு, வெள்ளைப்பூண்டு, முள்ளங்கி, மீன், இறால், நண்டு, முட்டையின் வெள்ளைக்கரு, பால் மற்றும் பாலில் தயாரிக்கப்பட்ட உணவுகளான தயிர், வெண்ணெய், நெய், பாலாடைக்கட்டி, பால்கோவா, பால் அல்வா போன்ற உணவு களைத் தவிருங்கள். இவற்றில் கால்சியம் அதிகம். கால்சியம் மாத்திரைகளையும் சாப்பிடக்கூடாது.

உலர் பழங்கள் காபி, தேநீர், பிளாக் டீ, கோலிசோடா போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது. கோக் பானங்கள், இதர மென்பானங்கள், ஐஸ்க்ரீம், சாக்லெட் ஆகவே ஆகாது. காரணம், இவற்றில் பாஸ்பேட் மிகுந்துள்ளது. இதுபோல் உலர் பழங்கள், பாதாம் பருப்பு, வாதாம் பருப்பு, முந்திரிப் பருப்பு, பீட்ரூட், சோயாபீன்ஸ், சேனைக்கிழங்கு, பசலைக் கீரையைச் சாப்பிட வேண்டாம்.

# ஏட்டுச்

## ஏட்டில் மட்டுமே ஏற்றம் பெறும் பெண்கள்

பாலியல் வன்முறைகளும், கட்டாயக் காதல் வற்புறுத்தல்களும், இணங்காவிடில் பெண்களைக் கொல்ல முற்படும் அக்கிரமப் போக்குகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. சின்னஞ் சிறு குழந்தைகள் தொடங்கி எண்பது கடந்த கிழவிகளைக்கூட விட்டு வைக்காத ஓநாய்கள் பற்றிய செய்திகள் நன்மக்களைப் பதற்றமுறச் செய்து கொண்டிருக்கின்றன. இது சமுதாயச் சீரழிவு என்று பத்திரிகைகள் புலம்புகின்றன. ஆனால் இது சமுதாயச் சீரழிவு ஆகாது. இது திருந்த மறுக்கும் ஆண்மக்களின் சீரழிவேயாகும். பெண் என்பவள் தங்களின் இன்பத்துக்காக மட்டுமே படைக்கப்பட்டவள் எனும் ஆணாதிக்கப் போக்கிலிருந்து ஆண்கள் இன்னமும் விடுபடவே இல்லை என்பதையே பாலியல் வன்முறைகள் உணர்த்துகின்றன. இல்லாவிடில், அந்தப் பெண் எதிர்ப்புக்காட்டி மிரட்டாமல் இருந்திருந்தால் அவளைக் கொன்றிருக்க மாட்டோம்‘ என்று அண்மையில் ஒருவன் திருவாய் மலர்ந்திருப்பானா?




ஆண்களின் சீரழிவை ஒட்டுமொத்தச் சமுதாயச் சீரழிவு என்று விமர்சித்துப் புலம்பிக்கொண்டிருப்பதோடு பத்திரிகை ஆசிரியர்கள் நிறுத்துவதில்லை. இந்தியாவில் இப்படிப்பட்ட கேடுகள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருந்து வருவதாகவும், பிற நாடுகளில் இவை மிக அதிகம் என்றும், ஏதோ உலகத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் போய் இத்தகைய ஆண்களின் பாலியல் வன்முறைகளை நேரில் பார்த்துக் கணக்கு எடுத்துவைத்திருப்பது போலவும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள்!

இத்தோடு இவர்களின் புலம்பல் நிற்பதில்லை. உலக நாடுகளிலேயே இந்தியாதான் பெண்களைத் தெய்வமாக மதித்துப் போற்றுவதாகவும் பெரும்பாலான பிற நாடுகளில் ஆண்தெய்வங்கள்

# சுரைக்காய்

## ஜோதிர்லதா கிரிஜா

மட்டுமே இருப்பதாகவும் எழுதிவருகிறார்கள்.


கேரளாவில் உள்ள திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் கடந்த 300 ஆண்டுகளுக்கும் மேலாகக் கொண்டாடப்பட்டு வரும் நவராத்திரி விழாவின் நாயகி தேவி — பெண். ஆனால், கோவிலிலும் அரண்மனை வளாகத்திலும் ஏன், வெளியில் உள்ள மண்டபத்திலும் கூட இவ்விழாவின் போது பெண்களைப் பார்க்கவே முடியாது. வெகு தொலைவில் இருந்துகொண்டு




இசையை ரசிக்கலாம். அவ்வளவுதான்!

தேவி ஒரு பெண். அவளுக்கு நடக்கும் விழாவில் பெண்கள் ஏன் கலந்துகொள்ளுவதில்லை?' எனும் கேள்வி சாஸ்திரீய சங்கீதத்தைக் கற்கத் தொடங்கிய ஒரு 16 வயதுச் சிறுவனுக்குத் தோன்றியது. அதை மாற்ற அவன் முனைந்தபோது அரச குடும்பத்திலிருந்தோ, வெளியிலிருந்தோ ஒருவர் கூட அவனுக்கு ஆதரவு அளிக்கவில்லை. தேவிக்காக நடக்கும் விழாவில் பெண்கள் கலந்துகொண்டே ஆகவேண்டும்; பெண் இசைக்கலைஞர்களும் பங்கேற்கவேண்டும் என்று தொடர்ந்து 22 ஆண்டுகள் அவர் போராடினார். 2006 இல் அவருக்கு வெற்றி கிட்டியது. திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பாடல் ஆசிரியை 86 வயது பாரசால பொன்னம்மாவை இவ்விழாவில் பாட வைத்தார்.

இந்தப்போராளி திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் புகழ் பெற்ற மன்னரான சுவாதித் திருநாள் ராமவர்மாவின் வழியில் வந்த பிரபல வீணை, மற்றும் கர்நாடக இசைக்கலைஞர் அஸ்வதி திருநாள் ராமவர்மா. அரச வம்சத்தினர் எனும் உணர்வே தமக்கு இருந்ததில்லை என்றும், தம்மை எப்போதும் ஒரு பாடகராக மட்டுமே




தாம் கருதி வந்துள்ளதாகவும் இவர் கூறியுள்ளார். இவர் இசைமேதை பாலமுரளிகிருஷ்ணாவிடம் 18 ஆண்டுகள் இசை பயின்றார்.

பெண்மையைப் போற்றுவதெல்லாம் ஏட்டில் மட்டுமே உள்ளது. நடைமுறையில் துளியும் இல்லை. இருந்தால், இந்துமதப் பெண்கள் பத்துக் குழந்தைகள் பெற வேண்டும் என்று சொல்லும் இரக்கமின்மை அரசியல் தலைவர்களிடம் இருக்குமா? (அண்மையில் ஒருவர் ஐந்து என்று கூறியுள்ளார்.) பிள்ளைகளுக்குச் சோறு போடுவதும், அவர்களைப் படிக்க வைப்பதும் பெரும் பாடாகிவிடும் என்பதுதான் ஆண்களின் கவலையாக இருக்கிறதே தவிர, ஒவ்வொரு பிள்ளைப்பேற்றின் போதும் உயிர் போய் உயிர் வரும் — அல்லது வராமலே போகும் — தாயின் நிலைபற்றி சிந்திப்பதே இல்லை. ஆண்களைப் பொருத்தவரை, அதிகப் பிள்ளைகள் இருப்பது பொருளாதாரப் பிரச்னை மட்டுமே. இப்படிப்பட்ட ஆண் அறிவுஜீவிகளும், அரசியல்வாதிகளும் நிறைந்துள்ள நாட்டில் பெண்களாவது தெய்வங்களாய்ப் போற்றப்படுவதாவது!


புராண காலத்திலிருந்தே இந்தியாவில் பெண்கள் துதிக்கப்பட்டு வருகிறார்களாமே! என்ன பிதற்றல் இது! இது உண்மையானால், கைம்பெண்களை உடன்கட்டை ஏற்றி எரிக்கும் கொடூர வழக்கம் இருந்திருக்குமா? ராஜஸ்தானில், சில ஆண்டுகளுக்கு முன்னர், ரூப் கன்வர் எனும் பெண் உடன்கட்டையில் ஏற்றி எரிக்கப்பட்டது பற்றிய சமூக ஆர்வலரின் கேள்விக்கு, ஒரு பெண் தானாக முன்வந்து உடன்கட்டை ஏறினால் அதைத் தடுக்கக்கூடாது என்று பிதற்றுவாரா இந்து மதத் தலைவர் ஒருவர்?

இதற்கும் பாலியல் வன்முறைக்கும் என்ன தொடர்பு என்று நினைக்க வேண்டாம். பெண் என்பவள் ஆணின் அடிமை என்னும் நினைப்பே இது போன்ற நிகழ்வுகளின் அடிப்படை. தனது அண்ணனின் மனைவி வலுக்கட்டாயமாய் உடன்கட்டை ஏற்றப்பட்ட கொடுமையைத் தடுக்க முடியாது அன்று மனம் வெதும்பிய சிறுவன் ராஜா ராம்மோகன் ராய், பின்னாளில் வெள்ளைக்கார வைசிராய் லார்ட் வில்லியம் பெண்ட்டிங்கின் உதவியுடன் சட்டமியற்றி அதைத் தடுத்திராவிட்டால் இன்றளவும் கூட அது தொடர்ந்துகொண்டிருக்குமோ என்னவோ!

தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் நாத்திகம் பெருமளவில் தலைஎடுத்துவிட்டதாலேயே இத்தகைய சீரழிவுகள் நேர்ந்துள்ளன என்றும் சிலர் விமர்சிக்கிறார்கள். அதாவது பாலியல் வன்முறையாளர்கள் அனைவருமே நாத்திகர்கள் என்பதைப்போல. அதே சமயம் நாத்திகத்தைப் பரப்ப எவ்வளவுதான் முயன்றாலும் நாளுக்கு நாள் கோயிலுக்குப் போகிறவர்களின் கூட்டம் பெருகிக்கொண்டுதான் இருக்கிறது என்று நாத்திகர்களைக் கிண்டலடித்தும் இவர்கள் மகிழ்கிறார்கள். என்னே முரண்பாடு!

முன்பெல்லாம் நன்னெறி வகுப்புஎன்ற பெயரில் கல்விக்கூடங்களில் நீதி போதனைகள் பற்றிய வகுப்பு நடக்கும். இப்போது அது அறவே இல்லையாமே? முன்பு இருந்த இவ்வகுப்புகளில் கூடப் பெண்ணடிமைத்தனமே மிகுதியாய் போதிக்கப்பட்டு வந்தது. (அருந்ததி, நளாயினி என்றெல்லாம் உதாரணங்கள் காட்டி பெண்கள் இளிச்சவாய்களாய்' இருக்கவேண்டும் என்றே கற்பிக்கப்பட்டது.) தெருக்களில் உள்ள திரைப்பட ஆபாச விளம்பரங்கள், சில பத்திரிகைகளில் வரும் முக்கால் நிர்வாணப் படங்கள், தொலைக்காட்சி அசிங்கங்கள் ஆகியவற்றைக் காவல்துறை ஏன் வளரவிட்டுக் கொண்டிருக்கிறது? அது

சார்ந்த சட்டங்களை ஏன் செயல்படுத்துவதே இல்லை? தொலைக்காட்சிக்குத் தணிக்கையே இல்லையாமே? அது ஏன்?




அத்தனை ஆண்களும் பாலியல் வன்முறையாளர்களோ, சிறுமிகளிடம் வம்பு செய்பவர்களோ அல்லர். ஆனால் அப்படிபட்டவர்கள் பெருகுவதற்கான அடித்தளமே அமைக்கப்பட்டு வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன் ராமநாதபுரம் கற்பழிப்பு வழக்கில் ஒரு நீதிபதி, அந்தப் பெண் எதிர்ப்புக்காட்டியதற்கான அடையாளங்கள் இல்லை. எனவே அவளது சம்மதத்துடன்தான் பாலியல் வன்முறை நிகழ்ந்துள்ளது' என்று கூறி வழக்கையே தள்ளுபடி செய்தாரே? நினைவிருக்கிறதா?

வீட்டுக்குள் அதிரடியாய்ப் புகும் கொள்ளையர்கள் கத்தியைக் காட்டி ஆண்களை மிரட்டி அவர்களிடமிருந்து அலமாரிச் சாவியை வாங்கிக்கொண்டு அதைத் திறந்து பொன்னையும் பொருளையும் வாரிச்செல்வதுண்டே? ஆண்கள் சம்மதித்துத்தான் கொள்ளை நடந்தது' என்று காவல்துறை வழக்கை ஏற்க மறுத்தால் அது சரியே என்பதை ஒப்புக்கொள்ளுவோமா? பெண் அச்சத்தில் உறைந்து போகக் கூடாதா? இதைக்கூடப் புரிந்து கொள்ளாதவர்களா நீதிபதிகள்?

பல்லாண்டுகள் முன் ஒரு பத்திரிகை கருக்கலைப்புப் பற்றிய கலந்துரையாடலை நிகழ்த்தியது. அதில் கலந்துகொண்ட அனைவருமே ஆண்கள். மருந்துக்குக்கூட ஒரு பெண் அதில் இல்லை! இது எப்படி இருக்கு? இந்தக் காரணங்களால் தான் மகளிர் இட ஒதுக்கீடு கேட்கிறார்கள்.

பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்தாலும் அதனால் பயனில்லை. அவர்களின் கணவன்மார்கள்தான் திரைமறைவு அதிகாரிகளாக இருந்து அவர்களை ஆட்டி வைப்பார்கள். எனவே இட ஒதுக்கீடு கூடாது' என்பது ஒரு சாராரின் வாதம். இருக்கட்டுமே! ஆண்களின் விருப்பமே அதுதானே? ஆனால், எல்லாப் பெண்களையும் அப்படி ஆட்டுவிக்க இயலுமா? தமிழ்நாட்டில் ஒரு பஞ்சாயத்துத் தலைவி தன் கணவர் தன் நடவடிக்கைகளில் தலையிடுவதாய்ப் புகார் செய்தாரே! ஏதோ ஐந்துக்கு இரண்டாவது தேறும்தானே?

ஒரு நீதிபதியே தவறிழைப்பதைத் தட்டிக்கேட்க நாடாளுமன்றத்திலும், சட்டப்பேரவைகளிலும் பெண் உறுப்பினர்கள் இருக்க வேண்டாமா? எனவே கல்விச் சீர்திருத்தம், ஆன்மிகம் ஆகியவை மட்டுமே இந்தச் சீரழிவைச் சரிசெய்யப் போதுமானவை அல்ல. சட்டப்பேரவைகளிலும், நாடாளுமன்றத்திலும் பெண்களின் பங்களிப்பு இருந்தாக வேண்டும்.

நியாயமான எண்ணங்களை மாணவர்களின் உள்ளங்களில் விதைக்கும் வண்ணமாய் நம் கல்விமுறையையும் அடியோடு மாற்றி அமைப்பது அடுத்த தலைமுறை மாணவர்களையேனும் திருத்தக்கூடும்.




# தமிழ்

## நற்றமிழரின் நாடித்துடிப்பு


# 2018 CALENDAR

2018

### JANUARY




### FEBRUARY



### MARCH



### APRIL



### MAY




### JUNE




### JULY



### AUGUST



### SEPTEMBER



### OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




editor@ithamil.com


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
• இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
• ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡളി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ઢોસા નું ખીરું
इडली/ दोसा आटा